
2014, November 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014



# தெற்காசியாவில் ஒரு கெடுபிடி யுத்தம்

விக்னேஸ்வர விஜயம்

ராஜபக்ஷ மூன்றாவது
பதவிக்காலத்திற்கு தெரிவானால்...?

புவிசார் அரசியல் ஆட்டத்தின்
பகடைக்காயாகிவிட்ட மீனவர் பிரச்சினை

தலைவர்களின் சிந்தனைகளும்
தமிழகம் காணும் காட்சிகளும்

செல்வந்த நாடுகளில் அதிகரிக்கும்
ஏற்றத்தாழ்வுகளும்
ஜனநாயகத்தின் சிதைவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA................IN₹ | 50.00 | CANADA........CAN$ | 10.00 | USA..........US$ | 10.00 |
| SRI LANKA....SLR | 100.00 | AUSTRALIA...AUS$ | 10.00 | UK............GB£ | 5.00 |
| SINGAPORE...SG$ | 14.00 | SWISS.............CHF | 10.00 | EUROPE..EU€ | 5.00 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS




**Subscribe Today**


**THE HINDU**

INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781

ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அனைத்து மதங்களும் பண்பாடுகளும் முழுச் சுதந்திரத்துடனும் ஒன்றுபட்டும் விளங்கக்கூடிய ஒரு மதச்சார்பற்ற நாடாக இந்தியா விளங்க வேண்டும் என்பதே என் நம்பிக்கை. இந்தியா, அவள் காலங்காலமாக வளர்த்து வந்த பன்மைப் பண்பாட்டைக் காத்து வந்தால்தான் சீரும் சிறப்புடனும் விளங்க முடியும் என நான் நம்புகிறேன். எனினும் இது நடக்குமா, இல்லையா என்கிற ஐயம் அவ்வப்போது என்னை ஆட்டுவிக்கிறது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். எனினும் அந்த எண்ணத்திற்குப் பின்னால், நான் உணர்வது என்னவெனில், இப்போது உடனடியாக என்ன நிகழ்ந்தபோதும், இன்றில்லாவிட்டால் நாளையேனும் தற்புிதலும், பெருமையும் மிக்க அந்தப் பாதையில் தான் இந்தியா செல்ல நேரிடும் என்பதுதான். எனவே, இந்திய முஸ்லிம்களும், பிற மதப் பிரிவினரும் தம்மை வளர்த்துக்கொள்ள முழுமையான சுதந்திரமும் வாய்ப்பும் இருக்க வேண்டும் எனப் பெருவிருப்பு கொண்டுள்ளேன். இந்து அல்லது வேறெந்த வகுப்புவாதத்தையும் நான் கடுமையாக வெறுக்கிறேன்...?.

1948 ஜூலை 8 **ஜவஹர்லால் நேரு** போபால் நவாப்பிற்கு எழுதிய கடிதத்திலிருந்து

(14 நவம்பர் 2014 நேருவின் 125ஆவது பிறந்ததினம் அனுஷ்டிக்கப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமகாலம்
2014, நவம்பர் 16 - 30
பக்கங்கள் - 68







12 தெற்காசியாவில் ஒரு கெடுபிடி யுத்தம்

18 மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது பதவிக்காலத்திற்கு தெரிவானால்...?

22 விக்னேஸ்வர விஜயம்

25 ஜனாதிபதி தேர்தலில் விருப்புவாக்கு எண்ணிக்கை சாத்தியப்பாடுகள்

28 செல்வந்த நாடுகளில் அதிகரிக்கும் ஏற்றத்தாழ்வுகளும் ஜனநாயகத்தின் சிதைவும்

34 புவிசார் அரசியல் ஆட்டத்தின் பகடைக்காயாகி விட்ட மீனவர் பிரச்சினை


38 ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம்கள் கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறை


40 தலைவர்களின் சிந்தனைகளும் தமிழகம் காணும் காட்சிகளும்


47 அமெரிக்காவிற்குப் போட்டியான வல்லரசு உலகிற்கு இன்று அவசியத்தேவை

50 மாபெரும் விவாதமும் அதன் விளைவுகளும்

54 தமிழ் சினிமா- காலமும் கோலமும்







*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# ஜனாதிபதித் தேர்தலும் இனவாத அரசியலும்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே போட்டியிட்ட இரு ஜனாதிபதி தேர்தல்களின் போதும் பிரசாரங்களுக்கு கையாண்ட அணுகுமுறைகள் சிறுபான்மையினத்தவர்களுக்கு குறிப்பாக, தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வுகளை சிங்களவர்கள் மத்தியில் தூண்டிவிடுபவையாகவே அமைந்திருந்தன. 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பிரசாரங்களை அவர் முன்னெடுத்தார். பிறகு உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்ததையடுத்து 2010 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போர் வெற்றியைக் காட்சிப்படுத்தி இராணுவவாத அரசியல் சிந்தனைகளின் அடிப்படையில் பிரசாரங்களை ராஜபக்ஷ முன்னெடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இப்போது மூன்றாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆணையைப் பெறுவதற்கெனக் கூறிக்கொண்டு 2015 முற்பகுதியில் ராஜபக்ஷ நடத்தவிருக்கும் தேர்தலிலும் அவரது தரப்பிலான பிரசாரங்கள் இலங்கைச் சமுதாயத்தில் காணப்படுகின்ற இனப்பிளவை மேலும் ஆழப்படுத்தி, சிறுபான்மையினத்தவர்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளுக்கு விரோதமான உணர்வுகளை சிங்கள மக்கள் மத்தியில் மேலும் உக்கிரமடைய வைக்கக்கூடியவையாக அமையப் போகின்றன என்பதற்கான தெளிவான அறிகுறிகளை எம்மால் காணமுடிகிறது. அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ராஜபக்ஷ கிளிநொச்சியில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றியபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு முன்வரக்கூடிய முதல் நபராக தானே விளங்குவார் என்று கூறியிருந்தார். அவ்வாறு கூறியதன் மூலமாக தனது அடுத்த தேர்தல் பிரசாரங்களின் தொனிப்பொருள் எத்தகையதாக அமையப்போகின்றது என்பதை அவர் முழு நாட்டுக்கும் உணர்த்தியிருந்தார்.


ஜனாதிபதி எடுத்துக்கொடுத்த அந்த அடியைப் பின்பற்றி இன்று தென்னிலங்கையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களும் அவர்களின் நேச சக்திகளும் பரப்புரைகளைத் தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். எதிரணிக் கட்சிகள் புலம்பெயர் தமிழர்களின் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துக்கு வசதியாக அமையக்கூடிய அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக இவர்கள் குற்றஞ்சாட்ட ஆரம்பித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. நாட்டில் மீண்டும் பிரிவினைவாதப் போர் தலைதூக்காமல் இருக்க வேண்டுமானால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை தொடரவேண்டும் என்று மாத்திரமல்ல, மகிந்த ராஜபக்ஷவே தொடர்ந்தும் ஜனாதிபதியாக ஆட்சியதிகாரத்தில் இருக்கவேண்டும் என்று இவர்கள் நாட்டு மக்களுக்கு கூறுகிறார்கள். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் வேலைத் திட்டத்தை முன்வைத்து தேர்தலில் பொதுவேட்பாளரைக் களமிறக்குவதற்கு எதிரணிக் கட்சிகள் வகுத்திருக்கின்ற தந்திரோபாயத்தை முறியடிக்க ஆளும் கட்சியினர் வேறுவழியின்றி மீண்டும் இனவாத அரசியலையே தீவிரப்படுத்துவதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள்.


உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு இலங்கைத் தமிழ் மக்களினால் ஜனநாயகரீதியில் தெரிவுசெய்யப்பட்டிருக்கக்கூடிய அவர்களின் சட்டபூர்வமான அரசியல் பிரதிநிதிகள் தனிநாட்டுக்கோரிக்கை பற்றிப் பேசுவதேயில்லை. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசியல் அணி என்று

*(59ஆம் பக்கம் பார்க்க....)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்










## அரசியல் அறிவூட்டல் பணி

தற்போதைய ஜனாதிபதி மூன்றாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆணையைக் கேட்டு தேர்தலொன்றை நடத்துவதற்கு மேற்கொள்கின்ற ஏற்பாடுகளின் விளைவாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ எழுதிய பல கட்டுரைகளை சமகாலம் சஞ்சிகை தொடர்ச்சியாக பிரசுரித்து வந்திருக்கிறது. இடதுசாரிச் சிந்தனை கொண்ட ஒரு அரசியல் அறிஞரின் கருத்துகள் தமிழ் வாசகர்களினால் ஏனைய பத்திரிகைகளிலோ, சஞ்சிகைகளிலோ வாசிக்க முடியாதவையாகும். அந்தவகையில் 'சமகாலம்' அரசியல் அறிவூட்டலில் தமிழ் மக்களுக்குச் செய்துவருகின்ற பணி மெச்சுவதற்குரியதாகும். தொடரட்டும் அந்தக் கனதியான பணி.

கயல்விழி கனகேந்திரன்,
கிளிநொச்சி.

## புலிப் பிராந்தி

கடந்த 'சமகாலம்' இதழில் குசல் பெரேரா எழுதிய 'புலிப் பிராந்தி காட்டி மக்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது' என்ற தலைப்பிலான கட்டுரையைப் படித்தேன். புலிகள் மீண்டும் தங்களை அணிதிரட்டும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறார்கள் என்றும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் உதவியுடன் ஆயுதப் போராட்டத்தை அவர்கள் மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது என்றும் அரசாங்கம் சிங்கள மக்களுக்குக் கூறி பூச்சாண்டி காட்டுகின்ற அரசாங்கத்தின் விசமத்தனமான பிரசாரச் செயற்பாடுகளை நியாயப்படுத்தி எழுதுகின்ற பெருவாரியான அரசியல் விமர்சகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் குசல் பெரேரா போன்றவர்கள் யதார்த்த நிலையை துணிச்சலுடன் எழுதுவது பெரிதும் வரவேற்கத்தக்கது.

ஆனால், அவரைப் போன்ற நேர்மையும் துணிச்சலும் கொண்ட சிங்கள புத்தி ஜீவிகளின் கருத்துகள் எந்தளவுக்கு சிங்கள மக்களைச் சென்றடைகின்றன என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியவில்லை.

சிவானந்தம் பரமேஸ்வரன்,
கொடிகாமம்.

## சர்வதேச அரசியல் விவகாரங்கள்

சமகாலம் சஞ்சிகையில் வெளியாகின்ற சர்வதேச அரசியல் விவகாரங்கள் தொடர்பான கட்டுரைகள் மிகவும் தரமானவையாகவும் பரந்த வீச்சைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. அண்மைக்காலத்தில் இடம்பெற்ற ஸ்கொட்லாந்து சர்வஜன வாக்கெ

## உலகத் திரைப்படவிழா

இலங்கையில் நடந்த முதலாவது உலகத் திரைப்பட விழா 2014 இல் திரையிடப்பட்ட சில படங்கள் குறித்து அ.யேசுராசா செய்த விமர்சனங்கள் கடந்த இரு இதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. நல்ல கனதியான பணி. யேசுராசா போன்ற தரமான விமர்சகர்கள், படைப்பாளிகளின் ஆக்கங்கள் அடிக்கடி வெளியானால் சமகாலம் மேலும் கனதியானதாக அமையும்.

செல்லையா குமரகுருபரன்,
பருத்தித்துறை

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப்பு மற்றும் மத்திய கிழக்கு காசா போர் பற்றிய சமகாலம் வெளியிட்ட கட்டுரைகள் போன்று இலங்கையின் எந்தவொரு தமிழ்ப் பத்திரிகையிலோ, சஞ்சிகையிலோ வெளிவந்ததை நான் காணவில்லை.

சர்வதேச அரசியல் விவகாரங்களில் சான்று வலிமையுடன் கருத்துரைக்கக்கூடிய ஆற்றலும் வல்லமையும் புலமையும் கொண்ட அவதானிகளினதும் ஆய்வாளர்களினதும் கட்டுரைகளை தெரிவு செய்வதில் சமகாலம் ஆசிரியர் குழு வெளிக்காட்டுகின்ற திறமையையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

மரியதாஸ் ரூபன்,
கரவெட்டி.

## பென் பிரட்லீ

வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை வாட்டர் கேட் ஊழல் விவகாரத்தை அம்பலப்படுத்திய காலகட்டத்தில் அதன் ஆசிரியராக இருந்த பென் பிரட்லீயின் மறைவு குறித்து கடந்த சமகாலம் இதழில் வெளியான நினைவுப் பரவல் அந்த பத்திரிகையாளருக்கு செய்யப்பட்ட மிகவும் பொருத்தமான மரியாதையாகும்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் எவ்வளவுதான் பலம் பொருந்தியவர்களாக இருந்தாலும், உண்மையைக் கண்டறிவதற்கான துணிச்சலான செயற்பாடுகள் மூலமாக அவர்களைப் பதவியில் இருந்து தூக்கியெறிந்து நேர்மையை நிலைநாட்ட முடியும் என்பதற்கு பென்பிரட்லீ ஒப்புயர்வற்ற ஒரு உதாரணமாகத் திகழ்கிறார். பிரட்லீயைப் பொறுத்தவரை பத்திரிகைத்துறை வெறுமனே ஊதியத்திற்கான தொழிலே அல்ல. ஜனநாயகத்திற்கும் பொது நன்மைக்குமான கடமை என்றே அதை நினைத்துச் செயற்பட்டார் என்று நினைவுப் பரவலின் ஆரம்பத்தில் காணப்படும் அந்தக் குறிப்பு ஒன்றே போதும் அவரின் பெருமையை வாசகர்களுக்கு பறைசாற்ற.

டேவிட் கிருபாகரன், கோப்பாய்.

## கொஸ்லாந்தை மனிதப்பேரவலம்

கடந்தமாத இறுதியில் பதுளை மாவட்டத்தின் கொஸ்லாந்தை மீரியபெத்தை தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவுக்குப் பிறகு அத்தகைய அனர்த்தங்களில் மக்கள் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து வெளியிடப்படுகின்ற ஆலோசனைகள் குறிப்பாக அரசியல்வாதிகள் தெரிவிக்கின்ற அறிவுரைகள், உறுதிமொழிகளில் இருக்கக்கூடிய அபத்தத்தை உணர்த்த 'சமகாலம்' சஞ்சிகையின் அட்டைப்படமும் 'சம்பவத்துக்குப் பின்னர் சகலரும் புத்திசாலிகள்' என்ற தலைப்பும் மாத்திரமே போதுமானது.

வீரவாகு திருச்செல்வம், நுவரெலியா.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 10
2014, நவம்பர் 16 - 30

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk


**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

நீங்கள் ஒன்றில் தீர்வின் அங்கமாக இருக்கிறீர்கள் அல்லது பிரச்சினையின் அங்கமாக இருக்கிறீர்கள்.
- எல்ட்ரிச் கிளீவர்



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....



தேர்தல் ஒன்று குறித்த அறிவிப்பு வெளியானதும் வாக்களிப்புக்கான திகதியை தீர்மானிப்பதற்கான சட்ட ரீதியான அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கே இருக்கிறது. அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பை இன்றைய தேர்தல் ஆணையாளருக்கு அரசாங்கம் மறுக்கிறது. திகதிகளை சோதிடர்களே தீர்மானிக்கிறார்கள் போலத் தெரிகிறது. சோதிடர்களின் தயவில் செயற்படுகின்ற துரதிர்ஷ்டமான நிலை தேர்தல் ஆணையாளருக்கு ஏற்பட்டிருக்கிறது.

**எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க**




பொது வேட்பாளர் என்ற முறையில் எனது கடந்தகால அனுபவத்தைக் கூறுகிறேன். ஆரம்பத்தில் பலர் சூழவருவார்கள். நிலைவரங்கள் விபரீதமாக மாறும்போது ஒருவருமே கூடவரமாட்டார்கள். எனவே, பொதுவேட்பாளராக வரக்கூடிய வாய்ப்புக் கொண்ட எவரும் இதுவிடயத்தில் முடிவை எடுக்கும்போது மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும்.

**ஜனநாயகக் கட்சித் தலைவர் சரத்பொன்சேகா**




பத்து அல்லது பன்னிரண்டு கள்ளக் காதலர்களை வைத்திருக்கின்ற பெண்களே என்னையும் எனது பணிகளையும் குறை கூறுகிறார்கள். பாராளுமன்ற விவாதத்தின் போது எதிர்க்கட்சி எம்.பி.க்களான றோசி சேனாநாயக்க, சந்திராணி பண்டார, தலதா அத்துக்கோரள, விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் என்னை விமர்சித்துப் பேசினாலும் கூட, அவர்களை சொந்தச் சகோதரிகளாக நினைத்து மன்னிக்கிறேன்.

**சிறுவர் மேம்பாடு, மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த**




மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டுமென்று எவராவது விரும்பினால் அவரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டு தோற்கடிக்கவேண்டும். தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதிலிருந்து அவரைத் தடுக்க முயற்சிப்பது சரியான காரியம் அல்ல. ஜனாதிபதிகளுக்கு இருபதவிக்கால மட்டுப்பாடு இருப்பது தங்கள் நாட்டுக்கு நல்லதல்ல என்று இப்போது அமெரிக்கர்களே சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள்.

**முன்னாள் எம்.பி.பிறின்ஸ் குணசேகர**



அரசாங்கம் செய்கின்ற அநியாயங்களைச் சுட்டிக்காட்டுகின்ற எவருமே பயங்கரவாதியென்றும் நக்சலைட்டென்றும் கம்யூனிஸ்ட்டென்றும் ஏகாதிபத்தியவாதி என்றும் ஆட்சியாளர்களினால் அழைக்கப்பட்டு வருகிறார்கள். நான் இலங்கைக்கு திரும்பிச் சென்றதும் என்னைக் கூட, பயங்கரவாதி என்று அவர்கள் அழைக்கக்கூடும்.

**சென்னையில் வடமாகாண முதலமைச்சர்
சி.வி.விக்னேஸ்வரன்**



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கின்ற சில கட்சிகள் அரசாங்கத்தைக் கண்டித்து விமர்சனம் செய்கின்றன. நாம் அரசாங்கத்திலிருந்து வெளியேறும் வரை அக்கட்சிகள் காத்திருக்கின்றன. எமது தோளில் ஏறிக்கொண்டு அரசாங்கத்திலிருந்து வெளியேற அந்தக் கட்சிகள் விரும்புகின்றன.

**நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம்**



முஸ்லிம்களுக்கு ஒரு அரசியல் தலைமைத்துவம் வேண்டுமென்பதற்காக தனிக்கட்சியொன்றை ஆரம்பிக்குமாறு எம்.எச்.எம். அஷ்ரப்பிற்கு அன்று யோசனையைக் கூறியது நானே. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்படுவதற்கான முன்முயற்சியை மேற்கொண்டவர் அஷ்ரப் அல்ல, நானே. எனது கம்பளையைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தேர்தலில் போட்டியிட வைத்தவனும் நானே. ஒரு அரசியல் இயக்கத்தில் இணையுமாறு முஸ்லிம் இளைஞர்களை உற்சாகப்படுத்தியவனும் நானே.

**பிரதமர் டி.எம்.ஜெயரத்ன**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேர்லின் சுவர் வீழ்ச்சியின் 25 ஆண்டு நிறைவு

## புதிய கெடுபிடி யுத்தத்தை நோக்கி உலகம்

பேர்லின் சுவரின் வீழ்ச்சியின் 25 ஆவது வருடாந்த நிறைவைக் கொண்டாடுவதற்காக ஜேர்மனியர்களும் ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்களுமாக பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அண்மையில் பேர்லின் நகருக்கு விஜயம் செய்தார்கள். 1961ஆம் ஆண்டு கிழக்கு ஜேர்மனியினால் நிர்மாணிக்கப்பட்ட ஏறத்தாழ 96 மைல்கள் நீளமான அந்தச் சுவர் ஏற்கனவே பிளவுபடுத்தப்பட்டிருந்த நாட்டின் தலைநகரை மேற்கு பேர்லின் என்றும் கிழக்கு பேர்லின் என்றும் பிரித்தது. பல வாரகால சிவில் ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு கிழக்கு ஜேர்மனியின் அன்றைய கம்யூனிஸ்ட் அரசாங்கம் 1989 நவம்பர் 9 ஆம் திகதி பிரிவினையைத் தளர்த்தி மக்களை மேற்குப் பகுதிக்கு பயணம் செய்ய அனுமதித்தது.

கிழக்குப்பகுதியில் இருந்து மேற்குப்பகுதிக்கு இலட்சக்கணக்கில் மக்கள் செல்வதைத் தடுப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்த 13 அடி உயரமான சுவரை கிழக்கு ஜேர்மனி (அன்றைய ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு) 'பாசிசத்துக்கெதிரான தடையரண்' என்று வர்ணித்தது. சுவரின் 20 ஆவது வருடாந்த தினத்தன்று (1981) கிழக்கு ஜேர்மனியின் தலைவர் எரிக் ஹோனெக்கர் அது இன்னொரு நூறு ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கக் கூடும் என்று முழக்கம் செய்தார். ஆனால், அதற்குப் பிறகு முழுமையாக பத்துவருடங்கள் கூட சுவர் நிலைத்திருக்க முடியவில்லை. 1989 நவம்பர் 9இல் சுவர் இறுதியாக தகர்ந்தபோது கெடுபிடி யுத்தத்தின் (Cold war) முடிவைக் குறிக்கும் நிகழ்வாக அது அமைந்து விட்டது.

ஜேர்மனி மீண்டும் ஒரே நாடாகுவதற்கு வழிவகுத்த அந்த நிகழ்வின் 25ஆவது வருட நிறைவை உலகம் அனுஷ்டிக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான கேள்வியை அரசியல் அவதானிகள் கிளப்புகிறார்கள். பேர்லின் சுவரின் வீழ்ச்சி கிழக்கிற்கும் மேற்குக்கும் இடையிலான பழைய பிளவுகளை இல்லாமற் செய்துவிட்டதா?

தனது 'கிளாஸ் னோஸ்ற்' (openness) மற்றும் 'பெரெஸ் ரோய்க்கா' (Restructuring) சீர்திருத்தங்கள் மூலமாக பேர்லின் சுவரின் வீழ்ச்சிக்கும் அதைத் தொடர்ந்து கெடுபிடி யுத்தத்தின் முடிவுக்கு வழிவகுத்த முன்னாள் சோவியத் யூனியனின் தலைவர் மிக்கெயில் கொர்பச் சேவ் நவம்பர் 9 ஆம் திகதி மிகவும் சோர்வூட்டும் தன்மையான கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார். வரலாற்றின் தழும்புகள் முன்னெப்போதையும் விட தற்போது கூடுதலான அளவுக்கு வேதனையைத் தருகின்றன என்று அவர் கூறியிருந்தார்.

உக்ரெயின் நாட்டில் மூண்டிருக்கும் நெருக்கடி உலகம் புதியதொரு கெடுபிடி யுத்தத்தின் தறுவாயில் இருப்பதை உணர்த்துகிறது.

ஐரோப்பாவின் பாதுகாப்புக்காக புதியபொறிமுறைகளையும் நிறுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னங்களையும் கட்டியெழுப்புவதுடன் ஐரோப்பிய அரசியலில் பாரிய இரா ணுவமய நீக்கத்தைச் (Demilitarization) செய்வதில் நாட்டம் காட்டுவ தற்குப் பதிலாக மேற்குலகம் குறிப்பாக அமெரிக்கா, ஏகபோக தலைமைத்துவத்துக்கும் மேலா திக் கத்துக்கும் உரிமை கோருவதில் ரஷ்யா படிப்படியாக அடைந்துவந்தி ருக்கும் பலவீனத்தை தனக்குச் சாதக மாகப் பயன்படுத்திக் கொண்டது.

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடு கள் (நேட்டோ) அமைப்பின் விரி வாக்கம், கொசோவோ சுதந்திரம், ஏவுகணை பாதுகாப்புத் திட்டம் மற் றும் மத்திய கிழக்குப் போர்கள் ஆகி யவை மேற்குலகிற்கும் ரஷ்யாவுக் கும் இடையிலான நம்பிக்கையின் தகர்வுக்கு வழிவகுத்தன. சுருக்கமாக விளங்கவைப்பதாயின் ஒரு உராய் வுக்காயம் என்று வர்ணிக்கப்படக் கூடிய பிரச்சினை இன்று புரையோ டிப்போன புண்ணாக மாறிவிட்டது என்பதே அவதானிகளின் அபிப்பிரா யமாக இருக்கிறது.

கம்யூனிஸத்தைத் தோற்கடித்துவிட் டோமே என்ற மகிழ்ச்சியில் அமெரி




*1973 மார்ச் 08, எடுக்கப்பட்ட படம். பேர்லினின் வட பகுதியில் சுவரில் அது நிச்சயம் வீழ்ச்சி காணவேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது*

க்கா துணிச்சலை வளர்த்துக்கொண்ட அதேவேளை, தனது முன்னைய வல் லரசு அந்தஸ்தை இழந்துவிட்டது குறி த்து ரஷ்யா தொடர்ந்தும் கவலைப்பட் டுக்கொண்டேயிருக்கிறது. அமெரிக் காவுக்குப் போட்டியான வல்லரசாக சோவியத் யூனியன் வளருவதற்கு பின்புலமாக இருந்த கோட்பாட்டை ரஷ்யா கைவிட்டுவிட்டபோதிலும் வல்லரசு அந்தஸ்து இழப்புக் குறித் துக் கவலைப்படுகிறது. மேற்குலகும் ரஷ்யாவும் இந்த முரண்பாடான நிலைப்பாடுகளைக் கைவிடாத பட்சத் தில் அவற்றுக்கிடையிலான பதற்ற நிலை முடிவுக்கு வருவதற்கு வாய்ப் பில்லை என்பதே சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் பொதுவான அபிப் பிராயமாக இருக்கிறது. ■

# சர்வதேச சமூகத்தின் உதவியை நாடும் ஸ்பெயினின் சுயாட்சிப்பிராந்தியம்

பிரிவினைக்கு எதிராக முடிவுகள் அமைந்த ஸ்கொட்லாந்து சர்வஜன வாக்கெடுப்பை யடுத்து ஸ்பெயினின் சுயாட்சிப் பிராந்தியமான காடலோனியா (Catalonia)வின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை மீதே அரசியல் அவதானி களினதும் ஆர்வலர்களினதும் கவனம் திரும்பி யிருந்தது.

காடலோன் மக்கள் மத்தியில் தனிநாடு குறித்த வாக்கெடுப்பை நவம்பர் 9ஆம் திகதி நடத்துவ தற்கு அப்பிராந்தியத்தின் ஜனாதிபதி ஆர்தர் மாஸ் வெளியிட்ட அறிவிப்புக்கு எதிராக ஸ்பெ யின் அரசாங்கம் அரசியலமைப்பு நீதிமன்றத் தில் தாக்கல் செய்த மனுவையடுத்து வாக்கெடுப் புக்கான ஏற்பாடுகளை இடைநிறுத்துமாறு அந் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.




ஆர்தர் மாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தி ஆய்வு

இதனால் வேறுவழியின்றி, ஆர்தர் மாஸ் உத்தியோகபூர்வமான முறையில் அன்றி காடலோன் மக்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கும் நோக்குடன் உத்தியோகபூர்வமற்ற வாக்கெடுப்பை நடத்த முடிவு செய்தார். அதை ஸ்பெயின் அரசாங்கத்தினால் தடுக்க முடியாமல் போய்விட்டது.

நவம்பர் 9 ஆம் திகதி காடலோனியா பூராவும் அமைக்கப்பட்டிருந்த 1317 வாக்களிப்பு நிலையங்களில் 2,305, 290 மக்களும் உலகின் வேறு பகுதிகளில் வாழ்கின்ற 13, 573 காடலோன் மக்களும் வாக்களித்தனர். கடந்த மே மாதம் நடைபெற்ற ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் பங்கேற்ற காடலோனியர்களின் தொகையும் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்றவர்களின் தொகையும் ஏறத்தாழ சம அளவில் இருந்தது.

ஐரோப்பிய பாராளுமன்றத்தினதும் பல ஐரோப்பிய நாடுகளின் தேசிய பாராளுமன்றங்களினதும் உறுப்பினர்கள் அடங்கிய சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் வாக்களிப்பை மேற்பார்வை செய்தனர். சவால் நிறைந்த சூழ்நிலைக்கு மத்தியிலும் வாக்கெடுப்பு வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் அதன் ஒவ்வொரு அம்சமும் மிகவும் அமைதியான முறையில் நிறைவேறியதாகவும் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்திருந்தனர்.

'காடலோனியா ஒரு அரசாக வேண்டுமென்று (a state) நீங்கள் விரும்புகிறீர்களா? அவ்வாறானால், அந்த அரசு சுதந்திரமானதாக (Independent) இருக்கவேண்மென்று விரும்புகிறீர்களா? என்ற இரு அம்சக்கேள்வி மக்கள் முன் வைக்கப்பட்டது. இதற்கு 80.7 சதவீதத்தினர் 'ஆம் - ஆம்' என்று வாக்களித்திருக்கிறார்கள். இன்னொரு 10 சதவீதத்தினர் காடலோனியா ஒரு அரசாக இருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு 'ஆம்' என்றும் சுதந்திர அரசாக இருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு 'இல்லை' என்றும் வாக்களித்திருக்கிறார்கள். அதேவேளை, 4.5 சதவீத வாக்காளர்கள் காடலோனியா எந்த வகையிலும் ஒரு அரசாக இருக்க வேண்டியதில்லை என்று வாக்களித்திருக்கிறார்கள்.

இந்த உத்தியோகபூர்வமற்ற வாக்கெடுப்பு முடிவுகள் வெளியான பின்னர் அபிப்பிராயம் தெரிவித்த காடலோனிய பிராந்திய ஜனாதிபதி ஆர்தர் மாஸ், ஸ்கொட்லாந்திலும் கனடாவின் கியூபெக்கிலும் நடந்ததைப் போன்று உகந்த சட்டபூர்வமான - கட்டுப்படுத்தும் தன்மையான (A Proper legally Binding referendum) சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கான உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் என்று கூறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.



'வாக்கெடுப்பு தினமன்று ஒரு வன்முறைச் சம்பவமும் இடம்பெறவில்லை. காடலோனியர்கள் மிகவும் அமைதியான மக்கள். பொறுமையான மக்கள். நாம் ஸ்பெயின் நாட்டுக்கு தீங்கிழைக்கும் நோக்கத்தைக் கொண்டவர்கள் அல்ல. நாம் பூகோளவியலினால், வரலாற்றினால், கலாசாரத்தினால் பிணைக்கப்பட்டவர்கள். ஆனால், காடலோனியர்களான நாம் ஐரோப்பிய ஒன்றிய கட்டமைப்புக்குள் எம்மை நாமே ஆட்சிசெய்ய விரும்புகிறோம். அதை நாம், ஸ்பெயினின் எதிரிகளாக அன்றி, நண்பர்களாகச் செய்யும் வழிவகைகளில் நாட்டம் கொண்டுள்ளோம்.

'நவம்பர் 9 வாக்கெடுப்புக்குப் பிறகு- அதாவது காடலோனிய மக்கள் தங்களது எதிர்காலம் குறித்த தங்கள் விருப்பத்தை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்பொன்று அளிக்கப்பட்ட பிறகு-ஸ்கொட்லாந்திலும் கியூபெக்கிலும் நடந்ததைப் போன்ற உகந்த சட்டரீதியான - கட்டுப்படுத்தும் தன்மையான சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கான உரிமையைப் பெற்றிருக்கிறோம் என்று நம்புகின்றோம். சட்டரீதியான சாக்குப் போக்குகள் போதுமானவையல்ல. ஒவ்வொரு ஜனநாயக நாட்டிலும் அரசியலைத் தொடர்ந்தே சட்டம் வருகிறது. அரசியலில் துணிவாற்றல் இருந்தால், ஒரு சட்டவழி முறையைக் கண்டறியக் கூடியதாக இருக்கும்' என்றும் ஆர்தர்மாஸ் கூறியிருக்கிறார்.

காடலோனிய மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளிக்குமாறு ஸ்பெயின் அரசாங்கத்துக்கும் அந்நாட்டு மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கும் காடலோனிய ஜனாதிபதி, 'எமக்காகவும் எமது பிள்ளைகளுக்காகவும் சொந்த ஆட்சிமுறையொன்றைத் தெரிவு செய்வதற்கு காடலோனியாவை அனுமதிக்குமாறு சர்வதேச சமூகம் ஸ்பெயின் பிரதமர் மறியோனா ராஜோயையும் அந்நாட்டின் பாராளுமன்றத்தையும் வற்புறு த்த வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார்.

40 வருடகால சர்வாதிகார ஆட்சியின் கீழ் நசுக்கப்பட்டு பிறகு அனேகமாக இரவோடிரவாக மேற்கத்தைய ஜனநாயக நாடாக அமைதியான முறையில் உருமாற்றமடைந்த பிரகாசமான வரலாற்று உதாரணத்தைக் கொண்ட ஸ்பெயின் அந்த பிரகாசமான ஜனநாயக ஒளி தொடர்ந்தும் மிளிரும் வகையில் செயற்படுமென்று எதிர்பார்ப்பதாக ஆர்தர் மாஸ் மேலும் கூறியிருக்கிறார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெற்காசியாவில் ஒரு கெடுபிடி யுத்தம்

கடந்த சில வாரங்களாக இந்திய செய்தி ஊடகங்களில் இலங்கை இடையறாது முக்கியத்துவம் பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. எதிர்மறையான செய்திகளாக இருந்தாலும் கூட, இந்தியர்களினதும் அவர்களின் ஆட்சியதிகார வர்க்கத்தினதும் கவனத்தை அவை பெரிதும் ஈர்க்கின்றன. சீனாவின் அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல் ஒருசில மாதங்களில் இரண்டாவது தடவையாக தனது துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதித்ததே இதற்குக் காரணமாகும். இந்த நிகழ்வுப் போக்கு வியட்நாம் பிரதமர் என்குயென்ரான் டுங் புதுடில்லிக்கு விஜயம் செய்து பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்ட ஒரு சில நாட்களில் இடம்பெற்றது. சீனா கடுமையாக எதிர்க்கின்ற சர்ச்சைக்குரிய எண்ணெய் அகழ்வு விவகாரம் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையும் இவற்றில் ஒன்று என்பது கவனிக்கத்தக்கது.

ஷாங்ஷெங் 2 என்ற நீர்மூழ்கி ஷாங் சிங் டாவோ என்ற போர்க்கப்பல் சகிதம் அக்டோபர் 31 தொடக்கம் ஐந்துநாட்களுக்கு இலங்கைத் துறைமுகத்தில் தரித்துநின்றது. முன்னதாக இதே ரக நீர்மூழ்கியொன்று செப்டெம்பர் நடுப்பகுதியில் இலங்கைத் துறைமுகத்தில் தரித்து நின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

செப்டெம்பர் சீன நீர்மூழ்கி தரித்து நின்ற வேளையில் கூட, இலங்கை அரசாங்கத்தின் அந்த நடவடிக்கை தொடர்பில் இந்தியா அதன் ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தது. இவ்வாறாக சீன நீர்மூழ்கிக் கப்பல் இலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி டயரி



எம்.பி.வித்தியாதரன்

**குறுகிய கால இடைவெளிக்குள் சீன அணு நீர்மூழ்கிக் கப்பல் இரு தடவைகள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய அனுமதி இந்திய வெளியுறவு அமைச்சையும் பாதுகாப்பு அமைச்சையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. ஜனாதிபதி ராஜபக்‌ஷவின் நோக்கங்கள் குறித்து இந்தியா எச்சரிக்கை உணர்வுடன் நோக்குகிறது. அவர் இவ்வாறு நடந்து கொள்வார் என்று இந்திய அரசாங்கம் சற்றும் எதிர்பார்க்கவில்லை.**

கைத் துறைமுகத்தில் வந்து நிற்பதற்கு அனுமதிக்கும் செயல் பிரதமர் நரேந்திரமோடியினதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவினதும் அரசாங்கங்களுக்கு இடையிலான பிணைப்பை வலுப்படுத்தும் முயற்சிகளை எவ்வாறு பாதிக்கும் என்பதை இலங்கை ஆட்சியாளர்களுக்கு இந்திய வெளியுறவு அமைச்சு விளக்கிக்கூறியதாக வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை 'அதன் தவறை' விளங்கிக்கொள்ளும் என்றும் அதே 'தவறை' மீண்டும் செய்யாது என்றும் இந்தியா நம்பியது.

அதனால், இன்னொரு சீன நீர் மூழ்கி தரித்து நிற்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது என்ற செய்தி வெளியான போது இந்திய வெளியுறவு அமைச்சும் பாதுகாப்புத்துறையும் அதிர்ச்சியடைந்தன. நீர்மூழ்கி தரித்துச் செல்வது அல்ல, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான பிணைப்பு வலுவடைந்து கொண்டிருப்பதே இந்தியாவைக் கவலைக்குள்ளாக்குகிறது. ஜனாதிபதி ராஜபக்‌ஷவின் நோக்கங்கள் குறித்தும் இந்தியா எச்சரிக்கையுணர்வுடன் நோக்குகிறது.

வெளிப்படையாகக் கூறுவதானால், ராஜபக்‌ஷ இவ்வாறாக நடந்துகொள்வார் என்று இந்திய அரசாங்கம் சற்றும் எதிர்பார்க்கவில்லை. நரேந்திரமோடியுடன் அதிகரிக்கும் பிணைப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு ராஜபக்‌ஷ செயற்படுவார் என்று இந்தியா நினைத்தது.

இலங்கையில் சீன நீர்மூழ்கியொன்றின் எந்தவொரு பிரசன்னமும் இந்தியாவுக்கு ஏற்புடையதாக இருக்காது என்பதை மோடியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவால் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்‌ஷவுக்கு தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இந்தியாவினதும் வியட்நாமினதும் தலைவர்கள் பரஸ்பர விஜயங்களை மேற்கொண்டிருந்த வேளைகளில் தான் சீன நீர்மூழ்கிகள் இலங்கைத்துறைமுகத்துக்கு வருகைதந்த இரு சம்பவங்களும் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. தென்சீனக் கடலில் உள்ள எண்ணெய் படிவு தொகுதிகள் (Oil Blocks) சீனாவுக்கும் வியட்நாமுக்கும் இடையே தகராறு நிலவுகிறது.

இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி செப்டெம்பரில் வியட்நாமுக்கு விஜயம் செய்தபோது இலங்கைத்துறைமுகத்துக்கு சீன நீர்மூழ்கியின் முதல்வருகை இடம்பெற்றது. பிறகு வியட்நாமிய பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு ஒருசில நாட்கள் கழிந்த நிலையில் நீர்மூழ்கியின் இரண்டாவது வருகை இடம்பெற்றது.

தற்செயலாக ஒருங்கு நிகழ்ந்த இச்சம்பவங்கள் இந்தியாவுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தின. இந்தியாவுக்கும் வியட்நாமுக்கும் இடையே அதிகரித்துவரும் ஒத்துழைப்பை சாதாரணமாக எடுத்துக்கொள்ளப்போவதில்லை என்ற செய்தியை இந்தியாவுக்கு சீனா தெரிவித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு துறைமுகத்தில் சீன அணு நீர்மூழ்கி உதவிக்கப்பல்

கொண்டிருக்கிறது என்பது மாத்திரம் நிச்சயம். தன்னுடன் தகராறுகளைக் கொண்டுள்ள நாடுகள் நெருங்கி வருவதைத் தடுக்க சீனா விரும்புகிறது என்பதில் சந்தேகமில்லை.

வியட்நாமினால் உரிமை கோரப்படுகின்ற கடல்பகுதியில் சீனா அதன் எண்ணெய் அகழ்வுச் சாதனத்தை (Drilling ring) நகர்த்தியதையடுத்து இருநாடுகளுக்கும் இடையேயான நீண்டகால தகராறு கடந்த மேமாதம் மீண்டும் மூண்டது. இருநாடுகளினதும் கப்பல்களிடையே மோதலுக்கு இது வழிவகுத்தது. வியட்நாமில் சீன எதிர்ப்பு வன்முறை ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. ஆனால், அக்டோபரில் இருநாடுகளுமே உறவுகளைச் சீர்செய்துகொள்ள முயற்சித் தன. சீனாவின் உயர்மட்ட இராஜதந்திரியான யாங் ஜீச்சிக்கும் வியட்நாமிய வெளியுறவு அமைச்சர் பாம் பின் மின்னுக்கும் இடையே ஹனோய் நகரில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து இரு நாடுகளும் 'கடல் பிராந்தியம் சம்பந்தப்பட்ட பிரச்சினையை உகந்த முறையில் கையாளுவதற்கு' இணங்கியிருப்பதாக சீன வெளியுறவு அமைச்சு அறிவித்தது. யாங் கடந்த ஜூனில் வியட்நாம் வெளியுறவு அமைச்சருடன் நடத்திய சந்திப்பின்போது நிலவிய சூழ்நிலையையும் விட இச்சந்திப்பு மிகவும் சுமுகமானதாக அமைந்தது. ஜூன் சந்திப்பின்போது தகராறை வியட்நாம் பெரிதுபடுத்துவதாக யாங் குற்றஞ்சாட்டியிருந்தார். 1979 ஆம் ஆண்டு சீனாவுக்கும் வியட்நாமுக்கும் இடையே ஒரு குறுகிய எல்லைப்போர் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



ஹனோய் நகரில் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ளும் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி

பிலிப்பைன்ஸ், ஜப்பான் உட்பட சீனாவுடன் கடல் பிராந்தியத் தகராறுகளைக் கொண்ட ஏனைய நாடுகளுடன் வியட்நாம் ஊடாட்டங்களை ஆரம்பித்த ஒருசில வாரங்களில் அதாவது ஆகஸ்ட் பிற்பகுதியில் சீனாவுக்கும் வியட்நாமுக்கும் இடையிலான நல்லிணக்க நிலை ஆரம்பித்தது. வியட்நாமின் கரையோரக் காவல்படைக்கு ஜப்பான் படகுகளையும் ராடார் உபகரணத்தையும் வழங்கியது. முன்னாள் எதிரியான அமெரிக்காவுடனும் கூட வியட்நாம் உறவுகளை மேம்படுத்திக்கொண்டது. மூன்று தசாப்தகால ஆயுதத் தடையை தளர்த்துவதற்கு வாஷிங்டன் இணங்கிக்கொண்டது. இருதரப்பினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைபேறான தீர்வொன்றைக் காண்பதற்கான இரு அரசாங்கங்களுக்கும் இடையிலான எல்லைப் பேச்சுவார்த்தைப் பொறிமுறையொன்றை சீனாவும் வியட்நாமும் உகந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளும் என்று அக்டோபர் சந்திப்புக்குப் பிறகு சீன வெளியுறவு அமைச்சு அறிவித்தது. கடல் பிராந்தியம் தொடர்பான தகராறுகள் கட்டுப்பாட்டை மீறிச் செல்லாதிருப்பதை உறுதிசெய்யக்கூடிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவர்கள் இணங்கிக் கொண்டார்கள். எண்ணெய் வளமுடைய கடல்பிராந்தியத்தின் பகுதிகளுக்கு பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனை மற்றும் தாய்வான் போன்ற வேறுபல நாடுகளும் உரிமை கோருகின்றன. அமெரிக்கா இந்தப் பிராந்தியத்தில் இருக்கின்ற தனது நேச நாடுகளை, குறிப்பாக பிலிப்பைன்ஸையும் வியட்நாமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரிப்பதன் மூலமாக பதற்ற நிலையை மூட்டிவிடுவதாக சீனா சந்தேகிக்கிறது.

### அவநம்பிக்கை

இலங்கைத்துறைமுகத்தில் சீன நீர்மூழ்கி தரித்து நின்ற சம்பவங்களை இருநாடுகளுமே நியாயப்படுத்துகின்றன. நீர்மூழ்கியின் வருகைகளில் எந்தவிதமான அசாதாரண தன்மையும் கிடையாது என்றும் அவை சர்வதேச விதிகளுக்கு இசைவானவையே என்றும் அவை கூறுகின்றன. 'இந்தியா விசனம் தெரிவித்திருக்கின்றபோதிலும், கொழும்புத்துறைமுகத்தில் கடற்படைக் கப்பல்கள் தரித்து நின்றதில் எந்த வழமைக்குமாறான தன்மையும் கிடையாது. கடற்படை நீர்மூழ்கிக் கப்பல்கள் எரிபொருள் நிரப்புவதற்காகவும் பணியாளர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவும் வெளிநாட்டுத் துறைமுகங்களில் தரித்து நிற்பது பொதுவான சர்வதேச நடைமுறையேயாகும்' என்று சீனா கூறியிருக்கிறது.

அணுசக்தி நீர்மூழ்கி தரித்து நின்றதைக் காட்டிலும் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளில் உள்ள நெருக்கமே இந்தியாவை கூடுதலான அளவுக்கு குழப்பத்துக்குள்ளாக்கியிருக்கிறது. ஏடன் குடா மற்றும் சோமாலியக் கடல்பகுதியை நோக்கிய பயணத்தின் போது நீர்மூழ்கிகள் தரித்துநின்றது உத்தியோகபூர்வமான விடயமாகும் என்று சீன பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

**இந்தியாவின் அயல்நாடுகளை தன் பக்கம் இழுக்க சீனா முயற்சித்துக் கொண்டிருக்கும் அதேவேளை சீனாவுடன் பிராந்திய தகராறுகளை கொண்ட நாடுகளை தன்பக்கம் இழுக்க இந்தியா முயற்சித்துக் கொண்டிருக்கிறது. சீனாவுக்கு எதிரான நாடுகளுக்கு அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் ஆதரவு இருக்கிறது**

இலங்கையுடனான சீனாவின் கடற்படை உறவுகள் வளர்ந்து வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆகஸ்ட் நடுப்பகுதியில் கூட, சீனக்கடற்படையின் ஷாங்பை ஷான் என்ற போர்க்கப்பல் சோமாலியக் கடல் பிராந்தியத்துக்கான பயணத்தின் போது கொழும்புத் துறைமுகத்துக்கு வந்தது. தனது தீர்மானத்தை நியாயப்படுத்திய இலங்கை 2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு பல் வேறு நாடுகளையும் சேர்ந்த 230 போர்க்கப்பல்கள் நல்லெண்ண விஜயமாகவும் எரிபொருள் நிரப்புதல் மற்றும் பணியாளர் ஓய்வு நோக்கங்களுக்காகவும் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து தரித்துச் சென்றிருக்கின்றன என்று கூறியது.

ஆனால், இந்தியா இவற்றை நம்பவில்லை. நிகழ்வுப் போக்குகள் இதே விதமாகத் தொடருமானால் ஜனாதிபதி ராஜபக்ஷ அதற்கான பெரிய விலையைச் செலுத்த வேண்டிய நிலை வரலாம்.

இந்தியாவின் ஆட்சேபங்களை அலட்சியம் செய்யும் இலங்கையின் போக்கை நீண்டகாலத்துக்கு பாதகமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய எதிர்ப்பு உணர்ச்சி கொண்ட நடவடிக்கை என்று கேந்திர முக்கியத்துவ விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளரான பிரமா ஷெலானி வர்ணித்திருக்கிறார். 'வடக்கில் இருந்து அதிகரித்துவருகின்ற சீனாவின் கேந்திர ரீதியான நெருக்குதலுக்கு இந்தியா முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு தருணத்தில், தெற்கிலிருந்து புதிய இராணுவச் சவால் ஒன்று தோற்றுவிக்கப்படுகிறது. கடந்த தசாப்தத்தில் பலவீனமடைந்த இந்தியாவின் கேந்திர முக்கியத்துவ செல்வாக்குநிலை சீன நீர்மூழ்கிகள் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தருவதற்கு அனுமதிக்கக்கூடிய அளவுக்கு ராஜபக்ஷவுக்கு தைரியத்தைக் கொடுத்திருக்கிறது. இந்தியாவின் நலன்களுக்குச் சவால் விடுப்பதில் ராஜபக்ஷ பாரதூரமான தப்புக் கணக்குகளைப் போட்டிருக்கக்கூடும். தெளிவான நோக்கு இல்லாமல் - எது செய்வதென்று தெரியாமல் நிற்கிற பிரதமர் இப்போது இந்தியாவுக்கு தலைமை தாங்கவில்லை' என்றும் ஷெலானி குறிப்பிட்டிருக்கிறார்.



புதுடில்லியில் இந்திய பிரதமர் மோடியுடன் வியட்நாம் பிரதமர்

இவ்வருடம் மே மாதம் பிரதமராகப் பதவி ஏற்ற நாளிலிருந்து நரேந்திரமோடி இந்தியாவின் அயல்நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்துவதில் பிரத்தியேக கவனம்செலுத்திவருகின்றார். அயல்நாடுகளுக்கிடையிலான சுமுகமான- அமைதியான உறவுகள் சகல நாடுகளும் அபிவிருத்தியடைவதற்கும் அவற்றின் மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மேம்படுவதற்கும் உதவும் என்பதில் மோடியும் அவரது அமைச்சர்களும் தெளிவாக இருக்கிறார்கள். சீனாவாக இருந்தாலென்ன, பாகிஸ்தான் அல்லது இலங்கையாக இருந்தாலென்ன, அல்லது வேறு எந்த நாடுமாக இருந்தாலென்ன அயல் நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்துவதற்கு மோடி முன்னுரிமை கொடுத்து வருகின்றார்.

புதுடில்லியில் பதவியேற்பு வைபவத்தில் சந்தித்த பிறகு ராஜபக்ஷவுடன் மோடி தனது பிணைப்பை வலுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி வந்திருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் டில்லிக்கு விஜயம் செய்தபோது தமிழர்களின் நிலைமைகளை மேம்படுத்த ராஜபக்ஷவுடன் ஒத்துழைத்துச் செயற்படுங்கள் என்று அவர்களிடம் கூறிவைக்கவும் மோடி தவறவில்லை. தமிழர்களுக்கு நீதிவழங்குமாறு ராஜபக்ஷவைத் தூண்டுவதற்கு முயற்சிக்கின்ற அதேவேளை, அவருடன் நெருக்கமாகப் பணியாற்றவும் தயாராயிருப்பதை மோடி தெளிவாக வெளிக்காட்டியிருந்தார். அவரின் இந்த நிலைப்பாடு இந்தியாவில் உள்ள தமிழ்த் தலைவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இந்தியாவின் பழைய இலங்கைக் கொள்கையில் இருந்து மோடி விலகிச் செல்வதாக அவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள்.



ஆனால், ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளிப்பதில் மோடி உறுதியாக இருந்து வந்தார். ஆனால், இப்போதும் அப்படியே அவர் இருக்கிறாரா? ராஜபக்ஷவில் அவர் நம்பிக்கையிழக்கமாட்டாரா? மோடிக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையேயான நம்பிக்கை தகர்ந்துபோகுமேயானால், அது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளுக்கு நேரக்கூடிய மிகவும் மோசமான பாதிப்பாக இருக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

உண்மையில், அயல் நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்துவதற்கு மோடி மேற்கொண்டுவரும் துணிச்சலான நடவடிக்கைகள் இதுவரையில் தொடர்ச்சியான பின்னடைவுகளைச் சந்தித்திருக்கின்றன. முதல் பின்னடைவு சீனா பக்கமிருந்து வந்தது. தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகப் பதவியேற்றதை வாழ்த்திப் பாராட்ட மே 30 ஆம் திகதி சீனப்பிரதமர் லீ கெகியாங் டில்லிக்கு வந்த போது சீன ஜனாதிபதி சி ஜின்பிங் இந்தியாவுக்கு விஜயம் செய்ய வேண்டுமென்ற அழைப்பை மோடி விடுத்தார். ஆனால், செப்டெம்பர் நடுப்பகுதியில் ஜின்பிங் மேற்கொண்ட மூன்றுநாள் இந்திய விஜயம் தோல்வியில் முடிந்ததையடுத்து மோடியின் கனவுகள் தகர்ந்துபோயின. சீன ஜனாதிபதி இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயம் இவ்வருடத்தின் மகத்தான நிகழ்வுகளில் ஒன்றாக அமையும் என்று வர்ணிக்கப்பட்டது. ஆனால், சீனர்களின் தூரநோக்கற்ற செயல்களின் விளைவாக அது பயனளிக்கத் தவறியது. ஜின் பிங் இந்தியாவுக்கு விஜயம் செய்வதற்கு ஒரு சில தினங்கள் முன்னதாக ஜம்மு- காஷ்மீரின் லடாக் பிராந்தியத்திற்குள் சீனத்துருப்புகள் ஊடுருவின. அவரின் விஜயத்தின் போதும் அந்தத் துருப்புகள் லடாக்கிற்குள்ளேயே இருந்தன. இந்தச் செயல் நம்பிக்கையைப் படுத்திவிட்டது என்று சீன ஜனாதிபதியிடம் நேரடியாகவே மோடி சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. உறவுகளை முன்னோக்கி நகர்த்துவதற்கு நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பது அவசியமாகும். இதை ஜின்பிங்கும் இணங்கிக்கொண்ட போதிலும், சீனத்துருப்புகள் சில நாட்கள் கழித்தே பின் வாங்கிச் சென்றன.

2013 மே மாதத்தில் பிரதமர் லீ கெகியாங் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த நேரத்தில் சீனா இதே தந்திரோபாயத்தை முன்னரும் பயன்படுத்தியது என்பது கவனிக்கத்தக்கது. அப்போது கூட, மென்மையாகப் பேசுகின்ற சுபாவத்தைக் கொண்ட பிரதமர் தலைமையிலான இந்தியா நிலைவரங்களில் உடனடியாக மாற்றம் ஏற்படாதபட்சத்தில் பிரதமரின் விஜயத்தை பின்போட வேண்டியேற்படும் என்று சீனர்களுக்குச் சொல்ல வேண்டியிருந்தது.

சீனர்கள் இவ்வாறாக ஏன் நடந்து கொள்கிறார்கள்? இது மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஒரு கேள்வி. சீன அதிகாரிகளுக்கோ அல்லது ஊடகங்களுக்கோ கூட இது ஏன் என்று தெரியவில்லைப் போலும். பிரதமரினதும் ஜனாதிபதியினதும் விஜயங்களைக் கூட குழப்பியடிக்கக் கூடிய இந்த செயல்கள் தொடர்பிலான தீர்மானங்களை யார் யாரெல்லாம் எடுக்கிறார்கள்? இந்த மாதிரியாக சீனாவில் மாத்திரம்தான் நடக்க முடியுமோ?

சீனாவுடனான விவகாரங்களைப் போன்றே, இந்திய- பாகிஸ்தான் உறவுகளில் புதியதொரு அத்தியாயத்தை எழுதுவதற்கு மோடி மேற்கொள்கின்ற நகர்வுகளும் மிகவிரைவாகவே பயனற்றுப் போய்விடுகின்றன. பிரதமர் நவாஸ் ஷெரீப்புடனான தொடர்புகளை வலுப்படுத்திக்கொண்ட பிறகு மோடி இடைநிறுத்தப்பட்டிருந்த பாகிஸ்தானுடனான வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு இந்திய வெளியுறவு அமைச்சைக் கேட்டுக்கொண்டார். ஆனால், வெளியுறவுச் செயலாளர்கள் மட்டப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக காஷ்மீரில் உள்ள

ராஜபக்ஷவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாடு ஒன்றை எடுக்க வேண்டும் என்று மோடியை நம்ப வைப்பதற்கு பெரும்பிரயத்தனத்தை மேற்கொண்டு இயலாமல் போன தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைவர்கள் இப்போது தங்களுக்குள் சிரித்துக் கொள்வார்கள். நாங்கள் உங்களுக்கு அப்போதே சொன்னோமில்லை என்று மோடியைப் பார்த்து கேட்கக்கூடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினைவாதத் தலைவர்களுடன் பேசுமாறு டில்லியில் உள்ள தனது உயர்ஸ்தானிகரை கேட்டுக்கொண்டதன் மூலமாக பாகிஸ்தான் மோடியின் முயற்சிகளைச் சீர்குலைத்துவிட்டது. டில்லிக்கு வந்தபோது நவாஸ்ஷெரீப் ஹூரியத் தலைவர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படமாட்டார் என்று ஒரு நிபந்தனையை மோடி அரசாங்கம் முன்வைத்தது. அதற்கு அவரும் இணங்கிக்கொண்டார். ஆனால், இஸ்லாமாபாத் சென்றதும் தனது இணக்கப்பாட்டில் இருந்து பாகிஸ்தான் பிரதமர் விலகிவிட்டார். இதனால், பேச்சு வார்த்தை முயற்சிகள் மீண்டும் இரத்துச் செய்யப்பட வேண்டிய சூழ்நிலை தோன்றியது.

தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எவருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு மோடி தயாராகவே இருக்கிறார். ஆனால், அதற்கு உகந்த சூழ்நிலை இருக்க வேண்டும் என்பதே அவரது விருப்பம்.

இப்போது ராஜபக்ஷகூட, மோடியினால் வெளிக்காட்டப்பட்ட நல்லெண்ண- நம்பிக்கையுணர்வுக்கு குந்தகத்தை ஏற்படுத்திவிட்டார் போலத் தெரிகிறது. புதியதொரு தளத்தில் தனது வெளியுறவுக் கொள்கையை தொடங்க விரும்பிய இந்தியப் பிரதமர், ராஜபக்ஷவின் வார்த்தைகளை உண்மையானவை தானா என்று ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாக ஒருதடவைக்கு இரண்டு தடவைகள் யோசித்துப் பார்ப்பார் என்பது நிச்சயமானது.

ராஜபக்ஷவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாடொன்றை எடுக்கவேண்டும் என்று மோடியை நம்பவைப்பதற்கு பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்டு இயலாமற்போன தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் இப்போது தங்களுக்குள் சிரித்துக் கொள்வார்கள். நாங்கள் உங்களுக்கு அப்போதே சொன்னோமில்லையா? என்று அவர்கள் மோடியைப் பார்த்து கேட்கக்கூடும்.

உண்மையில் கெடுபிடி யுத்தம் (Coldwar) குறைந்த பட்சம் தெற்காசியாவுக்காவது முழுமையாகத் திரும்பிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். இந்தியாவின் அயல்நாடுகளை தன்பக்கம் இழுக்க சீனா முயற்சித்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை, சீனாவுடன் பிராந்தியத் தகராறுகளைக் கொண்ட நாடுகளைத் தன்பக்கம் இழுக்க இந்தியா முயற்சித்துக் கொண்டிருக்கிறது. சீனாவுக்கு எதிரான நாடுகள் குழுவுக்கு அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் ஆதரவு இருக்கிறது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது பதவிக்காலத்திற்கு தெரிவானால்...?

*திஸ்ஸரணி குணசேகர*



பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற ஒரு மாணவி இம்மாதம் இராணுவமுகாமொன்றில் இடம்பெற்ற தலைமைத்துவப் பயிற்சியில் பங்கேற்றபோது ஏழு அடி உயரமான சுவரில் இருந்து வீழ்ந்ததையடுத்து அவளது முள்ளந்தண்டில் காயம் ஏற்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அந்தச் சுவர் ஆக 6 அடி உயரத்தைக் கொண்டது என்று இராணுவப் பேச்சாளர் கூறினார். அவர் கூறுவதை நம்புவோமாக. சரி 6 அடி உயரமான சுவரில் இருந்து கீழே குதிப்பதில் என்ன தான் தலைமைத்துவப் பயிற்சி இருக்கிறதோ? இது என்ன ஆயுதமுனையில் கொள்ளை நடத்த அல்லது ஆட்களைக் கடத்த அல்லது சினிமா படத்தில் சண்டைக்காட்சியில் நடிக்கவா பயிற்சி அளிக்கப்படுகிறது?

மாணவர்களை இராணுவ முகாம்களுக்குள் அடைத்து சட்டத்தை மதிக்கின்ற சாதாரண வாழ்க்கைக்கு எந்தவிதமான தேவையுமில்லாத அர்த்தமற்ற பயிற்சிகளில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திப்பதன் தர்க்க நியாயம் தான் என்னவோ?

இந்த தலைமைத்துவப் பயிற்சித் திட்டம் ராஜபக்ஷ சிந்தனையினதும் ராஜபக்ஷ ஆட்சியினதும் கச்சிதமான ஒரு சின்னமாகும். இதனால் எவருக்கும் நன்மையில்லை. இந்த தலைமைத்துவப் பயிற்சியின் நோக்கங்கள் என்று கூறப்பட்டவற்றில் எந்தவொன்றையுமே இதுவரையில் அடையக்கூடியதாக இருக்கவில்லை.

மறுபுறத்தில், அருவருக்கத்தக்க பகிடிவதை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஒரேயொரு வித்தியாசம்-புதிய மாணவர்கள் முதலில் இராணுவத்தினாலும் பிறகு பழைய மாணவர்களினாலும் பகிடிவதைக்குட்படுத்தப்படுகிறார்கள். (தலைமைத்துவப் பயிற்சி எதிர்காலத்தில் பகிடிவதை செய்யப்போகிறவர்களுக்கு வக்கிரத்தனமான அனுபவ எல்லையை விஸ்தரிக்கக்கூடும். அடுத்த தொகுதி மாணவர்களை மேலும் தரக்குறைவான முறையில், பயங்கர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான முறையில், மனிதத் தன்மை யற்ற முறையில் கொடுமைப்படுத்து வதற்கு கற்றுக்கொடுப்பதாக இந்த தலைமைத்துவப்பயிற்சி அமைகி றது). தலைமைத்துவப் பயிற்சி நேரத் தையும் பணத்தையும் விரயம் செய் யும் ஒரு செயற்திட்டமாகும்.

ஆனால், அத்திட்டம் கைவிடப்ப டப்போவதில்லை. ஏனென்றால் அது கோதாபய ராஜபக்ஷவின் மூளையில் உதித்ததாகும். அதனைக் கைவிடுவ தென்பது ராஜபக்ஷாக்கள் தவறிழைக் கக்கூடும் என்பதை ஒத்துக் கொள்வ தற்குச் சமனாக அமைந்துவிடும். அவ்வாறு ஒத்துக்கொள்வதென்பது ராஜபக்ஷ ஆட்சியின் ஒரு முக்கிய கோட்பாட்டை-அதாவது ராஜபக்ஷா க்கள் தவறிழைக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தை- மீறுவதாகப் போய் விடும்.

மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது பத விக்காலத்துக்கு தேர்தலில் வெற்றி பெறுவாரேயானால், எத்தகைய எதிர் காலம் இலங்கையை காத்திருக்கிறது என்பதற்கான தெளிவான ஒரு எச்ச ரிக்கையாகவும் தலைமைத்துவப்ப யிற்சி அமைகிறது எனலாம். மகிந்த வெறுமனே மகிந்த அல்ல. மகிந்த என்பது பசில், கோதாபய, நாமல், சஷீந்திர, சகோதரங்கள், மருமக்கள், மைத்துனர்கள், உறவுக்காரர்கள் என்று அர்த்தப்படுகிறது. ஏவலர்கள் எப்போதுமே ஏவலர்கள்தான். சஜின் வாஸ் குணவர்த்தனாக்கள், சம்பத் சந் திர புஷ்பாக்கள், துமிந்த சில்வாக்கள் மற்றும் மேர்வின் சில்வாக்கள் (மகன் களும் சேர்ந்து) எப்போதும் இருப் பார்கள். கலபொட அத்தே ஞானசார தேரோக்களும் எப்போதும் இருப்பார் கள். அவர்கள் இல்லாமல் ராஜபக் ஷாக்களினால் ஆட்சிசெய்ய முடியாது.

**மகிந்த ராஜபக்ஷ விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தார். அவர் அதை தனியாக செய்யவில்லை. சரி அவ்வாறு தனியாகத்தான் செய்தார் என்று வைத்துக்கொள்வோமே. அதற்காக அவருக்கு மூன்றாவது பதவிக்காலத்தையும் கொடுக்க வேண்டும் என்பது ஒரு தர்க்க நியாயமாகி விடுமா?**

இதுவா நாங்கள் விரும்புகின்ற எதிர்காலம்? மகிந்த ராஜபக்ஷ மூன் றாவது பதவிக்காலத்துக்கு தேர்தலில் வெற்றி பெறுவாரேயானால், எமக்குக் கிடைக்கப் போகின்ற எதிர்காலம் இது தான்.

மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிக ளைத் தோற்கடித்தார். அவர் அதைத் தனியாகச் செய்யவில்லை. சரி அவ் வாறு தனியாகத்தான் செய்தார் என்று வைத்துக்கொள்வோமே. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தார் என்பதற் காக அவருக்கு மூன்றாவது பதவிக் காலத்தையும் கொடுக்க வேண்டு மென்பது ஒரு தர்க்க நியாயமாகி விடுமா? இரண்டாவது பதவிக் காலத் தில் அவரும் அவரது சகோதரர்களும் என்ன செய்தார்கள் என்பதை நன் கறிந்த பின்னரும் அவ்வாறு செய்ய லாமா?

வேண்டுமானால் மகிந்த ராஜபக் ஷவை தேசிய வீரபுருசனாக வர்த்த மானி மூலம் பிரகடனம் செய்யட்டும். அவரது மனம் ஆசைப்படு கின்ற சகல பாராட்டுக்களையும் தெரிவிக் கட்டும். ஒவ்வொரு அரசாங்க நிறுவ னத்துக்கும் அவரது பெயரைச் சூட் டட்டும். அவரது பிறந்த நாளை தேசிய விடுமுறை தினமாகப் பிரகட னப்படுத்தட்டும். அவரைக் கௌர வித்து வருடாந்தம் இராணுவ அணி வகுப்பை நடத்தட்டும். ஆனால், குடும்ப ஆட்சியை நிறுவனமயப் படுத்தக்கூடியதாக, அவரது குடும்பத் தைச் சேர்ந்தவர்களே நாட்டின் எதிர் காலத் தலைவர்களாகவும் தவிர்க்க முடியாதவகையில் வரக்கூடியதான ஏற்பாடுகளைச் செய்யக்கூடியதாக மூன்றாவது பதவிக்காலத்தை அவரு க்கு கொடுத்தலாகாது.

பூதத்தைக் கொன்றவருக்கு வெகும தியாக நாட்டைக் கொடுப்பது வேண் டுமானால் புனைகதைகளில் நடக்க லாம். இது உண்மையான வாழ்வு.

மகிந்த ராஜபக்ஷ சந்தேகத்துக்கிட மின்றி, ஒரு சினேகபூர்வமான மனி தர். நல்லது. நேச உணர்வு கொண்ட வர் என்று அவருக்கு வருடந்தோறும் வழங்கக்கூடியதாக வேண்டுமானால் ஒரு விருதை ஏற்படுத்தட்டும். ஆனால், அதுவெல்லாம் அவருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதற்கான போதுமான காரணங்களாகிவிடப் போவதில்லை. அவர் என்ன செய் வார்? எதைச் செய்வதற்கு சகோதரர் களையும் உறவினர்களையும் ஏவலர் களையும் அனுமதிப்பார்? என்பதைத் தெரிந்துகொண்டும் அவருக்கு வாக்க ளிப்பது தகுமா?

மகிந்த ராஜபக்ஷவினால் தேசிய சுயாதிபத்தியத்தைப் பாதுகாக்க முடி யாது. அவர் இலங்கையை சீனாவின் ஒரு நிருவாகப் பிராந்தியமாக (Protectorate) மாற்றும் நடவடிக்கைக ளில் இறங்கியிருக்கிறார். மகிந்த ராஜ பக்ஷவினால் சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அவர் தமி ழர்களுடன் இணக்கப்போக்கைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்ட அதே வேளை, முஸ்லிம்களையும் கிறிஸ்த வர்களையும் விரோதித்துக்கொள்கி றார்.

இன்னொரு சிறுபான்மையினத்து டன் இன்னொரு அநாவசியமான போரைத் தூண்டிவிட்டு மேலும் பல பத்தாண்டுகள் இரத்த ஆறை ஓட விட்டு அந்தப் போரில் வெற்றி பெறு வதன் மூலமாக மாத்திரமே மகிந்த ராஜபக்ஷவினால் நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கக்கூடி யதாக இருக்கும்.

சாதாரண மக்கள் (அவரது வாக் காளர் தளமான சொந்த சிங்கள மக் கள் உட்பட) பெரும் கஷ்டத்தில் உழல்கின்ற அதேவேளை, அதிவேக நெடுஞ்சாலைகளையும் விமான நிலையங்களையும் துறைமுகங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் நிர்மாணிப்பதே மகிந்த ராஜபக்ஷவின் அபிவிருத்திச் சிந்தனையாகும்.

எமக்கு ராஜபக்ஷாக்கள் வேண்டுமா? ராஜபக்ஷாக்கள் என்றால் அந்த ராஜபக்ஷவோ இந்த ராஜபக்ஷவோ என்றில்லை. எல்லா ராஜபக்ஷாக்களும் தான். ஏனென்றால் குறைந்தபட்சம் மேலும் ஒரு 6 வருடங்களுக்கு இலங்கையை ஆட்சி செய்ய வேண்டுமென்பது அவர்களைப் பொறுத்தவரை ஒரு குடும்ப வாணிபம்.

கோதாபய ராஜபக்ஷவை நாம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவர வேண்டுமா? சகோதரர் வசிக்கும் பதவிக்கு கோதாபய பிறகு வருவதற்கு இவ்வாறாக சட்டபூர்வமாகவும் அரசியல் யாப்பு ரீதியாகவும் வழி ஏற்படுத்திக் கொடுக்க விரும்புகிறீர்களா?

நீதித்துறை முற்றுமுழுவதுமாக தரம் தாழ்த்தப்படுவதை நாம் விரும்புகின்றோமா? நீதிபதிகள் ஆட்சியாளர்களின் பகடைக் காய்களாக மாறுவதை நாம் விரும்புகின்றோமா?

மோசமான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களும் மனித உரிமைகளை மீறுபவர்களும் சட்டத்தில் இருந்து விடுபாட்டுரிமை பெற்றவர்களாக சுதந்திரமாக நடமாடுவதும் ஊழலும் முறைகேடும் அதிகார துஷ்பிரயோகமும் தான் வழமை வாழ்வு என்று எமது எதிர்காலச் சந்ததி நினைக்கக் கூடியதுமான சூழ்நிலை தோன்றுவதற்கு வழிவகுத்துக்கொடுக்க விரும்புகின்றோமா?

பொருளாதாரமும் சிவில் சமூகமும் எமது மனங்களும் இராணுவமயமாவதை விரும்புகின்றோமா? நலிவுற்றவர்களை இகழ்ச்சி செய்கின்றதும் பலம்பொருந்தியவர்களையும் அதிகாரமுடையவர்களையும் வழிபடுகின்றதுமான ஒரு வாழ்க்கை முறை நடத்தையை நாம் விரும்புகின்றோமா?

தேசிய செல்வத்தின் பெரும்பகுதியை பாதுகாப்புத்துறைக்குச் செலவிடுகின்ற அதேவேளை சிறுவர்களையும் வயோதிபர்களையும் சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினரையும் பாதுகாக்க முடியாத ஒரு நாட்டை விரும்புகின்றோமா?

ஆட்சியாளர்களுக்கு ஏவல்வேலை செய்யும் பேர்வழிகளின் கட்டுப்பாட்டிலான ஒரு முதாளித்துவத்தையும் அடிமைத்தனமான ஒரு நிருவாகத்தையும் நாம் விரும்புகின்றோமா? தம்மிக பெரேராக்களினால் வழிநடத்தப்படுகின்ற ஒரு பொருளாதாரத்தை விரும்புகின்றோமா? கிறிஸ் நோனிசுகளை சஜின்வாஸ் குணவர்த்தனாக்



கள் நையப்புடைக்கின்ற ஒரு 'இராஜதந்திர நடைமுறையை' நாம் விரும்புகின்றோமா?

ராஜபக்ஷாக்களுக்கு அடிமைத்தனமான விசுவாசத்தைக் காட்டுவதன் மூலமாக மாத்திரமே பொருளாதார மேம்பாட்டையும் பாதுகாப்பையும் எவரும் பெறக்கூடிய ஒரு நாட்டை விரும்புகின்றோமா?

பிராந்திய வல்லரசுகளினதும் உலக வல்லரசுகளினதும் சமர்க்களமாக இலங்கை மாறுவதை விரும்புகின்றோமா? சிங்களவர்கள் நிலைபேறான சமாதானத்தை விரும்புகின்றார்களா அல்லது இன்னொரு சிறுபான்மையினத்துடன் போரை விரும்புகிறார்களா?

இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் மரியாதைக் குறைவாகவும் அதிகாரமின்றியும் பாதுகாப்பின்றியும் வாழ்வதற்கு தமிழர்கள் விரும்புகின்றார்களா?

புதிய தமிழர்களாக மாறுவதற்கு முஸ்லிம்கள் விரும்புகின்றார்களா?

இரண்டாந்தரப்பிரஜைகள் போன்று வாழ்வதற்கு கிறிஸ்தவர்கள் விரும்புகின்றார்களா?

ராஜபக்ஷாக்களை ஆட்சியதிகாரத்திலிருந்து அகற்றுவது இலங்கையின் சகல பிரச்சினைகளையும் தீர்த்துவிடப்போவதில்லை. ஆனால், அவர்களை ஆட்சியதிகாரத்திலிருந்து அகற்றாமல் இலங்கையின் பிரச்சினைகளில் அதிகப்பெரும்பாலானவற்றுக்கு தீர்வுகாண முடியாது என்பது மாத்

**பொருளாதாரமும் சிவில் சமூகமும் எமது சிந்தனைகளும் இராணுவமயமாவதை விரும்புகின்றோமா? ஆட்சியாளர்களுக்கு ஏவல் வேலை செய்யும் பேர்வழிகளின் கட்டுப்பாட்டிலான ஒரு முதலாளித்துவத்தையும் அடிமைத்தனமாக ஒரு நிருவாகத்தையும் நாம் விரும்புகின்றோமா? பிராந்திய வல்லரசுகளினதும் உலக வல்லரசுகளினதும் சமர்க்களமாக இலங்கை மாறுவதை விரும்புகின்றோமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரம் உண்மை.

ஒவ்வொரு வருடமும் கடந்துசெல்லும் போது ராஜபக்ஷாக்களைத் தோற்கடிப்பதென்பது பெருங்கஷ்டமான காரியமாக மாறிக்கொண்டுவருகிறது. ராஜபக்ஷாக்கள் கூடுதலான எவுக்கு மக்கள் செல்வாக்குடையவர்களாக மாறிக்கொண்டு வருகிறார்கள் என்பதல்ல அதற்குக் காரணம். தேர்தல்களில் தங்களுக்கு எதிரானவர்களுக்கு அனுகூலமற்றதாக அரசியல் சூழ்நிலையை மாற்றுவதில் அவர்கள் மிகுந்த தந்திரமாகச் செயற்பட்டுக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பது தான் காரணம்.

பொருளாதார கஷ்ட நிலை காரணமாக மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீது வெறுப்பு அதிகரித்துக் கொண்டு வருகிறது. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட ஆய்வொன்று இதனை தெளிவாக வெளிக்காட்டுகிறது. இது எதிரணிக்கு வாய்ப்பான சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு எண்ணிக்கையை இரண்டாவது சுற்றுக்கு தள்ளுவதற்கு ஒரு அருமையான வாய்ப்பு இதனால் கிட்டலாம். எதிரணி ஒரேயடியாக தீர்க்கமான வெற்றியைப் பெறவேண்டுமென்று அவசியமில்லை. அத்தகைய தொரு வெற்றியை ராஜபக்ஷாக்கள் பெறுவதைத் தடுப்பதே போதுமானதாகும். ஏனென்றால் அதனால் அரசியல் சுனாமியொன்றை (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும்) தோற்றுவிக்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷாக்கள் வெற்றிபெறுவார்களேயானால், எதிரணியில் இருக்கக்கூடிய வலிமை பொருந்திய அரசியல்வாதிகளை வலுவிழக்கச் செய்யும் கைங்கரியங்களில் துரிதமாக இறங்குவார்கள். தாக்குதல்கள், கைதுகள், அவதூறுகள், குற்றச்சாட்டுக்கள் மற்றும் உட்பூசல்களினால் எதிரணி நெருக்குவாரப்பட்டுக் கொண்டிருக்கும்போது ராஜபக்ஷாக்கள் தங்களுக்கு அனுகூலமான நிலைமைகளின் கீழ் பாராளுமன்றத் தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும். ஒரு ராஜபக்ஷ பிரதமர் பதவியின் கதிரையில் அமரும்போது, குடும்ப ஆட்சிக்கு இருந்திருக்கக் கூடிய ஒரேயொரு அனுகூலமற்ற நிலையும் அகற்றப்படுவதாக அமையும்.

ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலத்தின்போது தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாழ்க்கை நிலைமைகள் மேம்படவில்லை. ஆனால், அந்தப் பதவிக்காலத்தின் போது சிங்களப் பெரும்பான்மையினத்தவரின் வாழ்க்கை நிலைமை என்ன மேம்பட்டதாகவா, மகிழ்ச்சிகரமானதாகவா மாறியது? போரின் போதும் அதன் முடிவுக்குப் பிறகும் இழைக்கப்பட்ட அட்டூழியங்களைப் பற்றி சிங்கள தெற்கிற்கு அக்கறையில்லாமல் இருந்திருக்கலாம். தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பிரச்சினைகள் மற்றும் பீதிகள் குறித்து சிங்கள தெற்கு அலட்சியமாக இருந்திருக்கக்கூடும். ஆனால், ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலத்தின் போது சிங்கள தெற்கின் நிலைமைகள் மேம்பாட்டை கண்டிருக்கின்றனவா? 2010 ஆம் ஆண்டில் இருந்ததைவிட சிங்களவர்கள் தற்போது கூடுதலான அளவுக்கு சமூக-பொருளாதார ரீதியில் சிறப்பான வாழ்க்கையையா அனுபவிக்கிறார்கள்? தங்களது எதிர்காலம் குறித்து நம்பிக்கையுணர்வு கொண்டவர்களாகவா அவர்கள் இன்று இருக்கிறார்கள்? நாட்டை ராஜபக்ஷாக்கள் வழிநடத்துகின்ற முறை குறித்து சிங்களவர்கள் மகிழ்ச்சி கொண்டவர்களாகவா இருக்கிறார்கள்? இறந்துபோன அல்லது கண்ணுக்குப் புலப்படாத எதிரியைக் காரணம் காட்டி ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்காக சுபிட்சமான எதிர்காலத்துக்கான வாய்ப்பையும் அடிப்படை உரிமைகளையும் தியாகம் செய்ய சிங்களவர்கள் முன்வருகிறார்களா?

உண்மையான பிரச்சினைகளில் இருந்து எமது கவனத்தைத் திசை திருப்ப புலிகளைப் பற்றியும் ஜிஹாதிகளைப் பற்றியும் துரோகிகள் மற்றும் சதிகாரர்கள் பற்றியும் கூச்சல் போட்டு ராஜபக்ஷாக்கள் எமது சிந்தனையைக் குழப்பியடிக்க முயற்சிப்பார்கள்.

இத்தகைய ஒரு ராஜபக்ஷ எதிர்காலத்தை நாம் விரும்புகின்றோமா? ■

---

*(24ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

யாழ்ப்பாணத்தில், அவரது கூட்டமைப்பு மற்றும் அவர் சார்ந்த தமிழரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமை குறித்து தெரிவித்த கருத்துகள் தவிர்க்கப்பட்டிருக்கவேண்டும். இது குறித்து தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் அதிகமாக தெரிந்திருக்கவில்லை என்றாலும், அதனை மறுத்து விட முடியாது.

இதுபோன்றே, கடந்த பல மாதங்களாகவே, முதல்வர் விக்னேஸ்வரன் தலைமை மற்றும் கூட்டமைப்புத் தலைமையின் அறிவுரைக்கும் எதிராக, கூட்டமைப்பைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் நிறைவேற்றி வரும் பல்வேறு தீர்மானங்கள் ஒரு விதத்தில் நகைப்பிற்கிடமாகவும் மற்றொரு வகையில் கவலைப்பட வைக்கக்கூடிய விடயமாகவும் மாறி வரும் நிலையும் முக்கியமாக தவிர்க்கப்பட வேண்டியது. இதுவே, எதிர்வரும் காலத்தில், உள்நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் பிரசார உத்தியாக மாறிவிடும் வாய்ப்பு உள்ளது. சர்வதேச அரங்கில், அதிரடியாக குறைந்துவரும் கூட்டமைப்பு தலைமையின் ஆளுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக மாறிவிடும் அபாயமும் உள்ளது. இதனை மாற்றுவதே,கூட்டமைப்பு மற்றும் முதல்வர் விக்னேஸ்வரனின் முதல் கடமை. இந்தியப் பயணம் உட்பட்ட அனைத்து விடயங்களும் காலம் தாழ்ந்தால் தவறில்லை! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்நாட்டு அரசியல்**



என்.சத்தியமூர்த்தி

**சென்னையில் கண்ணபிரான் நினைவுச் சொற்பொழிவிலும் பத்திரிகையாளர் சந்திப்பிலும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளின் இராணுவ மயமாக்கல், தொடரும் தமிழர் உரிமைப்பறிப்பு ஆகியவை குறித்தே பிரதானமாக பேசினார். தமிழர்களுக்கு உரிமைகளையும் மரியாதையையும் பெற்றுத்தருவதில் இந்தியாவுக்கு சட்ட ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் பொறுப்பும் கடமையும் உள்ளது என்பது அவரது வலியுறுத்தல்**




# விக்னேஸ்வர விஜயம்

கடந்தமுறை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள், புதுடில்லி சென்று இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேசிய போது, வட மாகாண முதல்வர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் உடன் செல்லவில்லை. தற்போது, அவர் தமிழ் நாடு சென்றதன் மூலம், தனது அரசின் முதல் வருடம் முடிந்த தறுவாயில், தனது வெளிநாட்டுப் பயணங்களுக்கு 'பிள்ளையார் சுழி' போட்டிருக்கிறார்.

ஒருவகையில், விக்னேஸ்வரனின் இந்த விஜயம், தனது ஆட்சியின் முதலாவது ஆண்டு பூர்த்தி அடைவதைக் கொண்டாடும் விதமாக, ஆண்டவனுக்கு நன்றி அறிவிக்கும் செயலாக இருந்தது. தென் தமிழ் நாட்டில் புதுக் கோட்டை மாவட்டத்தில் உள்ள 'பிரேமானந்தா ஆசிரமம்' மற்றும் திருப்பதி வெங்கடாசலபதி கோவில் ஆகிய இடங்களில் அவர் தரிசனம் செய்தார். அதிலும் குறிப்பாக, திருப்பதியில், முதல்வர் விக்னேஸ்வரன் சுவாமி தரிசனம் செய்வதற்கு முந்தைய தினம், இலங்கைப் பிரதமர் ஜயரத்ன வழிபாடு நடத்தியது குறிப்பிடத்தக்கது.

பிரேமானந்தா ஆசிரமத்திற்கு, நீதியரசர் விக்னேஸ்வரன் விஜயம் செய்தது, அவருடைய தனிப்பட்ட நம்பிக்கை குறித்த விடயம் தான். ஆனால், குற்றச் செயல்களுக்காக தண்டனை அனுபவித்து வந்த சுவாமி பிரேமானந்தா தொடங்கிய ஆசிரமத்திற்கு, மரியாதைக்குரிய விக்னேஸ்வரன் விஜயம் செய்தது, தமிழ்நாட்டில் உள்ள நடு வயதினருக்கும், குறிப்பாக பெண்களுக்கும், நெருடலாக அமைந்தது கண்கூடு.

இலங்கைப் பிரஜையான பிரேமானந்தாவிற்கு, இந்தியாவில் முதல் முறையாக அதிகபட்சமாக 32 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. அந்தத் தண்டனையை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது. அந்தத்தண்டனையை அனுபவித்து வரும்போது, பிரேமானந்தா சிறையிலேயே உயிர்விட்டது போன்ற சம்பவங்கள், தமிழ் நாட்டில் நடுத்தர வயதினர் அனைவரும் அறிந்து, இன்றும் நினைவு கூரும் விடயம். ஆனால், இந்தப் பின்னணியை வைத்து மட்டுமே விக்னேஸ்வரனின் இந்த விஜயத்தை எடை போட்டு விடக்கூடாது.

### பிரதமரும் இல்லை முதல்வரும் இல்லை

இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்வதில் முக்கிய அம்சமாகக் கருதப்படுவதே, அவர்கள் தலைநகர் புதுடில்லியில் அப்போதைய பிரதமரைக் கண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தை நடத்துவது தான். அந்த வகையில், விக்னேஸ்வரன் தவிர்ந்த கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள், இந்திய விஜயத்தில் தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவுத் துறைச் செயலர் சுஜாதா சிங் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

இன்னும் சொல்லப்போனால், சம்பந்தன் உட்பட்ட கூட்டமைப்புத் தலைவர்களின் புதுடில்லி விஜயமே பிரதமர் மோடியுடனான சந்திப்பை ஒட்டியே திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த அளவிற்கு, முதல்வர் விக்னேஸ்வரனின் விஜயம் முழுமையாகத் திட்டமிடப்படவில்லை எனலாம். பிரதமர் மோடியுடனான சந்திப்பு காலம் தாழ்ந்த போதிலும், அவர் தனது தமிழ் நாடு பயணத்தை ஒத்திப்போடவில்லை. சம்பந்தன் தலைமையிலான குழுவாகட்டும், தற்போது முதல்வர் விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் நாடு விஜயம் மேற்கொண்ட கட்சித் தலைவர்கள் ஆகட்டும், இரு குழுவினருமே, தமிழ் நாட்டில் முக்கிய திராவிடக் கட்சித் தலைமைகள் எவரோடும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. ஆனால், இரு தரப்பினருமே, மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தரப்பினருடன் ஆலோசனை நடத்தினர் எனலாம். ஆனால், ஆண்டாண்டு காலமாக, ஏன் கூட்டமைப்புத் தலைமை, அப்போதெல்லாம் மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு கிளைத் தலைவர்களுடன் பேசவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

தமிழ் நாடு அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில், கடந்த மே மாத பாராளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றிக்குப் பிறகு, ஆளும் அ.இ.அ.தி.மு.க முதல்வர் ஜெயலலிதாவிற்கு, கூட்டமைப்புச் சார்பாக நீதியரசர் விக்னேஸ்வரன் வாழ்த்துத் தெரிவித்து கடிதம் எழுதினார். தங்களைச் சந்திக்க நேரம் ஒதுக்குமாறும் அந்தக் கடிதத்தில், அவர் கோரியிருந்தார். அந்தக் கடிதத்திற்கு பதில் கிடைத்ததாக தகவல் இல்லை. தற்போது ஊழல் வழக்கில் பதவி இழந்துள்ள ஜெயலலிதாவை தொடர்ந்து முதல்வராகியுள்ள பன்னீர்செல்வத்தையும் சந்திக்க நீதியரசர் விக்னேஸ்வரன் முயற்சிக்கவில்லை.


இந்த முடிவு ஏற்புடையதே. ஏன், பெங்களூர் நீதிமன்றத்தில் ஊழல் வழக்கு விசாரணை உச்சக்கட்டத்தில் இருந்தபோதே, முதல்வர் ஜெயலலிதாவை சந்திக்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தது முரண்பாடாகவே தெரிந்தது. பின்னர், ஜெயலலிதா பதவி இழந்து, பன்னீர் முதல்வரானாலும், அவரது ஆட்சியின் பின்னால் முன்னவரே சூத்திரதாரியாக இருந்து வருகிறார். கூட்டமைப்புத் தலைமையைச் சந்திப்பதற்கு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில் இசைவு தெரிவிக்காத நிலையில், அந்த முடிவிலிருந்து பன்னீர்செல்வம் மாறி செயல்படுவார் என்று எதிர்பார்க்கவே முடியாது.

எது எப்படியோ, பிரதமர் மோடியையும், ஜெயலலிதாவையும், விக்னேஸ்வரன் தரப்பினர் சந்திக்க முடியாத காரணத்தினால், இந்தியாவில் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் விக்னேஸ்வரன் விஜயம் பின்தள்ளப்பட்டது என்பதே உண்மை. அதுவும், உணர்வுபூர்வ அரசியலை முன்வைத்து இலங்கை இனப்பிரச்சினைக்கு அதிக நேரம் ஒதுக்கும், தமிழ் நாட்டில் உள்ள தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் கூட, எதிர்பார்த்த அளவிற்கு விக்னேஸ்வரனின் பொது நிகழ்சிகளுக்கு நேரம் ஒதுக்கவில்லை. இதுவே, தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் பொருந்தும்.

இவ்வளவும் போதாது என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன், தமிழ் நாட்டில் பொது நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய நாளில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் நரேந்திர மோடியுடன் தொலைபேசியில் பேசியதே, தமிழ்நாடு பத்திரிகைகளில் முக்கிய செய்தி ஆயிற்று. போதைப் பொருள் கடத்தல் வழக்கில், இலங்கை நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் தொலைபேசியில் பேசியதே தமிழ் நாடு மக்களுக்கும், மாநில அரசிற்கும், எனவே பத்திரிகைகளுக்கும் அதி முக்கியமான தவிர்க்க முடியாத விடயம்.

### போட்டி அரசியல்

ஜெயலலிதா உட்பட்ட தமிழ் நாடு அரசியல் தலைமைகள், அடுத்தவர்களை வைத்து ஆதாயம் தேட முயற்சிப்பார்களே தவிர, தாங்கள் காரணமாக புகழும், நல்லெண்ணமும் மற்றொரு அரசியல் தலைவரைச் சென்றடைய தளம் அமைத்துக் கொடுக்க மாட்டார்கள். இலங்கை இனப்பிரச்சினை அரசியலில் யார் பெரியவர்,



**சென்னையில் நவம்பர் 09, 2014 கண்ணபிரான் நினைவு சொற்பொழிவின் போது தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி சக் யாக்கோப்புடன் முதலமைச்சர் விக்னேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தமிழ் நாட்டின் உள்ளேயே போட்டியிட்டு வரும் அவர்கள் யாருமே, தங்களது ஆதரவால், தமிழ் நாட்டு மக்களின் நல்லெண்ணம், கூட்டமைப்பிற்கோ, முதல்வர் விக்னேஸ்வரனுக்கோ சென்றுவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

இதுவே, இனப்பிரச்சினையை வைத்து தமிழ்நாட்டின் திராவிடக் கட்சிகள் அடித்துக்கொள்ளும் அரசியலுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. தற்போது, மாநில பாரதிய ஜனதாக் கட்சியும், காங்கிரஸ் கட்சியிலிருந்து அண்மையில் பிரிந்து சென்ற முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே வாசன் தலைமையிலான குழுவும் இந்தப் போட்டி அரசியலில் குதித்துள்ளது இலங்கைத் தமிழ் மக்களின் துரதிர்ஷ்டமே.

இவற்றிற்கு அப்பால் சென்று நோக்கும் போது, பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் தவிர்ந்த மாநிலக் கட்சிகளின் 'இலங்கை இனப்பிரச்சினை அரசியல்' கொள்கை ரீதியாகவும் கூட்டமைப்பின் நிலைப்பாட்டிலிருந்து வெகுவாகவே மாறி நிற்கிறது என்பதே உண்மை. இலங்கை அரசுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை தொடர்ந்து முன்வைத்து வந்தாலும், கூட்டமைப்பு 'ஐக்கிய இலங்கை' என்ற எண்ணத்தைக் கைவிடவில்லை. சென்னையில் மனித உரிமை குறித்த ஒரு மகாநாட்டில் உரை நிகழ்த்திய போதும், பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பிலும், விக்னேஸ்வரன் தொடர்ந்து இதனை வலியுறுத்தினார்.

ஆனால், தமிழ்நாட்டில் ஆளும் அ.இ.அ.தி.மு.க, எதிர்க்கட்சியான தி.மு.க உட்பட்ட அனைத்து திராவிடக் கட்சிகளுமே, இலங்கையில் 'தனி நாடு' கோரிக்கைக்கு ஆதரவாகவே செயல்பட்டு வந்துள்ளன, கோரிக்கை எழுப்பி வருகின்றன. அனைத்து கட்சி ஆதரவுடனும் தமிழ் நாடு சட்டப் பேரவையில் ஜெயலலிதா அரசு நிறைவேற்றிய தீர்மானம் கூட, தனி நாட்டிற்கு ஆதரவாக உலகளாவிய இலங்கைத் தமிழர் சமூகத்தினர் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றே கூறியது. அத்தகைய வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், தனி நாடு கோரிக்கை வெற்றிபெறும் என்பதே அவர்களது எதிர்பார்ப்பு மற்றும் அசைக்க முடியாத நம்பிக்கையும் கூட.

அந்தவகையில், கூட்டமைப்பின் 'ஐக்கிய இலங்கை' கோட்பாட்டுடன் எந்தவொரு திராவிடக் கட்சிக்கும் உடன்பாடில்லை. அதற்கும் அப்பால் சென்று, கூட்டமைப்பிற்கு ஆதரவு அளித்து, அதன் தலைவர்களுக்கு தமிழ் நாட்டில் களம் அமைத்துக் கொடுத்தால், எங்கே இனப்பிரச்சினை தொடர்பான தங்களது அரசியல் செயலற்றுப் போய்விடுமோ என்ற கவலையும் அவர்களுக்கு உண்டு. அதைவிடவும், இந்தக் கட்சிகளுக்கு விடயதானம் செய்து வரும் புலம்பெயர்ந்த தமிழ் குழுவினருக்கு, தமிழ் நாட்டில் கூட்டமைப்பின் கோட்பாடுகளுக்கு ஆதரவு கிடைத்துவிடக்கூடாது என்பதில் அதிக நாட்டம் உள்ளது.

## சொன்னது என்ன?

தமிழ்நாட்டிற்கு தனிப்பட்ட விஜயம் மேற்கொண்ட முதலமைச்சர் விக்னேஸ்வரன், இரண்டு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். ஒன்று, இந்தியாவின் 'மக்கள் பொது உரிமைக்கழகம்' சார்பில் தலைநகர் சென்னையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் 'கண்ணபிரான் நினைவுச் சொற்பொழிவு' ஆற்றியது. அடுத்த தினம், சென்னையில் அவரது பத்திரிகையாளர் சந்திப்பு. இரண்டாவது நிகழ்வில், விக்னேஸ்வரனுடன், அவர் சார்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் வட மாகாணசபை அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன், கூட்டமைப்பின் பிற உறுப்புக் கட்சிகளைச் சார்ந்த எந்தவொரு தலைவரும் கலந்து கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அது போன்றே, முதல்வரின் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டவர்களில், மனித உரிமை கழகத் தலைவர் சுரேஷும் குறிப்பிடத்தக்கவர். அவர் ஒரு இந்தியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கண்ணபிரான் நினைவு சொற்பொழிவிலும் சரி, பத்திரிகையாளர் சந்திப்பிலும் சரி, முதல்வர் விக்னேஸ்வரன் சில குறிப்பிட்ட அம்சங்களைச் சுட்டிக்காட்டி பேசினார். இலங்கைத் தமிழர் பகுதிகளில் இராணுவமயமாக்கல், தொடரும் தமிழர் உரிமை மறுப்பு மற்றும் பறிப்பு ஆகியவை குறித்து பேசிய அவர், தமிழர்களுக்கு உரிய உரிமைகளையும், மரியாதையையும் பெற்றுத் தருவதற்கு, இந்தியாவிற்கு சட்டரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் பொறுப்பும் கடமையும் உள்ளது என்று கூறினார்.

அதேசமயம், இந்தியாவின் உந்துதலால் கடந்த 1987ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பதின்மூன்றாம் சட்டத் திருத்தம் தமிழர்களுக்கு முடிந்த முடிவான அரசியல் தீர்வு அல்ல என்ற கூட்டமைப்பின் கொள்கையையும் அவர் வலியுறுத்தினார். இருந்தும் அந்த பதின்மூன்றாம் திருத்தத்தைக் கூட இலங்கை அரசு செயல்படுத்தவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நினைவுச் சொற்பொழிவில் பேசிய விக்னேஸ்வரன், இந்தியாவில் உள்ள நக்சலைட் தீவிரவாதிகள் குறித்து கோடிட்டுக் காட்டிய விடயம் நெருடலாக இருந்தது. அதிலும் குறிப்பாக, நக்சலைட்டுகளுக்கு ஆதரவாகச் செயல்பட்ட சட்ட வல்லுனர் கண்ணபிரானின் நினைவுச் சொற்பொழிவை அவர் ஆற்றியது தவறுதலாகப் புரியப்படவல்லது. அதை விட முக்கியமாக, ஐ. நா மனித உரிமைக் குழு முன்பு, இலங்கை குறித்த விவகாரத்தில் இந்தியாவின் மாற வேண்டிய அணுகுமுறை குறித்து மற்றொரு நாட்டில் ஒரு மாகாண முதலமைச்சராக இருக்கும் முன்னாள் நீதியரசர் பேசியது, இராஜரீக ரீதியாக தவறான முன்னுதாரணமாக அமைந்தது என்று கருதுவோரும் உள்ளனர்.

இவற்றிற்கெல்லாம் அப்பால் சென்று, முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்தியப் பயணம் மேற்கொண்ட கிழமையில், மாகாண தலைநகர்

*(21ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



பேராசிரியர்
எஸ்.ஐ.கீதபொன்கலன்

# ஜனாதிபதி தேர்தலில் விருப்புவாக்கு எண்ணிக்கை சாத்தியப்பாடுகள்

முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களில் மிகவும் நெருக்கமான போட்டி இடம்பெற்றவற்றில் கூட எப்போதுமே தெளிவான வெற்றியாளர்கள் இருந்த படியால் இலங்கையில் ஒரு போதுமே விருப்பு வாக்குகள் எண்ணப்படவில்லை. அதனால் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் விருப்பு வாக்குகளின் இலக்கங்கள் மாதிரிகளை பற்றி இலங்கை மக்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால் இத்தடவை நிலைமை வேறுப்பட்டதாக இருக்கக்கூடும்

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தல் குறித்து அண்மையில் நான் எழுதிய கட்டுரையொன்றில் மூன்றாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆணையைக் கேட்கும் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முயற்சி சுலபமானதாக இருக்கப்போவதில்லை, போட்டி மிகவும் கடுமையானதாகவே இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தேன். ஜனாதிபதிக்கு சிறுபான்மையினத்தவர்கள் மத்தியில் போதுமான ஆதரவு இல்லை என்பதே எனது இந்த நிலைப்பாட்டுக்கான முக்கியகாரணமாகும். சிறுபான்மையினத்தவர்களின் ஆதரவு குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லாத நிலையில், சிங்கள வாக்காளர்களில் 65 சதவீதமானவர்களின் ஆதரவை அவர் பெறவேண்டிய தேவை இருக்கிறது. தற்போதைய சூழ்நிலையின் கீழ் சிங்களவர்கள் மத்தியில் இருந்து ஜனாதிபதி அத்தகைய பேராதரவைப் பெறுவதென்பது இலேசான காரியமாக இருக்கப்போவதில்லை. எனவே, விரும்பியோ விரும்பாமலோ அவர் சிங்கள- பௌத்த வாக்குகள் முழுவதையும் தனதாக்கிக் கொள்வதற்காக தேசியவாதத்தைப் பிரதான ஆயுதமாகக்கொண்டு தீவிரமான பிரசாரத்தைச் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

சிங்கள- பௌத்த சமூகத்தின் மத்தியில் இருந்து கூட ஜனாதிபதி பிரச்சினைகளை எதிர்நோக்கக்கூடும் என்பதையே கொழும்பில் தற்போது கட்டவிழும் அரசியல் நிகழ்வுப் போக்குகள் உணர்த்துகின்றன. அதனால், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் மிகமிக கடுமையானதாகவே இருக்கப்போகிறது என்பதில் சந்தேகமில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவின் தீவிரமான ஆதரவுச் சக்தியாக இதுவரை விளங்கிவந்த ஜாதிகஹெல உறுமயவின் அண்மைக்கால அரசியல் செயற்பாடுகளின் விளைவாகவே இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது. இலங்கையில் தர்ம இராச்சியம் ஒன்றைத் தோற்றுவிக்கும் இலக்குடன் அரசியல் களத்தில் இறங்கிய ஜாதிகஹெல உறுமய 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக மகிந்த ராஜபக்ஷ கட்டியெழுப்பிய பரந்த கூட்டணியில் முதலில் இணைந்து கொண்ட அரசியல் கட்சிகளில் ஒன்று. பௌத்த பண்பு விழுமியங்களையும் கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவினால் மிக அண்மைக்காலம் வரை ஜனாதிபதிக்கு விசுவாசமாக இருக்க முடிந்தது.

ஒரு தனிநபரிடம் அதாவது ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடம் அளவுக்கும் அதிகமான அரசியல் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டுகின்ற ஜாதிக ஹெல உறுமயவின் சக்திமிக்க தலைவர்களில் ஒருவரான அத்துரலியே ரத்தின தேரர் சில வகையான மாறுதல்களுடன் பாராளுமன்ற ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கு அரசியலமைப்பை மாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு கொழும்பு மேல்தட்டு வர்க்கத்தவர்கள் மத்தியில் அதிகரித்துவருகின்ற ஆதரவின் பிரதிபலிப்பாகவே இது இருக்கக்கூடும். குறைந்த பட்ச உறுப்பினர்களைக் கொண்டதாக அமைச்சரவை இருக்க வேண்டும் என்பது போன்ற வேறு கோரிக்கைகளையும் அக்கட்சி முன்வைத்திருக்கிறது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்கு ஜாதிகஹெல உறுமய முன்வைக்கின்ற முன்னிபந்தனைகள் போன்று இந்தக் கோரிக்கைகள் தொனிக்கின்றன என்பதே இங்கு முக்கியமாகக் கவனிக்கப்படக்கூடிய ஒரு அம்சமாகும்.

**மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாபதிக்கு இருக்கின்ற தகுதிபற்றி கிளப்பப்படுகின்ற சர்ச்சைகள் நடைமுறையில் தாக்கத்தைக் கொண்டிருக்கப் போவதில்லை. ஏனென்றால் ஜனாதிபதியில் தகுதியீனம் பற்றிய வாதத்தின் சட்ட ரீதியான தாக்கங்கள் குறித்து பொருட்படுத்தாமல் அவர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கான தீர்மானம் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு விட்டது.**

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கும் அத்துரலியே ரத்தின தேரர், மாற்றங்கள் செய்யப்படாவிட்டால், தாங்கள் ஜனாதிபதி ராஜபக்ஷவை அரசியல் ரீதியில் தோற்கடிக்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கை செய்திருப்பதாக இலங்கையின் முன்னணி வாரப்பத்திரிகையொன்றின் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது. தேரரின் செய்தியின் தொனியை நோக்கும் போது, அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதற்கு ஜாதிக ஹெல உறுமய ஏற்கனவே தீர்மானத்தை எடுத்து விட்டு, வெறுமனே அரசியல் அனுகூலத்துக்காக அரசியலமைப்பு மாற்றம் என்ற கோரிக்கையை வலியுறுத்துகிறதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஒரு மூன்றாவது வேட்பாளர், அதாவது பொதுவேட்பாளர் குறித்தும் அந்தக் கட்சி பேசிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. எவ்வாறெனினும் இந்தப் பிரச்சினை மீது அரசாங்கத்திலிருந்து ஜாதிக ஹெல உறுமய வெளியேறுமா இல்லையா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். மறுபுறத்தில் அரசியல் சீர்திருத்தங்களைக் கோருபவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அரசியலமைப்பை மாற்றுவதற்கான மன நிலையில் அரசாங்கம் இல்லை. இருதரப்பினரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு அல்லது விட்டுக்கொடுப்புக்கு வரத் தவறும்பட்சத்தில், அவமானப்படுவதிலிருந்து தந்திரமாகத் தப்பித்துக்கொள்ளும் ஒரு வழிமுறையாக ஜாதிகஹெல உறுமய ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்காமல் இருக்க நிர்ப்பந்திக்கப்படக் கூடும். அக்கட்சியின் ஆதரவு இல்லாவிட்டால், அது அரசாங்கத்துக்கு ஒரு பாரதூரமான அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனென்றால் சிங்கள- பௌத்த வாக்குகளில் வீழ்ச்சி ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. தற்போதைய தருணத்தில் ஜாதிகஹெல உறுமயவின் வாக்கு வங்கி வலிமையுடையதாகவோ அல்லது முக்கியமா னதாகவோ தோன்றவில்லை. ஆனால், அது அரசாங்கத்தின் தோற்றப்பாட்டை பேணிப்பாதுகாப்பதற்கு அடையாள பூர்வமான முறையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மூன்றாவது பதவிக்காலத்துக்கு தேர்தலில் போட்டியிடுவதில் ஜனாதிபதிக்கு இருக்கின்ற தகுதி தொடர்பில் கிளப்பப்பட்டிருக்கும் சர்ச்சை அரசாங்கத்தின் வாக்குகளைக் குறைக்கக் கூடிய இன்னொரு புதிய பிரச்சினையாகும்.

மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதிக்கு தகுதியில்லை என்று சில அரசியலமைப்பு நிபுணர்களும் சட்டத்துறை புலமையாளர்களும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அது நடைமுறையில் தாக்கத்தைக் கொண்டிருக்கப் போவதில்லை. ஏனென்றால், ஜனாதிபதியின் தகுதியீனம் பற்றிய வாதத்தின் சட்டரீதியான தாக்கங்கள் குறித்துப் பொருட்படுத்தாமல் அவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான தீர்மானம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டது. அரசாங்கம் இதை ஒரு பாரிய பிரச்சினையாகக் கருதப்போவதில்லை. ஏனென்றால் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் அந்தக் கருத்தை ஏற்கனவே நிராகரித்துவிட்டார்கள். ஆனால், இந்தத் தேர்தலில் நடுநிலை வகிக்கக்கூடியவர்கள் ஜனாதிபதிக்கு இருப்பதாகக் கூறப்படுகின்ற தகுதியீனம் பற்றிய வாதத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு வாக்களிக்காதிருக்கத் தீர்மானிக்கக்கூடும். இத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால், அரசாங்கத்தின் சிங்கள- பௌத்த வாக்குகளில் ஒரு சிறுதொகை இல்லாமற் போய்விடக்கூடும்.

இந்த நிலைவரங்களையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, அரசாங்கத்தினால் சிங்கள- பௌத்த வாக்காளர்களில் அதிகப்பெரும்பான்மையின ரின் ஆதரவைப் பெற முடியாமல் போகக் கூடிய சாத்தி யங்கள் இருக்கின்றன. இவ்வாறு நிகழுமானால், விருப்பு வாக்குகளை (Preferential votes) எண்ண வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கைக்கு ஏற்படும். அரசியலமைப்பு ஏற் பாடுகளின் பிரகாரம், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறு வதற்கு வேட்பாளர் ஒருவர் பதிவான செல்லுபடியாகக் கூடிய வாக்குகளில் அரைவாசிக்கும் கூடுதலான வாக்குக ளைப்பெறவேண்டும். அதாவது 50சதவீதம்+ ஒருவாக் கைப் பெற வேண்டும். 50.1 சதவீதவாக்குகளோ அல்லது 51 சதவீதவாக்குகளோ அல்ல.

அடுத்த ஜனவரியில் தேர்தல் ஒன்று நடைபெறுமேயா னால், எந்தவேட்பாளருமே தேவையான 50சதவீத வாக் குகளைப் பெறமுடியாமற் போகக் கூடிய நிலை ஏற்படு வது சாத்தியம். ஜனாதிபதி ராஜபக்ஷவினால் சிங்கள- பௌத்த வாக்குகளில் அதிகப் பெரும்பான்மையைப் பெறமுடியாமற் போகும் பட்சத்தில் ஐக்கியதேசியக் கட்சி யினால் பரந்தளவிலான கூட்டணியொன்றை கட்டிய மைக்க முடியாமற் போகும் பட்சத்தில், அல்லது பல வேட் பாளர்கள் களத்தில் இறங்கி வாக்குகளைச் சிதறடிக்கும் பட்சத்தில் அத்தகைய நிலை ஏற்படக்கூடும்.

அப்போது என்ன நடக்கும்? இலங்கை வாக்காளர்கள் ஜனாதிபதித் தேர்தலொன்றில் தங்களது இரண்டாவது, மூன்றாவது விருப்புரிமைகளைப் பதிவு (Preferences) செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அரசியல மைப்பின் பிரகாரம் பதிவான வாக்குகளில் அரைவாசி க்கும் கூடுதலானவற்றை எந்தவொரு வேட்பாளரினாலும் பெறமுடியாமற் போகும் பட்சத்தில் விருப்பு வாக்குகளை எண்ணவேண்டிய தேவை ஏற்படும். இந்தச் செயன்முறை மூன்றுபடிகளைக் கொண்டது. முதலாவது, மிகவும் கூடுத லான வாக்குகளைப் பெற்ற இரு வேட்பாளர்களைத்தவிர, ஏனைய வேட்பாளர்கள் சகலரும் போட் டியிலிருந்து நீக்கப்படுவார்கள். இலங் கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது எப்போதுமே அவற்றில் இரண் டுக்கும் அதிகமான வேட்பாளர்கள் போட் டியிடுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இரண்டாவது, போட்டியிலிருந்து நீக்கப் பட்ட வேட்பாளர்களின் இரண்டாவது விருப்பு வாக்குகள் போட்டியில் இருக் கும் இரு பிரதான வேட்பாளர்களில் எவ ருக்காவது அளிக்கப்பட்டிருந்தால் அது அவர்களின் வாக்குகளுடன் சேர்க்கப் படும். மூன்றாவது, போட்டியிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளர்களின் மூன்றா வது விருப்புவாக்குகள் போட்டியில் இருக்கும் பிரதான வேட்பாளர்களில் எவருக்காவது அளிக்கப்பட்டிருந்தால் அதுவும் அவர்களின் வாக்குகளு டன் சேர்க்கப்படும். அதற்குப் பிறகு 'பெரும்பான்மை யான வாக்குகளை' எவர் பெறுகிறாரோ அவரே வெற்றி பெற்றவராக பிரகடனம் செய்யப்படுவார்.

முன்னைய ஜனாதிபதி தேர்தல்களில் மிகவும் நெருக்க மான போட்டி இடம்பெற்ற தேர்தல்களில் கூட, எப் போதுமே தெளிவான வெற்றியாளர்கள் இருந்தபடியால் இலங்கையில் ஒருபோதுமே விருப்புவாக்குகள் எண்ணப் படவில்லை. உதாரணமாக, 1988 டிசம்பர் ஜனாதிபதி தேர்தலில் பிரேமதாச, 1999 டிசம்பர் ஜனாதிபதி தேர்த லில் திருமதி சந்திரிகா குமாரதுங்க, மற்றும் 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் முறையே 50.43, 51.12, மற்றும் 50.29 சதவீத வாக்கு களை மாத்திரமே பெற்றார்கள். அதனால், ஜனாதிபதி தேர்தலொன்றில் விருப்புவாக்குகளின் இலக்கங்கள் மற் றும் மாதிரிகளைப்பற்றி இலங்கை மக்கள் அறிந்திருக்க வில்லை.

ஆனால், இத்தடவை நிலைவரம் வேறுபட்டதாக இருக் கக்கூடும். இலங்கையில் முதற்தடவையாக ஜனாதிபதி தேர்தலில் விருப்புவாக்கு கள் எண்ணப்படக்கூடும். அத னால், பிரதான போட்டியாளர்கள் தங்களுக்கான வாக்குக ளுக்காக மாத்திரமல்ல சிறிய வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளுக்காகவும் பிரசாரங்களைச் செய்ய வேண்டிய தேவையிருக்கிறது. தேர்தல் திணைக்களம் வேட்பாளர்க ளின் பெயர்களை உத்தியோகபூர்வமாக அறிவித்த பின் னர் கூட, பிரதான வேட்பாளர்களுக்கும் சிறிய வேட்பா ளர்களுக்கும் மத்தியில் கூட்டணி அமைப்பதற்கான முயற் சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படக்கூடும். ■

***பேராசிரியர் எஸ்.ஐ.கீதபொன்கலன் அமெரிக்காவின் மேரிலாண்ட் மாநிலத்திலுள்ள சலிஸ்பரி பல்கலைக்கழ கத்தின் முரண்பாட்டுத் தீர்வு திணைக்களத்தின் (Conflict Resolution Department) தலைவராவார்.***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டு விளக்கம்



# செல்வந்த நாடுகளில் அதிகரிக்கும் ஏற்றத்தாழ்வுகளும் ஜனநாயகத்தின் சிதைவும்



பேராசிரியர்
என். சண்முகரத்தினம்

நவீனத்துவத்தின் வரலாறு ஆக்கத்தையும் அழிவையும் பற்றியதென்றால் மிகையாகாது. அடிப்படையில் இந்த வரலாறு முதலாளித்துவத்தின் வரலாறே. ஆனால் இதைத் தனியே முதலாளித்துவத்தின் வெற்றியின் வரலாறெனப் பார்ப்பது தவறு. இது முதலாளித்துவ அமைப்பிற்கும் அதற்குள்ளேயே இருந்து பிறக்கும் முரண்பாடுகளினதும் அந்த அமைப்புக்கு எதிரான சக்திகளினதும் வரலாறும் தான் என்பதையும் மறந்துவிடலாகாது. ஆனால் இந்த அமைப்பிற்கு குறிப்பாக தனிமனித பொருளாதார சுதந்திரத்தை வலியுறுத்தும் கொள்கைக்கு மாற்றுவழியில்லை எனும் கருத்தியல் 1970 களின் பிற்பகுதியிலிருந்து மேலாட்சி பெற்று தன் செல்வாக்கைக்காட்டி வருகிறது. மறுபுறும் இந்தப் போக்கில் பாதகமான விளைவுகள் மனித வாழ்வின் அர்த்தம் பற்றி மற்றும் மனித இனத்தின் அது வாழும் இந்தப் பூகோளத்தின் எதிர்காலம் பற்றிப் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

இன்றைய உலகில் முன்னெப்போதும் இல்லாத வகையில் செல்வம் பெருகியுள்ளது போல் முன்னெப்போதும் இல்லாத வகையில் சமூக- பொருளாதார அசமத்துவங்களும் வளர்ந்துள்ளன. அதே போன்று முன்னெப்போதும் இல்லாதவ

## முதலாளித்துவம் மீட்சியின்றி சீரழிகிறதா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் இயற்கையின் அழிப்பும் சூழலின் சீரழிவும் மோசமடைந்துள்ளன. இந்த விடயங்கள் பற்றி பல ஆய்வுகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அதேவேளை உலக ரீதியில் ஜனநாயகம் பல வழிகளால் நசுக்கப்படுவதையும் காண்கிறோம். முதலாளித்துவமும் ஜனநாயகமும் பிரிக்கப்பட முடியாத இரட்டைக் குழந்தைகளெனும் பிரசாரத்தின் பொய்மையை மறைப்பதற்கு முதலாளித்துவ உலகின் ஆளும் வர்க்கங்களும் கூட்டுக்களும் பெரும்பாடுபடுகின்றன.

வறியோர்களின் நிலையை அறிய விரும்பினால் செல்வந்தர்கள் பற்றி ஆய்வு செய் என யாரோ ஒரு அறிஞர் கூறியது நினைவுக்கு வருகிறது. இந்தக் கட்டுரை இன்றைய முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் ஜனநாயகத்தின் நிலை பற்றியது. இந்த விடயங்களை முதலாளித்துவத்தின் மைய நாடுகளின் போக்குகள் பற்றிய ஆய்வுகளின் உதவியுடன் அணுக விரும்புகிறேன். முதலாளித்துவம் நீண்ட காலமாக நிலைபெற்று ஏகாதிபத்தியமாக வளர்ந்தது இந்த நாடுகளில் தான். நவீனத்துவத்தின் எழுச்சியையும் பரவலாக்கலையும் ஆழமாக்கலையும் இந்த நாடுகளிலேதான் முழுமையாகக் காண்கிறோம். நவீனத்துவத்தின் வரலாறு நவீனத்துவத்துக்குப் பின்னான (post - modern) காலகட்டத்தை அடைந்து விட்டது எனும் சிந்தனைப்போக்குகளும் இங்குதான் தோன்றிவளர்ந்துள்ளன. ஆகவே நவீனயுகத்தின் பிரதான விவாதப் பொருளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய விழுமியங்களின் நிலைமைகள் பற்றிப் பார்க்க இந்த நாடுகள் மிகவும் உகந்தவை என்பதில் சந்தேகமில்லை. இந்தவகையில் மேற்கு ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

### அசமத்துவத்தின் விலை - பிரதான நீரோட்டத்திலிருந்து எழும் விமர்சனங்கள்

நோபல் பரிசு பெற்ற பிரபல அமெரிக்க பொருளியலாளர் Joseph Stiglitz 2012 இல் எழுதிய 'The Price of Inequality' (அசமத்துவத்தின்விலை) என மகுடமிடப்பட்ட நூலில் அமெரிக்க சமூகத்தின் 'பெரும்புதிர்' என்பது பற்றி எழுப்பும் கேள்வியை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். ஒருவருக்கு ஒரு வாக்கு எனும் அடிப்படையில் அமைந்த ஒரு ஜனநாயகத்தில் எப்படி ஒரு வீதத்தினர் மட்டுமே தமது நலன்களுக்கு முன்னுரிமை வழங்கும் கொள்கைகளை வகுக்குமளவிற்கு வெற்றி பெறுகிறார்கள்? இந்தப் புதிர் அமெரிக்காவிற்கு மாத்திரம் சொந்தமானதல்ல. ஆனால் அங்குதான் சமீபகாலங்களில் 'ஒரு வீதம்- 99 வீதம்' எனும் சமூகப்பிரிவினை அதாவது 99 வீதத்தினரின் நலன்களை ஒதுக்கி அவர்களின் செலவில் ஒருவீதத்தினர் அபரிமித செல்வந்தர்களாகியுள்ளனர் எனும் விமர்சனமும் அதையொட்டிய அரசியல் எதிர்ப்பலைகளும் எழுந்துள்ளன. செல்வந்த நாடுகளில் அமெரிக்காவிலேயே மிகவும் ஆழமான சமூக பொருளாதார அசமத்துவத்தைக் காண்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டும் பேராசிரியர் Stiglitz அமெரிக்கா கடந்த நான்கு தசாப்தங்களாகப் பின்பற்றிய நவதாராளக்கொள்கை ஒரு செயல்பிறழ்ந்த முதலாளித்துவத்திற்கே (Dysfunctional Capitalism) இட்டுச்சென்றுள்ளது என வருத்தப்படுகிறார். இதையே நவதாராள உலகமயமாக்கல் உலக ரீதியில் செய்து வருகிறது என்பதும் அவரின் விவாதமாகும்.

Stiglitz தரும் தகவல்களும் எழுப்பும் கேள்விகளும் முற்றிலும் புதியவையல்ல. ஏற்கனவே பல இடதுசாரிகள் குறிப்பாக David Harvey போன்ற மாக்சிய ஆய்வாளர்கள் இதைப்பற்றி எழுதியுள்ளார்கள், ஆழ விமர்சித்துள்ளார்கள். (இத்தகைய ஆய்வுகள் பற்றி சமகாலம் 2012 July 06-19 இதழில் 'தொடர்ச்சியான நெருக்கடிக்குள் மூலதனம்' எனும் தலைப்பில் நான் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன்) ஆனால் Stiglitz இன் விமர்சனங்களுக்குப் பலர் முக்கியத்துவம் கொடுப்பதற்கு பல காரணங்கள் உண்டு. முன்னாள் உலக வங்கியின் பிரதம பொருளியலாளராகவும் ஜனாதிபதி கிளிங்டனின் ஆலோசகராகவும் இருந்த அவர் சமீபகாலங்களில் நவதாராள வாதத்தையும் அது சார்ந்த பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளையும் வன்மையாக விமர்சிக்கும் நூல்களையும் கட்டுரைகளையும் தொடர்ச்சியாக எழுதி வருகிறார். அவர் முன்வைக்கும் விமர்சனம் முதலாளித்துவ அமைப்பிற்குச் சார்பான அறிவியல் முகாமிற்குள்ளிலிருந்து வரும் ஒரு முரண்படு குரலாகக் கருதப்படுகிறது. அவரது விமர்சனத்தின் நோக்கம் அவரே குறிப்பிடும் செயல்பிறழ்ந்த முதலாளித்துவத்தை எப்படி மக்களின் மனித நன்னிலைக்கு உதவும் முதலாளித்துவமாகச் சீர்திருத்துவது என்பதாகும்.

அமெரிக்கா ஒரு ஜனநாயக நாடாயிருந்த போதும் அந்த ஜனநாயகம் சமூகத்தின் பெரும்பான்மையினரின் நலன்களைப் பிரதிபலிப்பதாக இல்லை. அமெரிக்க வாக்காளர்களில் 50 வீதத்திற்கும் மேலானோர் தேர்தல்


> முதலாளித்துவம் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறதா? அது ஒரு சுய அழிவுப்பாதையில் நகர்ந்துகொண்டிருக்கிறதா என்ற கேள்விகள் எழுகின்ற அதேவேளை, முதலாளித்துவத்தை மீண்டும் சீர்திருத்தி சமூக நலன்களைப் பாதுகாக்க முடியும் என்னும் கருத்துக்கு சார்பான வாதங்கள் நவதாராள வாதத்தின் மேலாட்சியுடன் போட்டி போடுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் வாக்களிப்பதில்லை. இளம் சந்ததியினரின் வாக்களிப்பு வீதம் இதை விடக்குறைவு. இந்த நிலைமைக்கு அமெரிக்காவின் ஒரு வீதத்தினரே காரணம் என்றும் அவர்களின் பேராசைத்தனம் பெரும்பான்மையான அமெரிக்கர்களுக்கு தேர்தல் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழக்க வைத்துவிட்டது என வருந்தும் Stiglitz இந்த நிலை தொடர்ந்தால் அது உயர்மட்டத்தவரான ஒரு வீதத்தினரின் சுயநலன்களுக்கு நீண்ட காலத்தில் ஆபத்தானது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என அங்கலாய்க்கிறார். முதலாளித்துவம் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறதா? அது ஒரு சுய அழிவுப் பாதையில் நகர்ந்து கொண்டிருக்கிறதா? போன்ற கேள்விகள் எழுகின்றன. அதேநேரம் முதலாளித்துவத்தை மீண்டும் சீர்திருத்தி சமூக நலன்களைப் பாதுகாக்க முடியும் என்னும் கருத்துக்குச் சார்பான வாதங்கள் நவதாராளவாதத்தின் மேலாட்சியுடன் போட்டி போடுகின்றன.

### தோமஸ் பிகெட்டியின் ஆய்வு

இந்த விவாதத்திற்கு ஒரு முக்கிய பங்களிப்பாக அமைகிறது பிரெஞ்சுப் பொருளியலாளரான தோமஸ் பிக்கெட்டி (Thomas Piketty) எழுதியுள்ள 'Capital in the twenty first Century' (இருபத்தி ஓராம் நூற்றாண்டில் மூலதனம்) எனும் நூல் 2013இல் பிரெஞ்சு மொழியிலும் 2014இல் ஆங்கிலத்திலும் வெளிவந்த இந்த நூல் உலக ரீதியில் பரந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. Pikettyயை 'பொருளியலின் றொக் தாரகை' (Rock Star) எனச் சில பத்திரிகையாளர்கள் வர்ணித்தனர். Stiglitzஇன் ஆய்வு அமெரிக்கா பற்றி எழுப்பிய பிரச்சினையை Piketty மேலும் பரந்த ஆழ்ந்த வரலாற்று ரீதியான அணுகுமுறையைப் பயன்படுத்தி ஆராய்ந்துள்ளார். ஏறக்குறைய 700 பக்கங்களைக் கொண்ட நூலில் இரு பதுக்கும் மேற்பட்ட நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் போக்குகளை இருக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையில் ஆராய்ந்து தனது விளக்கங்களைக் கொடுத்துள்ளார். தனது நூல் 18ஆம் நூற்றாண்டிலிருந்து இருபத்தி ஓராம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைப் பற்றியதென்பதால் இது பொருளாதார வரலாறு பற்றியதென Piketty யே கூறுகிறார். அவரின் ஆய்வின் பிரதான கேள்வியை பின்வருமாறு கூறலாம். தனியார் மூலதனக்குவியலின் இயக்கப்போக்கானது 19ஆம் நூற்றாண்டில் மார்க்ஸ் கருதியது போல் தவிர்க்க முடியாதபடி ஒரு சிலரின் கைகளில் மூலதனம் திரளும் நிலைக்கு இட்டுச் செல்கிறதா அல்லது பொருளாதார வளர்ச்சி மற்றும் போட்டி, தொழில்நுட்ப விருத்தி, அபிவிருத்திக்கொள்கைகள் போன்றவற்றின் விளைவாக அசமத்துவம் குறைக்கப்பட்டு வர்க்கங்களுக் கிடையே இணக்கநிலை உருவாகிறதா?




செல்வந்த நாடுகளில் மார்க்சியவாதம் எதிர்பார்த்த முடிவு– அதாவது முதலாளித்துவத்தின் மரணம்– தவிர்க்கப்பட்ட போதிலும் அசமத்துவத்தை தோற்றுவிக்கும் ஆழ்ந்த அமைப்பு ரீதியான தன்மைகளில் போதியளவு சீர்திருத்தங்கள் இடம்பெறவில்லை என்பது பிக்கெட்டியின் முடிவுகளில் ஒன்று

செல்வந்த நாடுகளில் (மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் வட அமெரிக்கா) மாக்சியவாதம் எதிர்பார்த்த முடிவு - அதாவது முதலாளித்துவத்தின் மரணம்- தவிர்க்கப்பட்ட போதிலும் அசமத்துவத்தை தோற்றுவிக்கும் ஆழ்ந்த அமைப்பு ரீதியான தன்மைகளில் போதியளவு சீர்திருத்தங்கள் இடம்பெறவில்லை என்பது Pikettyயின் முடிவுகளில் ஒன்றாகும். அத்துடன் செல்வம் மற்றும் வருமானம் ஆகியவற்றின் ஏற்றத்தாழ்வுகளைத் தனியே பொருளாதாரக் காரணிகளால் விளக்கி விட முடியாது - இவற்றின் பங்கீடு பற்றி வரலாறு அரசியல் காரணிகளின் போக்குடன் ஆழமான தொடர்புடையது என்பதும் அவரது முடிவுகளில் ஒன்றாகும். மேலும் Piketty யின் ஆய்வின் படி 19ஆம் நூற்றாண்டுடன் ஒப்பிடும் போது 20ஆம் நூற்றாண்டில் குறிப்பாக 1980 களுக்கு முந்திய தசாப்தங்களில் மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் ஏற்றத்தாழ்வுகள் குறைவடையும் போக்குகள் நிலவின. 1900-1950 காலகட்டத்தில் இந்த நாடுகளில் ஏற்றத்தாழ்வுகள் குறைவடையக்காரணம் அங்கு காணப்பட்ட ஜன நாயகம் மட்டும் தான் எனக்கருதுவது தவறு. உண்மையில் இரண்டு உலக யுத்தங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு உதவியுள்ளன. போர்ச்செலவின் தேவைகளும் போரின் நிர்ப்பந்தங்களும் முன்னேறிச்செல்லும் வரி அமைப்பின் - அதாவது ஒருவரின் செல்வம் மற்றும் வருமானத்திற்கேற்ப ஏறிச்செல்லும் வரி அமைப்பின்- அமுலாக்கலுக்கு வழிகோலின. அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் பற்றி Piketty தரும் புள்ளி விபரங்கள் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன. முன்னேறிச் செல்லும் வரி அமைப்பின் முக்கியத்துவம் பற்றிக் கூறும் Piketty 20ஆம் நூற்றாண்டின் குறிப்பாக, இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐரோப்பிய நாடுகளில் உருவாக்கம் பெற்ற 'சமூக அரசு' பற்றியும் கூறுகிறார். 1920-1980 காலகட்டத்தில் செல்வந்த நாடுகள் தமது தேசிய வருமானத்தின் கணிசமான பகுதியை சமூக மேம்பாட்டிற்கு ஒதுக்கும் கொள்கைகளைக் கையாண்டன. அரச வருமானம் 1980கள் வரை அதிகரித்த வண்ணம் இருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் சமூக ஜனநாயக சீர்திருத்தங்கள் இடம்பெற்றன. இந்தவகையில் சுவீடன் தனது தேசியவருமானத்தின் 55 வீதத்தை வரியாகப் பெற்றுக்கொண்டது. இதே போன்று பிரான்ஸ் 45-50 வீதத்தையும் பிரித்தானியா 40 வீதத்தையும் வரிகளாக வசூலித்தன. இந்த அரச வருமானத்தின் கணிசமான பகுதி கல்வி, சுகாதாரம் மற்றும் ஓய்வூதியம் போன்ற சமூக பாதுகாப்பு தேவைகளுக்குப் பயன்பட்டது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அதன் வரி தேசியவருமானத்தின் 30 வீதத்திற்கும் அப்பால் செல்லவில்லை. ஐரோப்பிய முதலாளித்துவ சமூகநல அரசுகளுக்கும் அமெரிக்க முதலாளித்துவ அரசுக்குமிடையிலான வேறுபாட்டை இது வெளிப்படுத்துகிறது. வரியைப் பொறுத்தவரை ஜப்பானும் 30 வீதத்திற்கு அப்பால் செல்லவில்லை.

ஆயினும் 1980 களிலிருந்து செல்வந்த நாடுகளில் அசமத்துவம் அதிகரிக்கும் போக்கையே காணமுடிகிறது. இது நவதாராளவாதத்தின் வருகையுடன் தொடர்புடையது. தொடரும் ஏற்றத்தாழ்வுகளின் வளர்ச்சி அரசாங்கங்கள் பின்பற்றிய தாராளமயமாக்கல் கொள்கைகளின் விளைவாகும். வரிக்கொள்கையில் அடிப்படை மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. சொத்து மற்றும் வருமானம் மீதான வரிகள் செல்வந்தர்களின் நலனைப் பேணும் வகையில் அகற்றப்பட்டுள்ளன அல்லது குறைக்கப்பட்டுள்ளன. அதே வேளை நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் மீது வரிப்பளுக்கள் அதிகரித்துள்ளன. இந்த வரிகள் பெரும்பாலும் நுகர்பொருட்கள் மீதான வரிகளாகவே அறவிடப்படுகின்றன. மூலதனம் மீதான அதனால் கிடைக்கும் வருமானத்தின் மீதான வரிகள் அகற்றப்பட்டுள்ளன அல்லது குறைக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றங்களின் விளைவாக ஐரோப்பிய சமூகநல அரசுகள் படிப்படியாகப் பலவீனம் அடைந்து வருகின்றன. இந்த வரிக்கொள்கைகளுடன் சமூக சேவைகளின் தனியுடைமையாக்கலும் இணையும் போது உழைக்கும் மக்கள் பெரிதாகப் பாதிக்கப்படுவதையும் சமூக ஏற்றத்தாழ்வுகள் வளர்வதையும் தடுக்க முடியாது. Pikettyயின் ஆய்வின்படி செல்வந்த நாடுகளில் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ள அதேவேளை மூலதன உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ளும் வருமானத்தின் வீதம் அதைவிட விகிதாசாரப்படி அதிகரித்துள்ளது. வளரும் அசமத்துவத்தின் போக்கு அமெரிக்காவில் மிகவும் தீவிரமடைந்துள்ள போதிலும் மற்றைய நாடுகளிலும் அதே போக்குத் தொடர்வதையே Piketty யின் ஆய்வும் மற்றைய ஆய்வுகளும் வெளிப்படுத்துகின்றன. Credit Suisse எனும் நிறுவனம் வெளியிட்டுள்ள 2014ஆம் ஆண்டு உலகச்செல்வம் பற்றிய அறிக்கையின் படி உலகின் அதியுயர் செல்வந்தர்களான ஒரு வீதத்தினர்



சமீப காலங்களில் நவதாராளவாதத்தையும் அது சார்ந்த பொருளாதார அபிவிருத்தி கொள்கைகளையும் வன்மையாக விமர்சிக்கும் நூல்களையும் கட்டுரைகளையும் தொடர்ச்சியாக எழுதிவரும் ஜோசப் ஸ்ரிகிளிட்ஸ் முன்வைக்கும் விமர்சனம் முதலாளித்துவ அமைப்புக்கு சார்பான அறிவியல் முகாமுக்குள் இருந்துவரும் ஒரு முரண்படு குரலாகவே கருதப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய 50 வீதமான சொத்துக்க ளின் உரிமையாளர்களாகவுள்ளனர்.

இந்தப்போக்கின் விளைவுகள் பலதரப்பட்டவை. இவற்றில் ஒன்று தனிமனிதரின் திறனை விட அவர்க ளின் செல்வந்தநிலையே சமூக நகர்ச் சியின் உந்துகோலாகிறது. தாராள வாதம் முன்வைக்கும் சமசந்தர்ப்பம், சமஉரிமை போன்ற சமத்துவ விழுமி யங்களை அது முன்னுரிமை கொடுக் கும் பொருளாதார சுதந்திரத்தின் விளைவான போக்குகள் நடைமுறை யில் அர்த்தமற்றவையாக்குகின்றன. ஒருவரின் திறனை விட அவரின் செல்வந்த அந்தஸ்தே பலரைப் பொறுத்தவரை சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த உதவுகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை Piketty தருகி றார். அமெரிக்காவின் முதல்தரப் பல் கலைக்கழகங்கள் எனக் கருதப்படுப வைகளுக்கு அனுமதி பெறுவோரின் சமூக-பொருளாதார பின்னணியைப் பார்க்குமிடத்து பெற்றோரின் வரு மானமே ஒரு பிள்ளை ஹாவாட் (Harvard) போன்ற பல்கலைக்கழ கத்திற்குச் செல்வதை நிர்ணயிக்கி றது. இத்தகைய பிரபல்யம் வாய்ந்த தனியார் பல்கலைக்கழகத்தில் தமது பிள்ளைகள் அனுமதி பெறுவதற் காகப் பெற்றோரும் அப்பல்கலைக் கழகத்திற்கு பெருந்தொகையான நன் கொடையை வழங்குகிறார்கள். அத் துடன் இத்தகைய பல்கலைக்கழகங் கள் அறவிடும் கட்டணங்களும் பெருந்தொகையாகும். இந்தப் பெற் றோர் அமெரிக்க சமூகத்தின் அதியு யர் வருமானம் பெறும் இரண்டு வீதத்தினரில் அடங்குவர். ஆகவே திறனுக்கு முதலிடம் எனும் முதலா ளித்துவ ஜனநாயகக் கோட்பாடு நடைமுறையில் பல மட்டங்களில் மீறப்படுகிறது. திறன் எனப்படும் தகைமையைப் பெறுவதற்குப் பல வளங்களும் வசதிகளும் வேண்டும். அது எல்லோருக்கும் கிடைப்ப தில்லை.


உயர்கல்வியைப் பொறுத்தவரை பிரித்தானியாவிலும் இந்த நிலையே. மற்றைய ஐரோப்பிய நாடுகளில் உயர்கல்விக்கட்டணங்கள் குறை வாக உள்ளன அல்லது முற்றாக இலவசக்கல்வி வசதிகள் இன்னும் தொடர்கின்றன. உதாரணத்திற்கு ஸ்கண்டிநேவிய நாடுகளில் பல் கலைக்கழகம் வரை இலவசக்கல்வி நிலவுகிறது. ஆயினும் இந்த நாடுக ளில் செல்வப் பங்கீட்டின் ஏற்றத் தாழ்வு தொடர்ந்து வளர்கிறது. வரி அமைப்பிலும் மாற்றங்கள் ஏற் பட்டுள்ளன. செல்வந்தநாடுகளின் சி க்கலை தரவுகளுடன் வெளிக்காட் டும் Piketty முன்வைக்கும் தீர்வு தான் என்ன? 1930 களிலிருந்து 1970கள் வரை இந்த நாடுகளில் நில விய சமத்துவத்திற்கு சார்பான சிந்த னை, ஆர்வம் மற்றும் கொள்கை வகுப்புமுறை போன்றவற்றிலிருந்து விலகியதன் விளைவே இன்றைய அதீத அசமத்துவத்திற்கான காரணம். மீண்டும் அசமத்துவத்தைக் குறைக் கும் வரித்திட்டத்தின் அவசியத்தை முன்வைக்கிறார். அதியுயர் வரு மானம் பெறும் 0.5-1 வீதத்தினரு க்கு 80 வீத வருமானவரியை விதிப் பது பல வழிகளில் நியாயமானது, அது பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்காது அதேவேளை ஜனநாய கத்தின் வளர்ச்சிக்கும் உதவும் எனக் கருதுகிறார் Piketty. அதியுயர் வரு டாந்த வருமானம் எனும் போது அமெரிக்காவில் அது USD500,000 -1,000,000 மட்டத்தைக் குறிக்கும். இத்தகைய கொள்கை மாற்றம் ஏற்பட ஒரு அதிர்ச்சி அனுபவம் இடம் பெற வேண்டும் என அவர் கூறுகிறார். அவர் முன்மொழியும் இன்னுமொரு முக்கிய ஆலோசனை உலக ரீதியில் மூலதனத்தின் மீது 0.1 வீத வரிவிதிக் கப்பட வேண்டும் என்பதாகும். இதன் நடைமுறைச் சாத்தியப்பாடு பற்றிய சவால்களையும் அவர் குறிப் பிடுகிறார்.

சுருங்கக் கூறின் Piketty தரும் தீர்வு சமூக ஜனநாயகத்தின் (social democracyயின்) மீள் கண்டுபிடிப்பு எனலாம். இதுவே உலக முதலாளித் துவத்தை மனிதநலனுக்கு உதவும் வகை யில் சீரமைக்க உதவும் என்பது அவரது தீர்க்கமான முடிவு. இந்தப் பாதையை இப்போது வளர்ச்சி பெற்று வரும் தெற்கத்திய முதலா ளித்துவ நாடுகள் தேர்ந்தெடுக்குமா என்ற கேள்வியும் அவரது நூலில் அடங்குகிறது. Pikettyயின் நூல் பற் றிப் பல விமர்சனங்கள் உண்டு. விசே டமாக மார்க்சிய ஆய்வாளர்கள் அவ ரின் ஆய்வின் பயன்பாட்டை வர வேற்கும் அதேவேளை மூலதனம் பற்றி அவர் கையாண்டுள்ள அணுகு முறையையும் மார்க்ஸ் தனது நூலில் (மூலதனம்) முன்வைத்து விளக்கி யுள்ள இலாப வீதத்தின் வீழ்ச்சிப் போக்கு எனும் கோட்பாடு பற்றி Piketty கொண்டுள்ள தப்பான விளக்கம் பற்றியும் விமர்சித்துள்ள னர். அத்துடன் Pikettyயின் ஆய் வில் முதலாளித்துவம் தொடர்ச்சி யாக அனுபவித்து வரும் சிக்கல்கள் பற்றி எதுவும் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். Stiglitz ஸும் Pikettyயும் அவர்கள் ஆராய்ந் துள்ள சமூகங்களின் அதிகார உறவு கள் பற்றி ஆழமாகப் பார்க்கவில்லை என்பதையும் குறிப்பிடலாம். இவை யெல்லாம் வேறாக ஆராயப்பட வேண்டிய விடயங்கள்.

### முதலாளித்துவம் சுயஅழிவுப் பாதையில் செல்கிறதா? ஒரு குறிப்பு

இந்தக் கேள்வி பலருக்கு ஆச்சரி யத்தை ஏற்படுத்தலாம். இன்று உலக ரீதியில் பரந்து ஆழப்பதிந்து இயங் கும் ஒரே ஒரு அமைப்பாக இருக்கி றது முதலாளித்துவம். முன்னர் முத லாளித்துவத்தை நிராகரித்த சீனா இன்று முதலாளித்துவப் பாதையில் தீவிர வளர்ச்சியைக் கண்டுள்ளது மட்டுமன்றி பிரச்சினைக்குள்ளாகியி ருக்கும் மேற்கத்தைய பொருளாதா ரங்களை வீழ்ச்சியிலிருந்து பாதுகாக் கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. முதலாளித்துவத்திற்கு ஒரு மாற்று அமைப்பு எனக்கருதக் கூடிய ஒரு நாடு கூட இல்லாத இன்றைய கால கட்டத்தில் இப்படியும் ஒரு கேள்வி யா? இது நியாயமாகப் படலாம். ஆனால் கேள்வி மாற்று அமைப்போ புரட்சியின் சாத்தியப்பாடோ பற்றிய தல்ல. இருக்கும் முதலாளித்துவத் தின் உள்ளார்ந்த முரண்பாடுகள் மற் றும் தொடர்ச்சியான சிக்கல்கள் பற்றியது. மாற்று அமைப்புத் தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றாநிலையில் முதலாளித்துவம் ஒரு மீளமுடியாத நீண்ட கால வியாதிக் குள்ளான ஒரு நோயாளியின் நிலை யில் உள்ளதா என்ற கேள்வியை எழுப்புவதற்கு ஆதாரங்கள் உண்டு. ஒருபுறம் இந்த ஆதாரங்கள் இயற்கை யின் மிதமிஞ்சிய பண்டமயமாக்க லின் விளைவான இயற்கையின் அழிப்புடனும் அத்துடன் இணைந்த சூழலின் சீரழிவுடனும் தொடர் புள்ளன. இந்தப் பார்வையில் உலகின் எதிர்காலத்தை நோக்குமிடத்து துரித கதியில் வளர்ச்சி பெற்றுச் செல்வத் தைக் குவித்து வரும் புதிய வல்லரசு கள் முதலாளித்துவத்தின் தொடர்ச்சி யான வெற்றியின் சாத்தியப்பாட்டின் ஆதாரங்களா அல்லது முதலாளித் துவ உற்பத்தி சக்திகள் கட்டவிழ்த்து விடும் அழிப்பு சக்திகளின் துரிதமய மாக்கலின் உதாரணங்களா என்ற கேள்வி எழுகிறது. மாக்சியப்பார்வை யில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு ஒரு ஆக்கரீதியான பரிமாணம் இருக்கும் அதேவேளை ஒரு அழிப்பு ரீதியான பரிமாணமும் உண்டு. இந்த இரண்டில் பின்னைய தின் விளைவுகள் உலக ரீதியில் பல நூற்றாண்டுகளாகக் குவிந்துள்ளன. எழுந்து வரும் முதலாளித்துவ நாடு கள் பின்பற்றும் கொள்கைகள் இவ ற்றை மேலும் மோசமாக்கக் கூடும். இது ஒரு நியாயமான கணிப்பு.


மறுபுறம் செல்வந்தநாடுகளின் நிலைமைகள் முதலாளித்துவத்தின் மையமாகத்திகழ்ந்த பகுதியில் இடம் பெறும் தொடர்ச்சியான பொருளா தார சிக்கல்களுக்கு விடிவே இல்லை போலும் எனும் முடிவுக்கு இட்டுச் செல்கின்றன. இந்த வகையில் இந்தக் கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட் டுள்ள விடயங்களுடன் தொடர்பு டைய மூன்று பிரச்சினைகள் பற்றிய விமர்சன ரீதியான மாற்றுப் பார்வை யைக் கணக்கிலெடுத்தல் அவசியம். செல்வந்த நாடுகளின் பொருளாதா ரங்களின் தொடர்ச்சியான மந்தநிலை, இந்த நாடுகளின் அரசுகளின் முடி வின்றி ஏறிச் செல்லும் கடன்பளு மற் றும் தொடர்ந்தும் அதிகரித்த வண்ண மிருக்கும் செல்வம் மற்றும் வருமான த்தின் ஏற்றத்தாழ்வுகள் ஆகிய மூன் றும் முதலாளித்துவத்தின் ஆழமான வியாதியின் வெளிப்பாடுகள். இந்தக் கருத்தை முன்வைப்பவர்களில் ஒருவ ரான Wolfgang Streek சமீபத்தில் New Left Review எனும் சஞ்சிகை யில் எழுதிய கட்டுரையில் இன்று முத லாளித்துவம் எதிர்கொள்ளும் சீர்கே டுகளுக்கு அந்த அமைப்பிடம் மாற்று மருந்துகள் இல்லை எனும் கருத்துப் பட வாதாடுகிறார். இந்த நோக் கில் Stiglitz மற்றும் Piketty போன்றோர் முன்வைக்கும் சீர்திருத்தங்கள் நீண்ட காலப் பயன்தரவல்லவை அல்ல என்ற முடிவுக்குத்தான் வர வேண்டும்.

அப்படியானால் சமூகமாற் றத்திற்கான தீர்க்கமான அரசி யல் ரீதியான அறிகுறிகள் இல் லாத நிலையில் முதலாளித்துவத்திற்கு என்ன நடக்கும் ? இந்தக் கேள்வி 1848 ஆம் ஆண்டில் மார்க்ஸ்-ஏங்கல்ஸ் எழுதி வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக் கையில் வரும் ஒரு வசனத்தை நினைவூட்டுகிறது. இதுவரை யிலான மனித சமூகத்தின் வர லாறு வர்க்கப்போராட்டங்க ளின் வரலாறே எனக்கூறும் அவர்கள் இந்தப் போராட்டங்களின் முடிவு பற்றிக் கூறும் கருத்தின் ஒரு பகுதியையே நம்மில் பலர் நினைவு வைத்திருக்கிறார்கள். அதன் மறுப குதி இங்கு பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன். வர்க்கப்போராட் டங்களின் முடிவு ஒன்றில் சமூகத்தின் புரட்சிகர மாற்றமாயிருக்கும் அல்லது முரண்படும் வர்க்கங்களின் பொது வான அழிவாயிருக்கும் என மார்க்ஸ்- ஏங்கல்ஸ் கூறுகிறார்கள். போராட்டங்கள் தனியே வர்க்கப்போ ராட்டங்கள் இல்லை எனும் கருத்தைக் கொண்டவன் நான். ஆயினும் இங்கு மார்க்ஸும் ஏங்கல்ஸும் குறிப்பிடும் பொதுவான அழிவு (Common ruin) எனும் கருத்து இன்றைய உலக நிலைக்குப் பொருத்தமாக இருக்க லாம்- இந்தக் கூட்டான- சகல மக்க ளின்- அழிவு என்பதை அவர்களின் நலன்களின் தோல்வி எனும் அர்த்தத் தில் பார்ப்பது பயன்தரும். இதைத் தவிர்ப்பதற்கான வழி பற்றிய தேடல் களும் மாற்று அமைப்பு பற்றிய மீள்கற்பிதங்களும் பல மட்டங்களில் இடம் பெறுகின்றன. இவை புதிய பாதைகளைத் திறக்க உதவும் எனும் நம்பிக்கையை இழக்காதிருத்தல் வர லாற்றின் நிர்ப்பந்தமெனலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவிசார் அரசியல் ஆட்டத்தின் பகடைக்காயாகிவிட்ட

# மீனவர் பிரச்சினை



யூரி ஸ்கொல்ரென்ஸ்



அகிலன் கதிர்காமர்

ஒக்டோபர் 20ஆம் திகதி நூற்றுக்கணக்கான தென்னிலங்கை மீனவர்கள் கொழும்பிலுள்ள அமைச்சிற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். கடந்த மாத நடுப்பகுதியில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கடலுணவுகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்ததை எதிர்த்தும் மற்றும் இலங்கை அரசாங்கம் கிழக்காசிய கம்பனிகளுடன் இணைந்து மேற்கொள்ளும் வியாபாரத்திற்கு கண்டனம் தெரிவித்துமே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் பல வருடங்களாக வட இலங்கை மீனவர்கள் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களுக்கு எதிராக பல போராட்டங்களை நடத்தியுள்ளனர். இந்தப்போராட்டங்கள் இலங்கையின் கடற்தொழில் துறையில் ஏற்பட்டுள்ள ஓர் பாரிய நெருக்கடியை வெளிக்காட்டுகின்றன. பல இழப்புகளைச் சந்திக்கும் கடற்தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கைமுறையே முடிந்துவிடும் என்று அஞ்சுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013இல் மீன்பிடித்துறையின் பங்களிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) 1.3 சதவீதமாகவும் ஏற்றுமதிக்கு 2.4 சதவீதமாகவும் காணப்பட்டது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 12 சதவீதத்திற்கு அதிகமானோர் மீன்பிடித் தொழிலில் தங்கி வாழ்கிறார்கள். இந்நிலை வடமாகாணத்தில் 20 சதவீதத்திற்குக் கூடுதலாக இருக்கிறது. இலங்கையர் சராசரி ஒருவருடத்திற்கு 24 கிலோ மீன் உணவை உட்கொள்கின்றனர். இது விலங்குப் புரத உட்கொள்ளலின் 55 சதவீதமாகும். உலகிலுள்ள மீன் புரதத்தை உட்கொள்ளும் நாடுகளின் வரிசையில் இலங்கை அதி உச்ச நிலையில் விளங்குகின்றது. மற்றும் ஏழைகளுக்கு அதிமுக்கிய உணவுப் பாதுகாப்பை வழங்குகின்ற மலிவான மீன் வகைகள் ஒரு கிலோ ரூபா 80 இற்கு இங்கு கிடைக்கக்கூடியதாக வுள்ளது.

### வாழ்வாதாரங்களும் பாக்கு நீரிணை முரண்பாடுகளும்

உள்நாட்டுப்போரினால் பல இழப்புகளைச் சந்தித்து தற்போது மீள் எழுச்சி பெற்றுக்கொண்டிருக்கும் வடக்கு மீன்பிடித் தொழிலாளர்கள் தமிழ் நாட்டு இழுவைப்படகுகளினால் வலுவிழந்து பலவீனமுற்றுள்ளார்கள். தமிழ் நாட்டிலுள்ள 7500 இழுவைப்படகுகளில் 2000 இழுவைப்படகுகளின் வருமானம் இலங்கைக் கடலிலேயே தங்கியுள்ளது. இந்நிலையில் தமிழ் நாட்டு மீனவர்களும் அரசியல் வாதிகளும் இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் இந்தியக் கடல்களில் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள் என போலிக் கதையைப்பரப்பி வருகிறார்கள். இது மட்டுமல்லாமல் கச்சதீவு உட்பட பாரம்பரிய மீன்பிடி வலயங்களை 1974 ஆம் ஆண்டில் முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இலங்கைக்கு தாரைவார்த்துக் கொடுத்தமை தான் இதற்கான அடிப்படைக் காரணம் என பரவலாகக் கருதப்படுகின்றது. இதன் யதார்த்தம் யாதெனில், இலாபகரமான அளவு மீனை அள்ளுவதற்கு இந்திய இழுவைப்படகுகள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு கரையோரத்தை நோக்கி நெடுந்தூரம் நகர்கின்றன என்பதே ஆகும்.

2013 ஆம் ஆண்டில் இந்திய இழுவைப்படகுகள் இலங்கைக் கடற்பரப்பில் 45,167 தடவைகள் தென்பட்டதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது. அவற்றுள் 180 படகுகள் 730 மீனவர்களுடன் மட்டுமே பிடிபட்டன. இம் மீனவர்கள் இலங்கையில் சராசரி 29 நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். வட இலங்கை மீனவர்கள் தற்போது வலுவிழந்த நிலையில் இந்திய இழுவைப் படகுகளை பறிமுதல் செய்வது பொருத்தமான ஓர் உத்தியெனக் கருதுகிறார்கள்.

வடபகுதி மீனவர்களின் விலையுயர்ந்த வலைகளை கடந்த பல வருடங்களாக இந்திய இழுவைப்படகுகள் சேதப்படுத்தியமையால் இவர்கள் அதிகளவு கடனில் மூழ்கிப்போயுள்ளார்கள். தற்போது இந்திய இழுவைப்படகுகள் வாரத்தின் மூன்றுநாட்கள் தங்களது கடலுக்குவரும் போது வடபகுதி மீனவர்கள் தமது தொழிலுக்குச் செல்லாது வீட்டில் இருக்கிறார்கள் அல்லது அருகிலுள்ள கரையோர சிறு மீன்பிடித் தொழிலில் மட்டும் ஈடுபடுகிறார்கள். இதனால் இவர்களது வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. 2013ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள காரைநகர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் சராசரி மீன்பிடி வருமானம் ரூபா 14,700 ஆக இருந்தது. இத்தொகையானது சராசரி இலங்கைக் கிராமம் ஒன்றைச் சேர்ந்த ஒரு குடும்ப வருமானமட்டத்தின் மூன்றிலொரு பங்கு ஆகும்.

பாக்குநீரிணை முரண்பாடு அரசியல் மயப்படுத்தப்பட்ட காரணத்தால் இந்திய இழுவைப்படகுகளுக்கு ஒரு தீர்வும் இல்லாமல் மேலும் வட பகுதி மீனவர்களின் வாழ்வாதார நெருக்கடி நீடிக்கின்றது.

### கடல் சட்டங்களும் ஐரோப்பிய ஒன்றியத் தடையும்

இந்தியக் கடற்பரப்பில் ஒருசிலதடவைகள் நிகழும் கைதுகளைத் தவிர ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் தென்னிலங்கை மீனவர்கள் எந்தவித தடங்கலுமில்லாது தமது தொழிலைச் செய்து கொண்டிருந்தனர். இந்து சமுத்திரத்திலேயே உலகப் பிரசித்தி பெற்ற ஆழ்கடல் மீன்பிடி சார் சிறிய (10-16) மீற்றர் படகு கூட்டங்களில் குடிநீர் உணவு ஐஸ் மற்றும் அத்தியாவசிய பொருட்களுடன் சூறை (கெலவரம்), சுறா போன்ற மீன்களைத் தேடி வாரக் கணக்கில் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் பயணத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அதிர்ச்சிதரும் நிகழ்வாக கடந்த மாதம் 14ஆம் திகதி ஐரோப்பியஒன்றியம் இலங்கையிலிருந்து கடல் உணவு இறக்குமதிக்கு 15 ஜனவரி 2015இலிருந்து தடை விதிப்பதாக அறிவித்திருந்தது. இது தென்னிலங்கை மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் மிகக்கொடூரமான விளைவை ஏற்படுத்தும். ஏனெனில் இலங்கையின் கடலுணவு ஏற்றுமதியில் 70 சதவீதம் ஐரோப்பாவையே நம்பியிருக்கிறது.

பதிவு செய்யப்படாது கட்டுப்பாடற்ற சட்டவிரோதமான மீன்பிடியை (Illegal, Unregistered and Unregulated fishing) இலங்கை செய்தது என ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சாட்டுகின்றது. பத்திரிகைச் செய்திகளின் படி இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தால் சிவப்பு அட்டை காட்டப்பட்டதற்கான காரணம் இலங்கைக் கொடியுடன் மீன்பிடியில் ஈடுபடும் பல்நாட்டுக் கம்பனிகளின் கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் பிரிட்டனின் கட்டுப்பாட்டில் உள்ள டியூகோ காஸியாத் தீவுக் கூட்டப்பகுதிகளில் காணப்பட்டதாகும்.

இந்நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் போருக்குப் பின் மீன் பிடி வளர்ச்சியை அதிகரிப்பதற்காக பல் தேசியக் கம்பனிகளுக்கு இலங்கை மீன்பிடி அனுமதிப் பத்திரங்களை வழங்கியமையேயாகும்.

ஆழ்கடல் மீன்பிடி உற்பத்தியை (Off-shore fish production) மும்மடங்காக 2013 ஆம் ஆண்டளவில் அதிகரிப்பதற்கான (113 ஆயிரம் மெற்றிக்தொன்னிலிருந்து 332 ஆயிரம் மெற்றிக்தொன்களாக) தந்திரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயத் திட்டமொன்று 2009ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. சீனாவையும் ஜப்பானையும் சேர்ந்த பெரிய மீன்பிடிக் கம்பனிகளுடனான கூட்டு முயற்சிகளின் ஊடாக 2012 இல் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2015 அளவில் 500 மில்லியன் டொலர்களுக்கு மீன் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கான திட்டங்களை மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன 2013 மேயில் அறிவித்தார்.


இலங்கைப் படகுகள் வெளிநாட்டுக் கடற்பரப்புகளில் அடிக்கடி காணப்படுவது ஐரோப்பிய ஒன்றியத்தின் கடல் தொழில் ஒழுங்குகளுக்கு சிக்கலாக அமைந்தது. இதனால் இலங்கைக் கொடியுடன் டியூகோ காஸியாவின் கடல்பரப்பில் காணப்பட்ட பல்தேசிய படகுகள் சட்டவிரோதமாக மீன்பிடிக்கின்றன என புகார் செய்யப்பட்டது. இருந்தும் இத்தடையானது சந்தேகத்திற்குரியதாகும். இந்து சமுத்திரத்தின் சூறை மீன் ஆணைக்குழுவில் Indian ocean Tuna Commission (IOTC) பெரிய சூறை அறுவடை செய்யும் நாடுகளை இறங்குநிலையில் நோக்குகையில் இந்தோனேசியா, ஐரோப்பிய ஒன்றியம், ஈரான், இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியா என காணமுடிகின்றது.

இந்து சமுத்திர மொத்த சூறை மீன்களின் உற்பத்தியில் 10 சதவீதத்தை இலங்கைப் படகுகள் உற்பத்தி செய்கின்றன. இவர்கள் 81 தொழில்சார் படகுகளை தன்னகத்தே கொண்டுள்ளனர். அதேவேளை, 16சதவீதம் சூறை மீன்பிடியைச் செய்யும் ஐரோப்பிய ஒன்றியம் 2230 தொழில்சார் படகுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றின் சராசரி கொள்ளளவு ஆற்றலானது ஓர் இலங்கைப் படகின் 50 மடங்காகும். தொழில் வாய்ப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்றவற்றில் ஐரோப்பியப் படகுக் கூட்டத்தின் இந்து சமுத்திர நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கான பங்களிப்பு என்பது வெறும் பூச்சியமாக வேயுள்ளது.

ஐரோப்பாவிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் இந்து சமுத்திரத்திற்கு ஐரோப்பிய படகுகள் வருவது எந்த விதத்திலும் நியாயம் அற்றது. மேலும் டியூகோகாஸியாவின் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் இலங்கைப் படகுகளை ஐரோப்பிய ஒன்றியம் எவ்வாறு கண்டிக்க முடியும்?

1982ஆம் ஆண்டு கடல் சட்டங்கள் பற்றிய சபையின் மகாநாட்டின் உடன் படிக்கை, நாடுகளின் கடல் எல்லைக்கான 'பிரத்தியேக பொருளாதார வலயம்' (EEZ) பற்றி பேசுகிறது. இவ்வுடன்படிக்கை - 200 கடல் மைல்களை (360 கி. மீ) விரிவுபடுத்தப்பட்ட ஆள்புல எல்லை எனவும் கூறுகிறது. அதிகரிக்கப்பட்ட இவ் எல்லை நீடிப்பு மூலவளங்களை அபகரிப்பதற்கு பிரத்தியேகமான உரி

| | Origin of boats | Number | Length (m) | Catch (mt) | Catch/Boat (mt) |
|---|---|---|---|---|---|
| Palk Bay | **North Sri Lanka** | **11,670** | **6** | **40,000** | **3.5** |
| | Tamil Nadu Trawlers | 2,000 | 10-15 | 85,000 | 43 |
| Indian Ocean Tuna | **South Sri Lanka** | **2,231** | **10-16** | **112,000** | **50** |
| | East Asian, SL flagged | 9 | 36-50 | 12,000 | 1300 |
| | European Union | 81 | 30-116 | 165,000 | 2000 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையை அளிக்கிறது. ஐரோப்பிய நாடுகளினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் கேந்திர முக்கியத்துவமிக்க சிறிய காலனித் தீவுகள் இரவோடிரவாக பாரிய பொருளாதார முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொண்டன.

இதன் விளைவாக அமெரிக்க இராணுவத் தளமாக உபயோகப்படுத்தப்படும் தரிசு தீவுகளான டியூகோகாஸியாவை, சுற்று வட்டத்தீவுகளை உள்ளடக்கியுள்ள 639000 சதுரக் கிலோமீற்றருக்கும் மேலான கடற்பரப்பை தனது சுயநலத்திற்காக உரிமையுடன் பிரயோசனப்படுத்தும் பிரத்தியேக உரிமையை பிரித்தானியா 1982இல் பெற்றுக்கொண்டது. அன்றிலிருந்து இலங்கை மீன்பிடிப்படகொன்று இங்கு செல்வது சட்டவிரோதமாக தண்டிக்கப்பட வேண்டிய 'கள்ளத் தோணி' ஆகிவிட்டது.

இத்தகைய வரலாற்று நோக்கில் சிந்திக்கும் போது இலங்கையின் சூறை மீன் ஏற்றுமதிக்கான தடை என்பது அடக்குமுறையானதும் போலித்தனமானதுமாகும். ஐரோப்பிய ஒன்றியம் இதே சட்ட விரோத - பதிவு செய்யப்படாத - கட்டுப்பாடற்ற மீன்பிடி விதிகளை இலங்கைக் கடற் பரப்பில் தமிழ் நாட்டின் தீவிர அத்துமீறிய மீன்பிடி நுழைவு தொடர்பாக நடைமுறைக்குக் கொண்டு வராதது ஏன் என இலங்கை அதிகாரிகளைப் போல மீனவர்களும் வியப்படைகிறார்கள்.

மீன்பிடித் துறைக்கு கட்டுப்பாடு-விதிமுறைகள் இருக்க வேண்டுமென்பதில் சந்தேகம் ஏதும் இல்லை. பல நூற்றாண்டு காலமாக மீனவர்கள் தத்தமது செயற்பாடுகளை - விவகாரங்களைக் கையாண்டு நடத்துவதற்கான சில மீன்பிடி பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரிய சட்டங்களை- நடைமுறைகளை உருவாக்கி இருக்கிறார்கள். எவ்வாறாயினும் இன்று சர்வதேச சட்டம், விஞ்ஞானபூர்வமான நிருவாகம், தேசத்தின் இறைமை, ஆள்புல எல்லை தொடர்பான கருத்துகள், அற்புதமான அபிவிருத்தி நோக்கு போன்றன தொடர்ந்தும் மென்மேலும் மீன்பிடி பற்றிய கொள்கையைத் தீர்மானிக்கின்றன. இதுதான் கச்சதீவு மற்றும் டியூகோகாஸியாவின் பிரத்தியேக பொருளாதார வலயம் பற்றிய விவாதம் மற்றும் சட்டபூர்வ உறுதி மொழி என்பவற்றிக்கான நல்ல தருணமாகும்.

மீனவர்களின் பிரச்சினை நாடுகளின் புவிசார் அரசியல் ஆட்டத்தின் பகடைக் காய்களாகிவிட்டன. பாக்கு நீரிணையின் இரு மருங்கிலுமுள்ள மீனவர்களுக்கிடையேயான பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியாத நிலையில் இரண்டு அரசாங்கங்களும் இருக்கின்றன. குறிப்பிடத்தக்கவகையில், இவ்வருட ஆரம்பத்தில்- இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் இந்தியா வாக்களிக்காமல் இருந்த தருணத்தின் போது ஜனாதிபதி ராஜபக்ஷ இங்கு பாதுகாப்பில் இருந்த இந்திய மீனவர்களை உடன் விடுவிக்குமாறு கட்டளையிட்டார். அதேபோன்று தென் இலங்கை மீனவர்கள் அவர்களது அரசாங்கத்துக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குமிடையேயான பேச்சு வார்த்தை மூலமாக பல புதிய சட்டங்களையும் எதிர்நோக்கலாம்.

ஆயினும் இங்கு நிலவும் உண்மைக்கள நிலைமைகள் மேலும் மோசமடைவதற்கான, சூழ்நிலைகளே இருக்கின்றன. சில தசாப்தங்களுக்கு முன்னர் வகுக்கப்பட்ட இந்திய- நோர்வே நவீன மயமாக்கல் நோக்கு சுற்றுச் சூழலைப் பாழாக்கி துவம்சம் செய்யும் இழுவை மீன்பிடியை இந்தியாவில் தொடக்கிவிட்டது.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய - அடாத்தான நுழைவு மற்றும் இலங்கையின் அபிவிருத்தியின் அங்கமான கிழக்காசிய படகுக் கூட்டங்களுடனான கூட்டு-இணைவு தொழில் முயற்சிகள் அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலையீடு என்பன ஒரு பொதுவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. தேசங்கள் - சர்வதேச மன்றங்கள் மட்டத்தில் முன்மொழியப்பட்ட - தீர்மானங்களினால் சிறிய சக்தியற்ற மீனவர்கள் தற்போது முடக்கப்பட்டுள்ளனர்.

தொழில் நுட்ப ரீதியில் திறனற்ற சிறியளவிலான மீன்பிடி பொருளியல் ரீதியாக யதார்த்தமற்றது, வெகுளித்தனமானது என்னும் இலங்கையின் அபிவிருத்தி விவாதம் செல்லுபடியற்றது. மீனவச் சமூகத்திலுள்ள ஆண், பெண் இருபாலாரும் தம் தொழிலைச் செய்ய முடியாதபட்சத்தில் மத்திய கிழக்கு, இத்தாலி போன்ற நாடுகளுக்கு புலம்பெயர்ந்து தொழில் செய்கிறார்கள். அத்துடன் இங்குள்ள சுதந்திர வர்த்தக வலய ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள். நிச்சயமற்ற இவ்விரு தொழில் வாய்ப்புகளுக்காகவும் தற்காலிகமாக இவர்கள் புலம்பெயர்ந்து செல்வதுடன் சமூகத்தையும் குடும்பத்தையும் விட்டுப் பிரிந்து செல்லுகிறார்கள். நிச்சயமற்ற ஒரு தொழிலுக்காக இத்தொழிலை விட சிறியளவிலான மீன்பிடித் தொழிலானது இவர்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு நிரந்தரமான ஒரு தொழில் ஆகும். ■

**ஐரோப்பாவிலிருந்து வெகுதூரத்திலிருக்கும் இந்து சமுத்திரத்திற்கு ஐரோப்பிய படகுகள் வருவது எந்தவிதத்திலும் நியாயமற்றது. மேலும் டியூகோகார்ஸியாவின் கடற்பரப்பில் மீன் பிடிக்கும் இலங்கைப்படகுகளை ஐரோப்பிய ஒன்றியம் எவ்வாறு கண்காணிக்க முடியும்**

*(யூரி ஸ்கொல்ரென்ஸ் நெதர்லாந்திலுள்ள ஆம்ஸ்டடாம் பல்கலைக்கழகக் கப்பலோட்டம் சார்ந்த ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வாளர். அகிலன் கதிர்காமர் யாழ்ப்பாணத்தில் இருக்கும் அரசியல் பொருளாதார ஆய்வாளர்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



# ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம்கள் கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறை

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்காமல் போகக்கூடும் என்பதற்கு ஒரேயொரு காரணமேயுண்டு. கடந்த மூன்று வருடங்களாக பொதுபலசேனாவும் ஏனைய பௌத்த தீவிரவாத அமைப்புகளும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளும் அச்சுறுத்தல்களுமே அதுவாகும். அநுராதபுரத்தில் ஒரு முஸ்லிம் வழிபாட்டுத்தலத்தை நிர்மூலம் செய்வதில் ஆரம்பித்த வன்முறைகள் இவ்வருடம் ஜூன் மாத நடுப்பகுதியில் அளுத்கம அட்டுழியங்களில் உச்சங் கண்டன. முஸ்லிம்களுக்கு எதிரான 350க்கும் அதிகமான சம்பவங்கள் முஸ்லிம்களுக்கான செயலகத்தினால் (Secretariat for Muslims) பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் வரலாறு பூராகவும் நாட்டுக்கு விசுவாசமாகவே இருந்துவந்துள்ளார்கள்.



ஹில்மி அஹமட்

பௌத்த தீவிரவாதிகளினால் தங்களுக்கு தோன்றியிருக்கின்ற அச்சுறுத்தலை ஜனாதிபதியும் அரசாங்கமும் தவறாக மதிப்பிட்டு விட்டதாகவே தோன்றுகிறது. இந்தத் தீவிரவாதிகளின் செயற்பாடுகளை கணக்கிலெடுக்காத தொந்தரவாகவே அரசாங்கம் நோக்கியது. ஆனால் அதுவே இறுதியில் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களை ஜனாதிபதியிடமிருந்து அன்னியப்படுத்தி விட்டது

குறிப்பாக, அரசாங்கப் படைகளுக்கும் தமிழ்ப் புலிகளுக்கும் இடையேயான இனப்போர்க் காலகட்டத்தில் அந்த விசுவாசத்தை தெளிவாக வெளிக்காட்டினார்கள். அதற்காக அவர்கள் பெரும் விலையைச்செலுத்த வேண்டிவந்தது. 24 மணிநேர முன்னறிவித்தலுடன் வடக்கிலிருந்து முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றினார்கள். தங்களுடன் பெறுமதியான எந்த உடைமையையும் எடுத்துவர முஸ்லிம்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் பழைய இடம்பெயர்ந்த மக்கள் (old IDPs) என்ற பெயருடன் இன்னமும் கூட நாட்டின் பல்வேறு பகுதிகளில் முகாம்களில் கஷ்டத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்களது முன்னைய வீடுகளுக்குச் சென்று மீளக்குடியேற அவர்களுக்கு எந்தவிதமான நிவாரண உதவியும் கிடைப்பதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கப் படைகளுக்கு ஆதரவாக நின்றமைக்காகவும் தமிழ்பேசும் மக்கள் என்ற அடையாளத்துக்கு துரோகம் இழைத்தமைக்காகவும் முஸ்லிம்களை தமிழர்கள் மன்னிக்கத் தயாராக இல்லை என்று கூடச் சொல்லலாம். நிலைமை அவ்வாறிருந்தும் கூட, பொதுபலசேனா தலைமையிலான பௌத்த தீவிரவாதிகளினால் முன்னெடுக்கப்படுகின்ற குரோத உணர்வுப் பிரசாரங்களின் இலக்காக முஸ்லிம்கள் மாறியிருக்கிறார்கள். 'தமிழர்களை ஒழித்துக்கட்டிவிட்டோம்' இப்போது முஸ்லிம்களை ஒழித்துக்கட்ட வேண்டியிருக்கிறது என்பதே இந்த பௌத்த தீவிரவாதிகளின் கதையாடலாக இருக்கிறது.

முஸ்லிம்களிடமிருந்து தனது இரண்டாவது பதவிக்காலத்துக்கான தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ முன்னென்றுமில்லாத ஆதரவைப் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால், பொதுபலசேனாவின் பிரசாரங்களின் விளைவாக அந்த ஆதரவையெல்லாம் அவர் இழந்துவிட்டார். போர் காரணமாக மகிந்த ராஜபக்ஷ பெரும்பான்மையான தமிழர்களின் வாக்குகளை ஏற்கனவே இழந்துவிட்டார். ஆனால், அவர் கிறிஸ்தவர்களினதும் முஸ்லிம்களினதும் வாக்குகளை இழப்பதற்கு முற்றுமுழுதான காரணம் பொது பலசேனா, சிங்கள ராவய, ராவண பலய மற்றும் பௌத்த தீவிரவாத அமைப்புகளின் செயற்பாடுகளேயாகும். சிறுபான்மையினத் தவர்களுக்கு எதிரான பொதுபலசேனாவின் பிரசாரங்கள் காரணமாக 30 சதவீத வாக்குகளை இழந்துவிட்ட ஒரு தருணத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ தேர்தலொன்றுக்குத் தயாராவது உண்மையில் வருந்தத்தக்கதாகும்.

இந்த பௌத்த தீவிரவாதிகளினால் தங்களுக்குத் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற அச்சுறுத்தலை ஜனாதிபதியும் அரசாங்கமும் தவறாக மதிப்பிட்டு விட்டதாகவே தோன்றுகிறது. பௌத்த தீவிரவாதிகளின் தோற்றத்தை அரசாங்கம் கணக்கில் எடுக்கத் தேவையில்லாத ஒரு தொந்தரவாகவே நோக்கியது போலும். ஆனால், அதுவே இறுதியில் இப்போது முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் அவரிடமிருந்து அன்னியப்படுத்தி விட்டது. இனங்களுக்கிடையிலான இணக்கப்போக்கிலும் அமைதியான இலங்கையிலும் நம்பிக்கை கொண்ட பெரும் எண்ணிக்கையிலான பௌத்த மிதவாதிகளையும் கூட இந்தத் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் அரசாங்கத்திலிருந்து தனிமைப்படுத்திவிட்டன. பௌத்த பேரினவாதத்தின் காரணமாக ஜனாதிபதி அடைந்திருக்கக் கூடிய பலாபலன்கள் எவையாக இருந்தாலும், சிறுபான்மையினத்தவர்களின் அனேகமாக மொத்தவாக்குகள் இழப்பையும் அவற்றினால் ஈடு செய்யமுடியாது.



**நாட்டு மக்களுக்கு உரித்தான அமைதியையும் சமாதானத்தையும் சீர்குலைக்கும் பௌத்த தீவிரவாதிகளை ஜனாதிபதி கட்டுப்படுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது. 2009இல் போர் முடிவுக்கு வந்த போது தமிழ் மக்களை அரவணைப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட அவர் ஏனைய சிறுபான்மையினத்தவர்களையும் தன்னிடமிருந்து தனிமைப்படுத்துவதன் மூலமாக நிலைவரம் மேலும் மோசமாகாதிருப்பதை உறுதி செய்து கொள்வதற்கான தருணமும் இதுவேயாகும்.**

முஸ்லிம்கள் வேற்று இனத்தவர்களை மாற்றுக் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். பிள்ளைகளைக் கூடுதலாகப் பெற்று தங்கள் சமூகத்தின் சனத்தொகையை கடுமையாக அதிகரித்துக்கொள்கிறார்கள், ஹலால் உணவு வகைகள் எனப்படுபவை அல்லாவுக்கு அர்ப்பணம் செய்யப்படுபவையாக இருக்கின்றன, அளவுக்கு அதிகமான பள்ளிவாசல்களை நிர்மாணிக்கிறார்கள், எதிர்காலத்தில் செய்யத்திட்டமிட்டிருக்கும் மதமாற்றங்களுக்கு வசதியாக அமையக்கூடியதாகவே பள்ளிவாசல்களை அதிகமாகக் கட்டுவதில் நாட்டம் காட்டப்படுகிறது. இந்தோனேசியா, மாலைதீவு போன்று இலங்கையும் நாளடைவில் ஒரு முஸ்லிம் நாடாக மாறிவிடும். அரபு நாடுகளிடமிருந்து கிடைக்கின்ற உதவிகளைக் கொண்டு சொத்துக்களை வாங்குகிறார்கள், போதைப் பொருள் மாபியாக்களின் கடத்தல்

*(62ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்களின் சிந்தனைகளும் தமிழகம் காணும் காட்சிகளும்

அரசியல் சித்து விளையாட்டுகள் அரங்கேறத் தொடங்கிவிட்டன. அவை கூட்டணி சேர்ப்பதற்கான முஸ்தீபுகளாக இருக்கின்றன என்பதை வாக்காளர்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். தலைவர்களின் சிந்தனையோ வெவ்வேறு விதம். அந்தச் சிந்தனைகள் வெளிச்சத்திற்கும் வருவதும் வெவ்வேறு வடிவம். தமிழகம் கண்ட சட்ட மன்றத் தேர்தல்களில் இதுவரை இல்லாத அளவிற்கு புதிய காட்சிகள் 2016 சட்ட மன்றத் தேர்தலுக்கு முன்பு திரைக்கு வருகின்றன. அந்தக் காட்சிகளுக்கு அச்சாரம் போடும் தலைவர்களின் மனமார்க்கத்தை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம். இதோ தலைவர்களின் சிந்தனைகளும், செயல்வடிவங்களும்;

## செல்வி ஜெயலலிதா,

**அ.தி.மு.க. பொதுச் செயலாளர்**


பெங்களூரில் நடைபெற்ற சொத்துக் குவிப்பு வழக்கில் நான்கு வருடம் சிறைத் தண்டனை பெற்று ஜாமினில் வெளிவந்திருக்கிறார். வருகின்ற டிசம்பர் 18ஆம் திகதிக்குள் அவர் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தனது அப்பீல் மனுவை தாக்கல் செய்ய வேண்டும். அவ்வழக்கில் அரசு வழக்கறிஞராக பவானி சிங் தொடரக்கூடாது என்று தே.மு.தி.க. தாக்கல் செய்த வழக்கினை அவசர வழக்காக விசாரிக்க ஏற்கனவே ஜெயலலிதாவிற்கு ஜாமீன் கொடுத்த அதே தலைமை நீதிபதி பெஞ்ச் 13ஆம் திகதி மறுத்துவிட்டது. அப்பீல் வழக்கை நடத்துவதற்கு வழக்கறிஞர் டீம் புதிதாக நியமிக்கப்போகிறார் ஜெயலலிதா என்பது தற்போதைய பேச்சு. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி அப்பீல் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதத்திற்குள் வழக்கை விசாரித்து கர்நாடக உயர்நீதி மன்றம் முடிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதன்படி வழக்கு நடந்தால், மார்ச் 2015க்குள் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் முடிவு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தெரிய வந்துவிடும்.

இந்நிலையில் உலக முதலீட்டாளர்கள் மகாநாடு ஒன்றை மே மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடத்தப் போவதாக தமிழக அரசு அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. உலக நாடுகளின் முதலீட்டாளர்கள் கலந்து கொள்ளும் அந்த மகாநாடு தொழில் வளர்ச்சிக்கு அ.தி.மு.க. அரசு ஏதும் செய்யவில்லை என்று தொடர்ந்து தி.மு.க. கூறிவரும் குற்றச்சாட்டிற்கு பதில் சொல்லும் வகையில் அமைந்



சொத்துக்குவிப்பு வழக்கில் மேன்முறையீட்டில் இறுதி முடிவு தெரிந்த பிறகுதான் அரசியலில் தெளிவான முடிவை எடுக்க முடியும் என்ற இக்கட்டான நிலை





சென்னை மெயில்

முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும், அந்த மகாநாட்டிற்கு தற்போதைய முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமை தாங்குவாரா அல்லது பெங்களூர் வழக்கு நல்லபடியாக முடிந்து முதலமைச்சராக ஜெயலலிதாவே அந்த மகாநாட்டிற்கு தலைமை தாங்குவார் என்ற அ.தி.மு.க.வின் நம்பிக்கையா என்ற கேள்வி பிறந்திருக்கிறது.

இது ஒரு புறமிருக்க கூட்டணி விடயத்தில் அ.தி.மு.க. அவசரப்படவில்லை. ஏனென்றால் அக்கட்சியைப் பொறுத்தமட்டில் தமிழக அரசியலில் மற்ற கட்சிகள் தேடி வரும் சூழலில் இருக்கிறது. ஏனென்றால் அக்கட்சி பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற அசாத்தியமான வெற்றி. அவருக்கு முன்பு இருப்பது தேசிய அளவில் எக்



**2-ஜி வழக்கில் சாதகமற்ற தீர்ப்பு வெளிவந்தால் பத்திரிகைகளுக்கு பெரும் தீனியாக மாறிவிடும் என்று தி.மு.க. மட்டுமல்ல அதனுடன் கூட்டணி சேரவிரும்பும் கட்சிகளும் அஞ்சுகின்றன**

கட்சியுடன் நெருங்கிச் செல்வது என்பதுதான் முக்கியமான பிரச்சினை. காங்கிரஸுடன் நெருங்கிச் சென்றால் அக்கட்சிக்கு பாராளுமன்றத்தில் உள்ள குறைந்த அளவு எம்.பி.க்களும், நடைபெறுகின்ற தேர்தல்களில் எல்லாம் அக்கட்சி தோற்பதும் உதைக்கிறது. பா.ஜ.க.வுடன் நெருங்கிச் செல்லலாம் என்றால் தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தீவிரமாக காலூன்றி அரசியல் செய்ய விரும்புகிறது. அதன் ஒரு கட்டமாக நடைபெற்ற ராஜேந்திரசோழனின் ஆயிரமாவது முடிசூட்டு விழா அ.தி.மு.க. தலைமையிலான அரசுக்கும் ஆர்.எஸ்.எஸ்.ஸிற்கும் மோதலாக மாறிவிட்டது. இதனால் காங்கிரஸுடன் நட்பா? பா.ஜ.க.வுடன் நட்பா? என்பதை தேர்வு செய்ய வேண்டிய இக்கட்டான காலகட்டத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இருக்கிறார். எல்லா மட்டத்திலும் சொத்துக்குவிப்பு வழக்கில் ஒரு இறுதி முடிவு தெரிந்த பிறகுதான் அகில இந்திய அரசியலில் ஜெயலலிதா ஒரு தெளிவான முடிவை எடுக்க முடியும் என்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மாநிலத்தில் 2016 தேர்தல் கூட்டணிகள் அமையும்.

## கலைஞர் கருணாநிதி,
### திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்:

சொத்துக்குவிப்பு வழக்கில் அ.தி.மு.க. தலைமை சிக்கிக்கொண்ட பிறகு இவருக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறது. ஓ.பன்னீர் செல்வம் தலைமையிலான அரசை பினாமி அரசு என்றும், சிறைத் தண்டனை பெற்ற ஜெயலலிதாவின் படங்களை அரசு அலுவலகத்தில் வைக்கலாமா என்றும் மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சென்று தி.மு.க. தொண்டர்களை கலைஞர் கருணாநிதி உற்சாகப்படுத்தி வருகிறார். குறிப்பாக பால் விலை உயர்வைக் கண்டித்து ஒரு போராட்டம் தமிழகம் முழுமையும் நடத்தியிருக்கிறார். ஆனால் அவர் மனதில் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பே மற்ற கட்சிகளுடன் சேர்ந்து ஒரு போராட்டத்தை நடத்தி விட வேண்டும். அதை அப்படியே சட்டமன்றத் தேர்தல் வரை எடுத்துச் செல்ல வேண்டும் என்று முயற்சி செய்கிறார். இதற்காக இரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் உள்ளிட்ட அனைவரிடமும் பேச்சு வார்த்தை நடத்திவிட்டார். நவம்பர் 12ஆம் திகதி தி.மு.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் துரைமுருகன் டாக்டர் ராமதாஸைச் சந்தித்துப் பேசினார். ஆனால் 2-ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் நவம்பர் 10ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இறுதி வாதம் இப்போது டிசம்பர் 18ஆம் திகதி தொடங்குகிறது. நீதிபதி குன்ஹா கொடுத்த சொத்துக்குவிப்பு வழக்குத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் மனுவை கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா தாக்கல் செய்யும் அன்று, டில்லியில் 2-ஜி அலைக்கற்றை வழக்கின் இறுதிவாதம் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சைனி முன்பு தொடங்குகிறது. மற்ற கூட்டணிக் கட்சிகள் இந்த வழக்கின் தீர்ப்பு வெளிவரும் வரை தி.மு.க.வுடன் இணைந்து போராட முன்வரமாட்டார்கள் என்பதே இன்றைய நிலை. ஆகவே மற்ற கட்சிகளை தேடிச் செல்ல வேண்டிய நிலையில் தி.மு.க. இருக்கிறது.

இதேபோல் தி.மு.க.வை மிரட்டும் இன்னொரு அம்சம் அக்கட்சிக்குள் தி.மு.க. தலைவர் கருணாநிதி குடும்ப உறுப்பினர்களின் தலையீடு. அதையும் எதிர்க்கட்சிகள் பெரும் அரசியலாகச் செய்கின்றன. அதனால் குடும்ப உறுப்பினர்கள் யாரும் கட்சி உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்று தலைவர் ஒரு அறிக்கை விட வேண்டும் என்று தி.மு.க.வில் உள்ள முன்னணிப் பிரமுகர்கள் கருதுகிறார்கள். இலைமறைவு காய் மறைவாக தலைமையிடம் இதை எடுத்துக் கூறியும் வருகிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் தி.மு.க. பொருளாளர் ஸ்டாலினை ஏற்றுக் கொள்வதில் தயக்கமில்லை. ஆனால் கட்சியின் உள்விவகாரங்களில் ஸ்டாலின் குடும்பத்தினர் தலையிடுவதை பெரும் பிரச்சினையாக உணருகிறார்கள். இது காலப்போக்கில் கட்சியை கலகலக்க வைத்து விடும் என்று அஞ்சுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். ஆகவே 2-ஜி அலைக்கற்றை மற்றும் குடும்ப ஆதிக்கம் போன்ற இரு பிரச்சினைகளையும் தி.மு.க. தலைமை எப்படி கையாளப்போகிறதோ அதன் அடிப்படையிலேயே 2016-க்கான அணியினை அக்கட்சி உருவாக்க முடியும். இப்போதைக்கு டாக்டர் ராமதாஸ் இல்லத் திருமணத்தில் ராமதாஸ், வைகோ போன்றவர்களை ஸ்டாலின் சந்தித்தது, காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கலைஞர் கருணாநிதியை வந்து சந்தித்தது எல்லாம் பசுமைக் காட்சிகளாக இருந்தாலும், டில்லி 2-ஜி வழக்கின் அனல் அதை கசக்கி விடாதா என்றே மற்றக் கட்சிகள் கருதுகின்றன. 2-ஜி வழக்கில் ஒரேயொரு வித்தியாசம். அந்த வழக்கு தி.மு.க. தலைமையில் உள்ளவர்களுக்கோ அல்லது முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவோருக்கு சம்பந்தமில்லாத வழக்கு என்பதுதான் சற்று ஆறுதலான விடயம்.

2-ஜி வழக்கில் சாதகமற்ற தீர்ப்பு வெளிவந்தால் அது பத்திரிகைகளுக்கு போடப்பட்ட பெருந்தீனியாக மாறிவிடும் என்றே தி.மு.க. மட்டுமல்ல அக்கட்சியுடன் கூட்டணி சேர விரும்பும் கட்சிகளும் அஞ்சுகின்றன. அ.தி.மு.க.விற்கு எதிராக வலுவான கூட்டணியை உருவாக்க இவையெல்லாம் இப்போது தி.மு.க.விற்கு தடைக்கற்களாக முளைத்து நிற்கின்றன. இதை அப்புறப்படுத்தி, மாற்றுக் கூட்டணி அமைய இப்போது நடக்கும் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான ஆட்சி உதவும் என்பது மட்டும்தான் தி.மு.க.விற்கு உள்ள ஒரே நம்பிக்கை. அதனால்தான் 13 ஆம் திகதி திருநெல்வேலி மாவட்ட தி.மு.க. தொண்டர்கள் கலந்தாய்வில் பங்கேற்ற மு.க. ஸ்டாலின், அ.தி.மு.க. ஆட்சியில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவிட்டது. தொழில் உற்பத்தி இல்லை. தொழிற்சாலைகளும் வரவில்லை. சிறைத் தண்டனை பெற்றவரின் படங்களை அரசு அலுவலகத்தில் வைக்கும் அவலமான ஆட்சி நடக்கிறது என்று காரசாரமாகப் பேசியிருக்கிறார். இந்தப் பிரசாரத்தை முன் எடுத்துச் செல்லும் தி.மு.க. தலைமை, டில்லி 2-ஜி தீர்ப்பிற்காக சட்டமன்றத் தேர்தலின் முக்கிய வியூகங்களை தள்ளி வைத்து விட்டு கூட்டணி பற்றிய சில ஒத்திகைகளை மட்டும் இப்போது பார்த்துக்கொண்டிருக்கிறது.

## வைகோ,

**பொதுச் செயலாளர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்:**

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு திக்குத் தெரியாதது போல் தவித்துக் கொண்டிருந்த வைகோ, பூந்தமல்லி அண்ணா பிறந்த நாள் மகாநாட்டில் தனது எதிர்கால அரசியல் பாதையை வகுத்தார். அ.தி.மு.க. அரசை கடுமையாக விமர்சித்தார். அது தி.மு.க.வுடன் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. டாக்டர் ராமதாஸின் இல்லத் திருமணத்தில் ஸ்டாலினை சந்தித்தது, பிறகு இருவரும் ஒரே விமானத்தில் மதுரைக்குச் சென்றது எல்லாம் அரங்கேறியது. பா.ஜ.க.வை நம்பி ஏமாந்து விட்டோம் என்று வைகோ எண்ணுகிறார். அ.தி.மு.க.வை நம்பி போக முடியாது என்று கருதுகிறார். அதனால் தி.மு.க.வுடன் அனுசரித்துப் போக வேண்டும் என்பது அவரது உள்மனதில் உருவான எண்ணம். அதற்கு வடிவம் கொடுத்துதான் பெருந்துறையில் நடைபெற்ற திருமண விழா ஒன்றில் பேசிய வைகோ, தயாளு அம்மாள் கையால் சாப்பிட்டிருக்கிறேன். அதை மறக்க முடியுமா? கவர்னர் உரைக்குக் கூட போகாமல் நேராக என் தம்பி ரவிச்சந்திரன் திருமணத்தை வந்து நடத்தி வைத்தார் கலைஞர். அதை மறக்க முடியுமா? திராவிட இயக்கத்திற்கு ஆபத்து வந்தால் அதைக் காப்பாற்ற முன் நிற்பேன் என்று பரபரப்பாகப் பேசினார்.

இதன்பிறகு மலேசியாவில் நடைபெற்ற தமிழர்கள் மகாநாட்டில் பங்கேற்று சென்னை திரும்பினார் வைகோ. அறிஞர் அண்ணாவிற்கு பிறகு மலேசியா மகாநாட்டிற்குச் சென்று திரும்பியவர் வைகோ என்பதால் அவரை விமான நிலையத்திலிருந்து குதிரையில் அழைத்துவர திட்டமிட்டு, அதற்காக வைகோ உள்ளிட்டோர் மீது இப்போது சென்னை மாநகரக் காவல்துறை வழக்குப் பதிவு செய்திருக்கிறது. வைகோ தி.மு.க.வுடன் அனுசரணையாகப் போகிறார் என்றதும் சமூக வலைத்தளங்களில் அப்படியென்றால் இலங்கைத் தமிழர் சாவுக்கு தி.மு.க. காரணமில்லையா என்றெல்லாம் கேள்வி எழுப்பி விமர்சனங்கள் எழுந்தன. அதை முறியடிக்கவே தி.மு.க.வுடன் இப்போது கூட்டணியில் இல்லை என்று மழுப்பியிருக்கிறார். ஆனால் வைகோவைப் பொறுத்தவரை தி.மு.க.வுடன் கூட்டணி சேருவதற்கான பாதையை ராம



**இலங்கைத் தமிழருக்கு விரோதமாக காங்கிரஸ் நேரடியாக செய்யத்தயங்கிய செயல்களை பாரதிய ஜனதா வெளிப்படையாகச் செய்கிறது என்ற கோபம் வைகோவுக்கு கொப்பளித்துக் கொண்டிருக்கிறது**

தாஸ் இல்லத் திருமணத்தில் ஸ்டாலினைச் சந்தித்தது மூலம் தேர்வு செய்து விட்டோம். மற்றவற்றை தேர்தல் நேரத்தில் பார்த்துக் கொள்வோம். இப்போதைக்கு அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. எதிர்ப்பில் தீவிரமாக இருப்போம் என்று தன் கட்சி நிர்வாகிகளிடம் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் எதிரொலியாகத்தான் ஐந்து தமிழக மீனவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட விவகாரத்தில் பிரதமர் நரேந்திரமோடி கொடுத்த தைரியத்தில்தான் இலங்கை அதிபர் ராஜபக்ஷ இது மாதிரி செய்திருக்கிறார் என்று காட்டமாகப் பேசியிருக்கிறார். அது மட்டுமின்றி மலேசியாவில் இருந்து திரும்பிய தன் மீது வழக்குப் போட்ட காவல்துறையைப் பார்த்து, என் மீது வழக்குப் போடுகிறீர்களே. பெங்களூர் தீர்ப்பில் ஜாமின் பெற்று ஜெயலலிதா சென்னை திரும்பிய போது விமான நிலையம் வழியில் போக்குவரத்து நெருக்கடியில் சிக்கி மக்கள் தவித்தார்களே அப்போது நீங்கள் எங்கே போனீர்கள்? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். வைகோவைப் பொறுத்தமட்டில் தி.மு.க. அணி பக்கமாகச் சாய்கிறார். அதேசமயத்தில் தனக்குரிய கௌரவமான தொகுதிகளைப் பெறுவதிலும் குறியாக இருக்கிறார். அது மட்டுமல்ல, காங்கிரஸ் இருக்கும் அணியில் கூட அவர் இருக்கத் தவறமாட்டார். ஏனென்றால், இலங்கைத் தமிழருக்கு விரோதமாக காங்கிரஸ் நேரடியாக செய்யத் தயங்கிய செயல்களை பா.ஜ.க. வெளிப்படையாகச் செய்கிறது என்ற கோபம் அவருக்கு கொப்பளித்துக் கொண்டிருக்கிறது.

## டாக்டர் ராமதாஸ்,

**தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி.**

அன்புமணியை முதல்வராக்குவோம் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் முக்கிய முழக்கம். இதை பல வருடங்களாகவே செய்து வந்தாலும், இறுதியில் பாட்டாளி மக்கள் கட்சி கூட்டணியிலேயே தேர்தலைச் சந்தித்துள்ளது. குறிப்பாக பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு இப்படியொரு கோஷத்தை எழுப்பி திராவிடக் கட்சிகளுடனும், தேசியக் கட்சிகளுடனும் கூட்டணி இல்லை என்று பேசினார் டாக்டர் ராமதாஸ். ஆனால் காதல் எதிர்ப்பு பிரசாரத்தில் அவருக்கு வன்னியர் சமுதாயம் மட்டுமின்றி மற்ற சமுதாயத்தினரிடமும் கிடைத்த ஆதரவு அந்த முழக்கத்தைக் கைவிட வைத்தது. நரேந்திரமோடியை முன்னிறுத்தி பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்ந்து பா.ம.க. அன்புமணியும் தர்மபுரி தொகுதியிலிருந்து எம்.பி.யாக வெற்றி பெற்றார்.

அவருக்கு அமைச்சர் பதவி கிடைக்கவில்லை என்பதால் பா.ஜ.க.வுடன் அவருக்கு கசப்புணர்வு ஏற்பட்டது. ஆனாலும் அன்புமணி இல்லத் திருமணத்திற்கு அ.தி.மு.க. தவிர மற்றக் கட்



> பாட்டாளி மக்கள் கட்சித் தலைமையில் கூட்டணி என்பது ராமதாஸின் ஆசையாக இருந்தாலும் இறுதியில் தி.மு.க.வுடன் கூட்டணியில் அங்கம் வகிப்பார் என்பதே அவரது கட்சியில் உள்ளவர்களின் எதிர்பார்ப்பு

சிகளின் தலைவர்கள் எல்லாம் வந்தார்கள். பங்கேற்றார்கள். ஆனாலும் அன்புமணி மீதுள்ள மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி கொடுத்த வழக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் தலையில் கத்தி தொங்குவது போலிருக்கிறது. இந்த வழக்கும் டில்லி நீதிமன்றத்தில் நடக்கிறது.

கூட்டணி இல்லை என்று முழங்கி விட்டு பிறகு கூட்டணி வைப்பதுதான் பொதுவாக அரசியல் கட்சிகளுக்கு உரிய இலக்கணம். அதற்கு பா.ம.க.வும் விதிவிலக்கல்ல. இப்போதைக்கு அவர் தி.மு.க. அணி பக்கம் போவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஏனென்றால் தன்னை கைது செய்த அ.தி.மு.க.வுடன் போக முடியாது என்பதை விட பா.ம.க.விற்கு அங்கு சென்றால் எதிர்பார்க்கும் சட்டமன்றத் தொகுதிகள் கிடைக்காது என்பது பா.ம.க. முன்னணித் தலைவர்களின் எண்ணம். தி.மு.க.வுடன் அணி சேர்ந்தால் அதிக தொகுதிகளைப் பெற முடியும் என்று நினைக்கிறார் அவர். அவரது எண்ண வோட்டத்தை மனதில் வைத்துத்தான் தி.மு.க. மூத்த தலைவர் துரைமுருகன் அவரைச் சென்று சந்தித்துள்ளார். ஏற்கனவே திருமண விழாவில் பா.ம.க.விற்கும், தி.மு.க.விற்கும் ஏற்பட்ட நெருக்கத்தை மேலும் தொடர வேண்டும் என்ற தி.மு.க. தலைமையின் எண்ணமே இந்தச் சந்திப்பின் அடையாளம். அது மட்டுமின்றி எவ்வளவு தொகுதிகள் தேவை என்பது டாக்டர் ராமதாஸின் மனதில் இருக்கிறது என்பதை கண்டுபிடிக்கும் முயற்சியும் கூட. அதற்கு இன்னொரு காரணம் டாக்டர் ராமதாஸின் தொடர் அ.தி.மு.க. தாக்குதல்! ஆகவே பா.ம.க. தலைமையில் கூட்டணி என்பது ராமதாஸின் ஆசையாக இருந்தாலும், இறுதியில் தி.மு.க.வுடன் கூட்டணியில் அங்கம் வகிப்பார் என்பதே பா.ம.க.வில் உள்ளோரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

## விஜயகாந்த்,


**தலைவர், தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகம்.**

மாற்றுச் சக்தியாக புறப்பட்ட விஜயகாந்த் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு வாக்காளர்கள் மத்தியில் மறந்த சக்தியாக மாறிக்கொண்டிருக்கிறார். அ.தி.மு.க.வையும், தி.மு.க.வையும் விமர்சித்து மாற்று அரசியலுக்கு நான்தான் என்று இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவரது கருத்தை வாக்காளர்கள் ஜோக் என்று நினைக்கத் தொடங்கி விட்டார்கள். அவரிடமிருந்த எம்.எல்.ஏ.க்கள் வில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிச் சென்றதும், மைத்துனருக்கு அமைச்சர் பதவி கொடுக்கவில்லை என்பதற்காக மோடியிடமிருந்து விலகிச் சென்றதும், கட்சிக்காரர்களை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ளத் தவறியதும் தே.மு.தி.க. என்ற கட்சி அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.விற்கு மாற்று அல்ல என்ற நிலை உருவாகி விட்டது. அதுவும் புதிதாக மத்தியில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. தமிழகத்தில் முழு வீச்சில் கால் ஊன்ற நினைப்பதும், காங்கிரஸிலிருந்து பிரிந்து ஜி.கே. வாசன் புதிய கட்சியைத் துவங்குவதும் தே.மு.தி.க. விற்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறது. 2006, 2009, 2011, 2014 ஆகிய நான்கு தேர்தல்களில் கிங்மேக்கர் என்று கருதப்பட்ட விஜயகாந்த் இன்று அந்த மவுசை இழந்து நிற்கிறார்.

அவர் முன்பு இருப்பது ஒன்று தனித்துப் போட்டி. அதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் ஏற்கனவே செலவழித்து சோர்ந்து போயிருக்கிறார்கள் அவரது கட்சியினர். இனியொரு அக்னிப் பரீட்சைக்கு அவர்கள் தயாராக இல்லை. பா.ஜ.க. வின் சார்பில் விஜயகாந்தை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்துவார்களா என்பது இன்னொரு கேள்வி. அதற்கும் வாய்ப்பில்லை. சமீபத்தில் சென்னைக்கு வந்த பா.ஜ.க.வின் அகில இந்திய பொதுச் செயலாளர் ராஜீவ் பிரதாப் ரூடி, தமிழகத்தில் பா.ஜ.க. முதலமைச்சர் வருவார் என்று கூறிவிட்டார். அ.தி.மு.க.வுடன் சேருவது என்பது இயலாத காரியம். விஜயகாந்தை எதிரியாக நினைக்கும் அ.தி.மு.க.வுடன் அவர் இணைந்து பயணிக்க முடியாது. புதிய கட்சியாக பிறக்கப் போகும் ஜி.கே.வாசனுடன் சேரலாம். அவர் இவரை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்வாரா என்பது அங்கும் கேள்விக்குறி. இப்படி எல்லா வழிகளும் அடைக்கப்பட்டிருக்கும் விஜயகாந்த் முன்பு இருக்கும் ஆப்ஷன் தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பது. இங்கும் 2-ஜி சிக்கல் இருக்கிறது. அதில் சிக்க வேண்டாம் என்று கருதி, ஒருவேளை தனித்துப் போட்டி என்று அறிவித்து களத்தில் இறங்கினார் என்றால் தே.மு.தி.க.வின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் ஆபத்து இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற கட்சிகளில் வலது புறம் போனாலும் ஆபத்து இடது புறம் போனாலும் ஆபத்து என்ற சிக்கலில் மாட்டிக் கொண்டிருப்பவர் விஜயகாந்த்தான்!



தனித்துப்போட்டியிட்டால் தே.மு.தி.க.வின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் ஆபத்து. இன்றைக்கு இருக்கின்ற கட்சிகளில் வலது புறம் போனாலும் ஆபத்து இடது புறம் போனாலும் ஆபத்து என்ற சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கிறார் விஜயகாந்த்

## ஜி.கே.வாசன்

**முன்னாள் காங்கிரஸ் தலைவர்**

காங்கிரஸுடன் இருந்த பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டது. மறைந்த மூப்பனார் உருவாக்கிய தமிழ் மாநில காங்கிரஸை காங்கிரஸ் கட்சியுடன் இணைத்த திகதியிலிருந்து வாசனை ஒரு சந்தேகக் கண்ணுடனேயே அகில இந்திய காங்கிரஸ் தலைமை பார்த்தது. ஜி.கே.வாசனை டில்லி வட்டாரத்தில் இன்னொரு ஜெகன்மோகன் ரெட்டி என்றே பல காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்கள். இந்த ஜெகன் மோகன் ரெட்டி ஆந்திர மாநிலத்தில் மறைந்த வை.எஸ்.ஆர் ரெட்டியின் மகன். அவர் மறைவுக்குப் பிறகு ஜெகனுக்கு முதல்வர் வாய்ப்புத் தர வில்லை என்பதற்காக காங்கிரஸ் கட்சியை உடைத்து வை.எஸ்.ஆர். காங்கிரஸை உருவாக்கியவர். தமிழக காங்கிரஸிற்குள் பல அணிகள் இருந்தாலும், வாசன் அணி சற்று பலம் பொருந்தியது. அந்த அணி தற்போது வெளியேறியிருக்கிறது. தமிழக காங்கிரஸுக்கு சென்ற பாராளுமன்றத் தேர்தலில் 5 சதவீத வாக்கு கிடைத்தது. அதில் இரு சதவீதத்தை வாசன் தரப்பு இழுத்துச் சென்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி திருச்சியில் நடைபெறும் மகாநாட்டில் கட்சியின் பெயர், கொடி, சின்னம் போன்றவற்றை வாசன் அறிவிக்கப் போகிறார். வாசன் வெளியேறிய பிறகு காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவராக ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் நியமிக்கப்பட்டிருக்கிறார். மூப்பனார் கட்சி துவங்கிய போது 20 எம்.பி. தொகுதிகளையும், 40 சட்டமன்றத் தொகுதிகளையும் கொடுத்து தன் அணியில் சேர்த்துக் கொண்டார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. அது போன்ற வாய்ப்பு வாசனுக்கு இப்போது இல்லை. ஏனென்றால் மூப்பனார் போல் வாசன் ஏதும் முக்கியமான தமிழ்நாட்டுப் பிரச்சினையை அதுவும் குறிப்பாக மக்கள் பிரச்சினையை முன் வைத்து காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியே வரவில்லை. அவர் வெளியில் வந்திருப்பது மூப்பனார் மற்றும் காமராஜர் படங்களை காங்கிரஸ் உறுப்பினர் அட்டையில் போட அகில இந்திய தலைமை மறுத்து விட்டது என்பதுதான். ஆகவே, காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு கட்சி அணியில் இருக்கட்டும் என்பதற்காக வாசனுக்கு 10 முதல் 15 எம்.எல்.ஏ. சீட்டுக்களைக் கொடுக்க அ.தி.மு.க. உடனடியாக முன்வரலாம். ஏனென்றால் வாசன் இயற்கையாகவே அ.தி.மு.க. வின் மீது பற்று உடையவர். அவரை வழி நடத்தும் முன்னாள் தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஞான தேசிகனும் அதே சிந்தனையில் உள்ள வர். ஒருவேளை வாசன் தி.மு.க.வுடன் போக முயன்றாலும், அதற்கும் வாய்ப்பு கிடைக்கலாம். ஆனால் இரு கட்சிகளில் எந்தக் கட்சி பக்கம் கூட் டணி அமைத்தாலும், வாசனை நம்பி வரும் முன்னாள் எம்.எல்.ஏ.க்களுக்கு மட்டுமாவது சட்டமன்றத் தொகுதி களை வாங்கிக் கொடுக்க முடியுமா என்பது முக்கியமான கேள்வி. வாச னைப் பொறுத்தமட்டில் கம்யூனிஸ்ட் கட்சிகளுடனோ அல்லது விஜயகாந்த் உடனோ சென்று கூட்டணி வைக்க லாம். ஆனால் இந்த இரு இடத் திலுமே வாசனை முதல்வர் வேட் பாளராக அறிவிக்க யாரும் முன்வரமாட்டார்கள் என்பதே இப்



வாசன் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கட்சியைப் பலப்படுத்த அ.தி.மு.க. அல்லது தி.மு.க. என்ற தெரிவை மனதில் வைத்து அவர் அரசியல் செய்யலாம் என்று கருதப்படுகிறது

போதுள்ள நிலைமை. இப்போது கூட கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து தனி யாகப் போராட்டம் நடத்துகின்றன. அவர்கள் வாசனுடனோ, தி.மு.க.வுடனோ சேர்ந்து போராட்டம் நடத்தவில்லை. அப்படி நடத்தும் போராட்டம் கூட மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிராகத்தான் வரு கின்ற 18ஆம் திகதி மாநிலம் முழுவ தும் போராட்டம் நடத்தப் போகின்ற ன. மாநில விவகாரங்களை முன்வைத்து கூட்டு போராட்டம் நடத் தாமல் இருப்பதே, கம்யூனிஸ்டுகள் இன்னும் அ.தி.மு.க.வுடனான கூட் டணி ஆப்சனை அறவே க்ளோஸ் பண்ணி விடவில்லை என்பதையே காட்டுகிறது. ஒருவேளை விஜயகாந்த் பக்கம் வாசன் சேர்ந்தாலும், அது வெற்றி பெறும் கூட்டணியாக அமை யாது என்பதே அரசியல் பார்வை யாளர்களின் கருத்தாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் புதிய கட்சி யைப் பலப்படுத்த அ.தி.மு.க. அல் லது தி.மு.க. ஆப்ஷனை மனதில் வைத்து அவர் பாலிடிக்ஸ் செய்ய லாம் என்று கருதப்படுகிறது. அதுவே அவரது 2016 அஜெண்டாவாகவும் இருக்கும்!

## ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்

### தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர்

தமிழ்மாநில காங்கிரஸ் தாய்க்கட்சி யான காங்கிரஸ் கட்சியுடன் இணைந்த நேரத்தில் தலைவராக இருந்தவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோ வன். இப்போது அதே பழைய த.மா. கா.வினர் பிரியும் நேரத்தில் தமிழக காங்கிரஸ் கட்சி தலைவராகியிருக்கி றார். வாசனின் முகாமில் இருந்த இவரை அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக நியமித்தது பல ரின் விழிகளையும் உயர்த்தி விட்டது. அவரது முதல் பணி வாசன் அதிக காங்கிரஸ் தலைவர்களை இழுத்துச் சென்று விடாமல் சமாளிப்பது.

தலைவரானவுடன் அதைச் சமாளி த்துவிட்டார் என்றே தோன்றுகிறது. மூப்பனார் பிரிந்து சென்ற நேரத்தில் பல முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் விலகியது போல் இப்போது விலக வில்லை. சிதம்பரம், திருநாவுக்கரசர், தங்கபாலு உள்ளிட்ட தலைவர்கள் அனைவருமே காங்கிரஸில்தான் இருக்கிறார்கள். இந்த நேரத்தில்



தமிழக காங்கிரஸை பொறுத்தமட்டில் கூட்டணி தெரிவு இருக்கிறது என்ற சிறிய நம்பிக்கையை கட்சித் தொண்டர்களுக்கு கொடுக்கும் அளவிற்கு அரசியல் செய்து கொண்டிருக்கிறார் இளங்கோவன்

தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்தித்து இளங்கோவன் ஒரு பொலி டிக்ஸ் செய்து விட்டார். கலைஞர் கரு ணாநிதியைச் சந்தித்த அவர், சுயமரி யாதைக் குடும்பத்தில் மூத்த தலைவர் என்ற முறையில் அவரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன் என்று கூறி னாலும், கலைஞர் கருணாநிதியை வாசன் சந்தித்துவிடக்கூடாது என்ப தற்காகவே முதலில் சந்தித்தார் இளங் கோவன். இது ஒரு புறமிருக்க நேரு வின் 125ஆவது ஆண்டு விழாவிற்கு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவி ற்கு அகில இந்திய காங்கிரஸ் தலைமை அழைப்பு அனுப்பியிருக்கி றது. ஒருபுறம் தி.மு.க. தலைவர் சந்தி ப்பு. இன்னொரு புறம் அ.தி.மு.க. விற்கு அழைப்பு. இது இரண்டுமே தமிழகத்தைப் பொறுத்தமட்டில் புதிய கட்சியின் உதயத்திற்கு செக் வைக்க வும், வாசனின் கூட்டணி மூவிற்கு இடைஞ்சல் கொடுக்கவுமே நடை பெற்றுள்ள செயல்கள் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்க முடியாது.

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு இனி காங்கிரஸுடன் யாரும் கூட்டணி வைக்கமாட்டார்கள் என்ற எண்ணமே வாசனுடன் காங்கிரஸார் பிரிந்து செல்வதற்கு ஒரு காரணம் என்று காங்கிரஸ் தலைமை கருதுகிறது. இப்படி அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வுடன் நெருங்குவதன் மூலம் எங்களுக்கும் இந்த இரு கட்சிகளிடமும் ஆப்ஷன் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது காங்கிரஸ் கட்சி. அது மட்டுமின்றி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சங்கரைய்யா, நல்லக்கண்ணு, மகேந்திரன் போன்றவர்களை இளங்கோவன் சந்தித்துள்ளார். கம்யூனிஸ்ட்டுகள் உள்ள கூட்டணியில் கூட காங்கிரஸ் அங்கம் வகிக்கும் என்று விடுக்கப்பட்டுள்ள செய்தியாகவே இதைப் பார்க்க வேண்டும். ஆகவே தமிழக காங்கிரஸைப் பொறுத்தமட்டில் கூட்டணி ஆப்ஷன் இருக்கிறது என்ற ஒரு சிறிய நம்பிக்கையை காங்கிரஸ் தொண்டர்களுக்கு கொடுக்கும் அளவிற்கு அரசியல் செய்து கொண்டிருக்கிறார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்.

## தமிழிசை சவுந்திரராஜன்

**மாநிலத் தலைவர், பா.ஜ.க**

தேசியக் கட்சிகள் வரிசையில் தமிழகத்தில் மோடியின் இமேஜைப் பயன்படுத்தி முழு வேகத்தில் களம் காண முனைப்புக் காட்டி வருகிறார் பா.ஜ.க. தலைவரான தமிழிசை சவுந்திரராஜன். பழம்பெரும் காங்கிரஸ்காரர் குமரி அனந்தனின் மகள் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. 2-ஜி, சொத்துக் குவிப்பு வழக்கு என்று அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் ஊழல் கட்சிகளாக இருக்கின்றன. பா.ஜ.க. தான் தமிழகத்தில் திராவிடக் கட்சிகளுக்கு மாற்று என்பது தமிழிசையின் முழக்கம். பா.ஜ.க.விற்கு கை கொடுக்கும் விதத்தில் தமிழகத்தில் ராஜேந்திர சோழ மன்னனுக்கு விழா எடுத்திருக்கிறது ஆர்.எஸ்.எஸ். தமிழர் பெருமையை முன்னிறுத்தி தமிழகத்தில் பா.ஜ.க.வை வளர்க்க வேண்டும் என்பது பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளின் எண்ணம். அதனால்தான் சீருடைப் பேரணியை ஆர்.எஸ்.எஸ். தமிழகத்தில் நடத்தியது.

திராவிடக் கட்சிகளுக்கு மாற்று மட்டுமல்ல, மாற்றாக உருவெடுத்த விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க. பலவீனமாகியிருப்பதும் பா.ஜ.க.விற்கு சாதகமான அம்சம். அதேபோல் காங்கிரஸ் கட்சி இரு



> பாரதிய ஜனதாவின் அகில இந்திய தலைமைகூட தமிழகத்தில் தங்களுக்கு வாய்ப்பு இருப்பதாக நினைக்கிறது. அதனால்தான் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. போன்றவை ஊழல் கட்சிகள் என்று திரைமறைவில் பிரசாரம் செய்கிறது

பிரிவுகளாக தமிழகத்தில் பிளவுபட்டிருப்பதும் பா.ஜ.க.விற்கு லாபம். இந்த இரு நிகழ்வுகளும் தேசிய சிந்தனை கொண்ட வாக்காளர்கள் மனதில் பா.ஜ.க.விற்கு பெரும் செல்வாக்கைப் பெற்றுத் தரும் என்று தமிழிசை மட்டுமல்ல, தமிழக பா.ஜ.க. தலைவர்கள் அனைவரும் கணக்குப் போடுகிறார்கள். பா.ஜ.க.வின் அகில இந்திய தலைமை கூட தமிழகத்தில் பா.ஜ.க.விற்கு வாய்ப்பு இருப்பதாக நினைக்கிறது. அதனால்தான் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. போன்றவை ஊழல் கட்சிகள் என்று திரைமறைவில் பிரசாரம் செய்கிறது.


மூன்று சதவீத வாக்குகளை சென்ற பாராளுமன்றத் தேர்தலில் 18 சதவீத வாக்குகளாக மாற்றியது பா.ஜ.க. அணி. அதற்கு விஜயகாந்த், வைகோ, டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள் பா.ஜ.க. அணியில் இருந்ததும், மோடியின் மீது தமிழக வாக்காளர்களுக்கு இருந்த இமேஜும் முக்கிய காரணம். மஹாராஷ்டிராவில் மோடி இமேஜை பயன்படுத்தியது போல் தமிழகத்திலும் பயன்படுத்த வேண்டும் என்று நினைத்து காய் நகர்த்துகிறது அக்கட்சி. இலங்கையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்களை பா.ஜ.க. பக்குவமாக விடுதலை செய்து கொண்டு வந்தால், அதுவே அக்கட்சிக்கு தமிழகத்தில் பெரும் முக்கியத்துவத்தைக் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது. இது தவிர ரஜினியை அரசியலுக்கு இழுக்க நினைக்கிறது. அவருக்கு இப்போது தேசிய அளவில் மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு விருது வழங்கி கௌரவிப்பது மிக முக்கியமான வியூகம். அது மட்டுமின்றி தூய்மையான பாரதம் என்ற பிரசாரத்தின் தூதுவராக தமிழகத்தில் நடிகர் கமல்ஹாசனை பிரதமர் நரேந்திரமோடி நியமித்துள்ளார். அவருடன் சேர்ந்து தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசையும் குப்பைகளை அகற்றி தூய்மைப் பிரசாரம் செய்திருக்கிறார். நடுநிலை வாக்காளர்கள் மனதில் நம்பிக்கையை உருவாக்கும் தீவிர முயற்சியில் பா.ஜ.க. இறங்கியிருக்கிறது. அந்தத் தைரியத்தில்தான் அ.தி.மு.க.விற்கும் தி.மு.க.விற்கும் மாற்று பா.ஜ.க. என்ற முழக்கத்தை முன்வைத்து 2016 சட்டமன்றத் தேர்தலை நோக்கி செயல்படுகிறது பா.ஜ.க.வை அரவணைப்பார்களா தமிழக மக்கள் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்



# அமெரிக்காவிற்குப் போட்டியான வல்லரசு உலகிற்கு இன்று அவசியத்தேவை



சியுமஸ் மில்ன்

மூன்று கண்டங்களில் எங்கும் முரண்பாடுகள் வலுப்பதோடு பல்கிப் பெருகுகின்றன. ஆப்கானிஸ்தான் முதல் வடஆபிரிக்கா வரையான பல புள்ளிகளைத் தொடுக்கும் கோடு ஒன்றை வரைந்தால், யுத்த களங்களை அடையாளம் காணலாம். அங்கே அந்நியத் தலையீடு, அரசுகள் பலமிழந்து வீழ்தல் போன்ற நிகழ்வுகளையும் அவதானிக்கலாம்.

ஈராக்கும் சிரியாவும் இன்று மீண்டும் ஐக்கிய அமெரிக்கா தலைமையிலான இராணுவத் தலையீட்டுக்கு உள்ளாகியுள்ளன. இப்பிராந்தியத்தில் தோற்றம் பெற்ற இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் விளைவு; அதன் அறுவடை. உக்ரெயினில் ரஷ்யாவின் துணையோடு செயற்படும் தீவிரவாதிகளுக்கும், மேற்கு நாடுகளின் ஆதரவு பெற்ற உக்ரெயின் அரசாங்கத்திற்கும் இடையே யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தத்தில் ஆயிரக்கணக்கானோர் மடிந்தனர். தூரகிழக்கில் சீனா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்காவின் நேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் என்பனவற்றிற்கிடையே முறுகல் நிலை நீடிக்கிறது.

13 வருடங்கள் ஆப்கானிஸ்தானில் தனது இராணுவத்தலையீட்டை நீடித்த பின்னர் பிரித்தானியப் படைகள் அங்கிருந்து விடைபெற்றுச் சென்றன. அப்போது 'எடுத்துக்கொண்ட பணி நிறைவேறியது' என்று கூறப்பட்டது. ஆனால் உண்மை என்ன? அல்கயெடா இயக்கம் உலகரீதியாக அத்தருணம் வியாபித்திருந்தது. ஆப்கானிஸ்தானில் 10,000 மக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். தலிபான் இயக்கம் நாட்டின் பெரும்பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஆப்கானிஸ்தானில் உச்சம் பெற்றன. தேர்தல்களின் போது அங்கு அச்சுறுத்தல்களும் மோசடிகளும் இடம்பெற்றன.

ஆப்கானிஸ்தான் யுத்தம் உண்மையில் முடிவடையாத யுத்தம் ஒன்றை மேற்குலகம் தொடக்கி வைத்த கதையாக முடிந்துள்ளது. ஈராக்கில் நடந்த பேரழிவுகள், பாகிஸ்தானிலும், சோமாலியாவிலும் இடம்பெற்ற விமானத் தாக்குதல்கள், சிரியாவின் ஜிகாத் கிளர்ச்சியாளர்களுக்கு இரகசியமாக உதவிகளை வழங்குதல், லிபியாவில் நிகழ்ந்த 'மனிதாபிமானத் தலையீடு' என்பனவெல்லாம் இந்த முடிவடையாத யுத்தத்தின் தொடர்ச்சியான நிகழ்வுகளேயாகும். (இறுதியாகக் குறிப்பிட்ட லிபியாவில் உள்நாட்டு யுத்தம் தொடர்கிறது. லிபிய அரசு 'தோல்வியுற்ற அரசு' ஆகிவிட்டது).

மத்திய கிழக்கில் இன்று ஏற்பட்டிருக்கும் சிக்கல் முன்னர் எப்போதும் இல்லாத மோசமான வரலாற்று நிகழ்வு ஆகும். 'அரபு வசந்தத்தின்' முன்பும் பின்பும் மத்திய கிழக்கில் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு ஆரதவளிப்பதற்காக மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் தலையீடு செய்து வந்துள்ளன. இந்தத் தலையீடு தான் பிற எக்காரணியையும் விட மத்திய கிழக்கின் இன்றைய அவல நிலைக்குக் காரணம். இத்தலையீட்டை நிறுத்துவதற்கு சர்வதேச மட்டத்தில் அதிகாரமோ, சட்டமோ கிடையாது.

ஐக்கிய அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் உருவான புதிய உலக ஒழுங்கின் அறுவடைதான் இன்றைய மத்திய கிழக்கின் பெரும் குழப்பநிலை. ஆப்கானிஸ்தான், ஈராக் யுத்தங்களின் விளைவாக உருவான ஒரு துருவ உலக முறைமைக்கு விடுக்கப்பட்ட அறைகூவலாகவே உக்ரெயின் யுத்தம் அமைந்துள்ளது.

உக்ரெயின் நாடு (சோவியத் உடைவின் பின்) தனிநாடாகியது. அதனை மேற்கு நாடுகளின் முகாமுக்குள் இணைப்பதற்கு ஐரோப்பிய யூனியன் நாடுகளும் அமெரிக்காவும் முயற்சி செய்துவந்தன. நேட்டோவின் கிழக்கு நோக்கிய விஸ்தரிப்பும் தொடர்ந்தது. இதனால் தான் உக்ரெயின் நெருக்கடி வலுவடைந்தது. கிரிமியாவை ரஷ்யா இணைத்துக்கொண்டதும், ரஷ்ய மொழியை பேசுவோர் வாழும் உக்ரெயினின் டொன்பாஸ் பகுதியில் கிளர்ச்சிகள் ஏற்பட்டதும் இப்பின்னணியில் நிகழ்ந்த சம்பவங்களே. தேர்தல்கள் நடைபெற்று எட்டு மாதங்கள் கடந்தபின் நாடு பிளவுபட்ட நிலையிலேயே உள்ளது. ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு உதவின. இவ்வரசாங்கம் ஊழல் மிகுந்ததாக இருந்தது என்பது வேறுவிடயம். இப்போது வலதுசாரித் துணைப்படைகளின் இராணுவ நடவடிக்கைகளை இந்நாடுகள் ஆதரிக்கின்றன. ரஷ்யா மீது அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் பொருளாதாரத் தடைகளையும் செயற்படுத்துகின்றன.

அண்மையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அமெரிக்கா மீது கடும் கண்டனம் செய்து உரையொன்றை நிகழ்த்தினார். பராக் ஒபாமா உலக ரீதியில் அமெரிக்காவிற்கு எதிரான மூன்று பெரும் அச்சுறுத்தல்கள் உள்ளன. அவை எபோலா தொற்று நோய், அரபுலகத்தில் தோன்றியிருக்கும் இசிஸ் (ISIS) ரஷ்யா என்ற மூன்றுமே இந்த அச்சுறுத்தல்கள் என்று பேசியதற்குப் பதிலடியாகவே விளாடிமிர் புட்டினின் கண்டனம் அமைந்தது எனலாம். கெடுபிடி யுத்தம் முடிந்த பின்னர் ஐக்கிய அமெரிக்கா 'ஒரு தலைப்பட்சமான கட்டளைகள்' என்ற வகையிலும் 'சட்டவிரோதமான தலையீடுகள்' என்ற வகையிலும் உலகில் தன் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முனைகிறது என்றும் சர்வதேச நிறுவனங்களையும், சட்டங்களையும் புறந்தள்ளி நடந்துகொள்கிறது என்றும் புட்டின் தனது உரையில் சாடினார். பாதுகாப்புப் பற்றிய அச்சம், முரண்பாடுகள் வளர்தல், இசிஸ் (ISIS) போன்ற தீவிரவாதக் குழுக்கள் போன்றவற்றின் தோற்றம் என்பன யாவும் அமெரிக்கா தனது நடவடிக்கைகளால் தேடிக்கொண்டவையே அன்றி வேறல்ல என்றும் புட்டின் சாடினார். 'தங்கள் கொள்கைகளின் பின்விளைவுகளுக்கு எதிராகவே அமெரிக்கர்கள் போராட்டம் நடத்துகிறார்கள்' என்றும் அவர் கூறினார்.

வல்டாய் கிளப் (Valdai discussion Club) கூட்டத்தின் முதலாவது

> பல்துருவ உலக ஒழுங்கு சில நன்மைகளைக்கொண்டு வரலாம். ஆயினும் முரண்பாடுகள் உலக அளவில் பெருகும் ஆபத்து உள்ளது. பேரளவு யுத்தங்களும் இடம்பெறலாம். ஆப்கானிஸ்தான், ஈராக்கிலிருந்து படைகளை வாபஸ் பெறுவதற்கு அமெரிக்க மக்கள் உள்நாட்டில் கொடுத்த அழுத்தமே காரணமாக இருந்தது. யுத்தம் என்ற பேராபத்திலிருந்து உலகை காப்பாற்றுவதற்கு இதனை விட கூடிய அழுத்தம் எதிர்காலத்தில் தேவைப்படும்

அமர்வில் புட்டின் தலைமை வகித்துப் பேசினார். அங்கு கூடியிருந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்களையும் புலமையாளர்களையும் நோக்கி புட்டின் தனது கருத்தை எடுத்துக்கூறினார். 'பிற நாடுகளையும் மக்களையும் சர்வாதிகார முறையில் நடத்துவதை நியாயப்படுத்துவதற்கு ஒரு துருவ உலக ஒழுங்கு கருவியாகப் பயன்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. ஆனால் இப்போது பல்துருவ உலக ஒழுங்கு உருவாகிக் கொண்டு வருகிறது. அது இதைவிட மோசமான சமநிலைக் குலைவை ஏற்படுத்தும். இதற்கு ஒரே ஒரு தீர்வு தான் உள்ளது. சர்வதேச நிறுவனங்களை நாம் கட்டி வளர்க்க வேண்டும். அவை பரஸ்பர நம்பிக்கை, ஒத்துழைப்பு என்பனவற்றின் அடிப்படையில் அமையவேண்டும். விதிகள் ஒழுங்குகள் உள்ள உலகம் வேண்டுமா? அல்லது ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாத அராஜக உலகம் வேண்டுமா என்பதே எம்முன்னால் உள்ள தெரிவு' என்றும் புட்டின் குறிப்பிட்டார். அப்போது புட்டினை பார்த்து நான் கேட்டேன், 'ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாத உலகம்' என்றீர்களே உக்ரெயினில் ரஷ்யா நடந்துகொண்டவிதம் அதன் வெளிப்பாடா? அதற்கு உதாரணமான செய்கையா? புட்டின் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். கோசோவோ எமக்கு முன்னுதாரணம் அல்லவா? கிரிமியாவிற்கு சுயநிர்ணய உரிமை உள்ளது என்று அவர் பதிலிறுத்தார். இருப்பினும் ரஷ்யப் படைகளை கிரிமியாவிற்குள் அனுப்பிய செயல் சட்டம் விதித்த எல்லையை மீறிய செயல் என்பதை ஏற்றுக்கொண்ட புட்டின் உக்ரெயின் படைகளை தடுத்து நிறுத்தும் தேவை தமக்கு இருந்ததாக நியாயம் கூறினார். ரஷ்யா கிரிமியாவிற்குள் படைகளை அனுப்பியதை எந்த வகையிலும் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் கடந்த பதினைந்து வருடங்களாகச் செய்துவரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், பிற நாடுகள் மீது குண்டு வீசுதல் போன்றவற்றோடு ஒப்பிட்டுப் பேசமுடியாதவை என்றும் புட்டின் குறிப்பிட்டார்.

புட்டின் குறிப்பிடும் 'விதிகளும் கட்டுப்பாடுகளும் உடைய புதிய உலக ஒழுங்கிற்கு' மேற்கு நாடுகள் இணங்கி வருமா என்பதில் சந்தேகம் உள்ளது. கெடுபிடியுத்த காலத்தில் அமெரிக்கா விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு ஒழுகுவதைக் கொஞ்சமேனும் மதித்ததே கிடையாது. தான் நினைத்தபடி வேண்டிய போது படைகளை அனுப்புவதும் பிற நாடுகளில் தலையிடுவதும் அதன் வழமை. அது அதிகாரத்தை மதிக்கவில்லை. சோவியத் யூனியனின் வீழ்ச்சியோடு ஐக்கிய அமெரிக்கா எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாது செயற்பட்டது. ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அது அடைந்த தோல்வி அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்குத் தடையாயிற்று. அதன் பின்னர் ரஷ்யா மேற்குலகின் விஸ்தரிப்பையும் தலையீட்டையும் எதிர்க்கத் தொடங்கியது. ஜோர்ஜியா, சிரியா, உக்ரெயின் ஆகிய நாடுகள் விடயத்தில் ரஷ்யா காட்டிய எதிர்ப்பு ஐக்கிய அமெரிக்க அதிகாரத்திற்கு தடையாக அமைந்தது.

சீனாவின் எழுச்சியும் உலகின் வேறுபல பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களும் அமெரிக்காவின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு அரசியல் வெளியை உருவாக்கின. குறிப்பாக லத்தீன் அமெரிக்காவில் ஏற்பட்ட மாற்றங்கள் முக்கியமானவை. ரஷ்யாவில் உள்நாட்டில் ஒரு சிறு ஆளுங்குழு உள்ளது. அதன் பிரதிநிதியான புட்டின் முன்வைக்கும் சிறுகுழு ஆட்சித் தேசியவாதத்திற்கு உலகு தழுவிய ஆதரவு இல்லை என்பது உண்மையே. ஆயினும் மேற்குலகின் ஆதிக்கத்திற்கு ஓர் பலமுள்ள எதிர்ச்சக்தியாக ரஷ்யா விளங்குவதை உலகம் கவனிக்கத்தவறவில்லை. உக்ரெயினில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றி மேற்குலகின் கருத்துகளுக்கு மாறுபட்ட அபிப்பிராயம் உலக நாடுகள் மத்தியில் உள்ளதற்கான காரணத்தை இந்த அடிப்படையிலேயே நாம் விளங்கிக்கொள்ளலாம். இவ்வருடத்தின் தொடக்கத்தில் ரஷ்யா கிரிமியாவை ஆக்கிரமித்த போது, சீனா, இந்தியா பிரேசில்,தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் ஏன் மௌனம் சாதித்தன? ஐ.நா.வில் இந்நாடுகள் ரஷ்யாவிற்கு எதிரான கண்டனக் குரலை ஏன் எழுப்பவில்லை? என்ற கேள்விகள் சிந்தனைக்குரியவை.


எவ்வாறிருப்பினும் ரஷ்யாவின் இராணுவப்பலம் மட்டுப்பாடுகளைக் கொண்டது. பொருளாதார விடயத்தில் அது எண்ணெய், எரிவாயு வளங்களில் தங்கியுள்ளது. ரஷ்யாவிற்குள் போதிய முதலீடுகள் இல்லை. இப்போது அந்நாடு பொருளாதாரத் தடைகளால் அவதியுறுகிறது. மேற்குலகின் ஒருதலைப்பட்சமான அதிகாரத்தினை எதிர்காலத்தில் தட்டிக் கேட்கக் கூடிய நாடாக சீனா மட்டுமே இருத்தல் சாத்தியம். அதற்கும் கூடச் சிறிது காலம் செல்லவேண்டும். புட்டின் ஒரு தடவை ஐக்கிய அமெரிக்காவின் உபஜனாதிபதி யோ பிடென் (JOE BIDEN) அவர்களுக்குக் கூறியதை இங்கு ஞாபகப்படுத்தல் பொருத்தமானது. 'பூகோள அரசியலின் தலைமைத்துவத்திற்குப் போட்டியிடும் தகைமை ரஷ்யாவிற்கு இல்லை; ஆனால் அதன் தலைமை யாருக்குப் போய்ச் சேரப்போகிறது என்பதை நாம் தீர்மானிப்போம்' என்று புட்டின் கூறினார்.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூட தன் நாடுபற்றி அடிக்கடி 'உலகின் மிகமுக்கியமான தேசம்' என்று மார்தட்டிக் கொள்வதை நாம் காணலாம். அவருக்கு அடுத்து ஜனாதிபதியாக வரப்போகிறவர்களும் அமெரிக்காவின் தலையீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவார்கள் என்றே கருத இடமுள்ளது. ஏனெனில் அமெரிக்காவின் உயர் குழாம் வர்க்கம் உலகை ஆதிக்கம் செய்வதிலேயே குறியாக உள்ளது. சோவியத் வீழ்ச்சியுடன் 1991 இல் உருவான புதிய உலக ஒழுங்கினால் ஏற்பட்ட மாற்றங்களின் பின்புலத்தில் மீண்டும் உலக ஆதிக்கத்தைத் தம்கையில் வைத்திருப்பதையே அவர்கள் விரும்புகின்றனர்.

பல்துருவ உலக ஒழுங்கு சில நன்மைகளைக் கொண்டு வரலாம். ஆயினும் முரண்பாடுகள் உலக அளவில் பெருகும் ஆபத்து உள்ளது. பேரளவு யுத்தங்களும் இடம்பெறலாம். ஆப்கானிஸ்தானில் இருந்தும் ஈராக்கில் இருந்தும் படைகளைத் திருப்பிப் பெற்றுக்கொள்வதற்கு அமெரிக்க மக்கள் உள்நாட்டில் கொடுத்த அழுத்தமே காரணமாக இருந்தது. யுத்தம் என்ற பேராபத்தில் இருந்து உலகைக் காப்பாற்றுவதற்கு இதனை விடக்கூடிய அழுத்தம் எதிர்காலத்தில் தேவைப்படும். ■


*த கார்டியன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாபெரும் விவாதமும்

கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் 50 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பிளவு உலக இடதுசாரி இயக்கத்திற்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திற்கும் கேடானது. ஆனால் அந்தப் பிளவை தவிர்க்கப் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலை எல்லோரும் ஏற்றிருந்தால் ஒருவேளை வலிய பேரளவிலான கம்யூனிஸ்ட் இயக்கம் எஞ்சியிருந்திருக்கும் அது இந்திய, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்று மக்களுக்கு பயனற்ற ஒரு சர்வதேச கூட்டணியாக இருந்திருக்கும்



பேராசிரியர்
சி.சிவசேகரம்

உலகளாவிய இடதுசாரி இயக்கம் தொடங்கிய காலந்தொட்டு கருத்து முரண்களையும் உடைவுகளையும் சந்தித்து வந்துள்ளது. முதலாவது சோசலிச அகிலம் (1864-1876) முடிவடைந்து சில காலம் பின்னர் உருவான இரண்டாவது அகிலத்தின் (1889 -1916) உடைவு ஒரு முக்கியமான வரலாற்று திருப்பு முனையாயிருந்தது. அப்போதைய பிளவு ஏகாதிபத்திய அரசுகளுடன் சமரசம் செய்த சோசலிசக் கட்சிகட்கும் உண்மையான சோஷலிசவாதிகட்குமிடையிலான வேறுபாட்டைத் தெளிவாக உணர்த்தியது. அப்பிளவின் பின்பு நடந்த பல்வேறு உடைவுகளாற் சர்வதேச சோஷலிச இயக்கம் பலவீனப்படவில்லை. ரொட்ஸ்கியவாதிகள் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடன் பகைத்து சர்வதேச மட்டத்தில் தனிமைப்பட்டனர். அமெரிக்காவையும் இலங்கையையும் விட வேறெங்கும் குறிப்பிடத்தக்க ஒரு ரொட்ஸ்கியக் கட்சி இருக்கவில்லை. இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் ஒன்றியத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த ரொட்ஸ்கியவாதிகள் இலங்கைக்கு வெளியே ஏறத்தாள பூரணமாக நம்பகத்தன்மையை இழந்தனர்.

இரண்டாம் உலகப்போரின் பின்பு சோஷலிசம் பேரெழுச்சி கண்டது. கிழக்கு ஐரோப்பாவிலும் வேறும் ஐரோப்பிய நாடுகளிலும் சீனாவிலும் வியட்நாமிலும் கொரியாவிலும் சோஷலிச அரசுகள் உருவாகின. உலகின் காற்பங்கிற்கும் மேலான மக்கள் தொகையினர் சோசலிச அரசுகளின் கீழிருந்தனர். அதைவிடவும், ஆசியாவிலிருந்த கொலனிகள் துரிதமாக நேரடிக் கொலனி ஆட்சியிலிருந்து விடுதலை பெறலாயின. ஆபிரிக்காவின் கொலனி ஆட்சிகட்கெதிரான விடுதலைப் போராட்டங்கள் உக்கிரமாயின. ஆசிய நாடுகள் பலவற்றின் கம்யூனிஸ்ட் கட்சிகள் வலுவுடன் இருந்தன. ஆபிரிக்காவின் முன்னணி விடுதலை இயக்கங்கள் பல, வலுவான இடதுசாரிப் போக்குடன் இருந்தன. அனைத்துக் கொலனிய விரோத விடுதலை இயக்கங்கட்கும் சோவியத் ஒன்றியமும் சீனாவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி வந்தன. எனவே சர்வதேசச் சூழல் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் சோஷலிசத்துக்கும் புரட்சிகர மாற்றங்கட்கும் சாதகமாகவும் இருந்தது.

உலக இடதுசாரி இயக்கத்துக்குச் சாதகமான ஒரு சூழல் இருக்கையில், 1964இல் உலகின் கம்யூனிஸ்ட் இயக்கம் ஒரு பாரிய பிளவைச் சந்தித்தமை இடதுசாரி இயக்கத்துக்கு மட்டுமன்றி உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்பு எழுச்சிகளுக்கும் ஏகாதிபத்தியத்தின் நவ கொலனி ஆதிக்கத்திற்கெதிராகப் புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளின் செயற்பாடுகட்கும் கேடாக அமைந்தது. மேற்கூறிய பிளவைத் தவிர்த்திருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதன் விளைவுகளும்



இயலாதா என்ற கேள்வி இயல்பாகவே இடதுசாரிக ளிடையேயும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களிடையே யும் எழுந்தது. இதைத் தவிர்த்திருக்கலாம் என்ற ஆதங்கம் இன்னமும் பலருடைய மனதில் உள்ளது. அதேவேளை அப்பிளவையிட்டு மகிழ்ந்தவர்களும் இருந்தார்கள். வலதுசாரிகளும் ஏகாதிபத்தியச் சார் பானவர்களும் மட்டுமன்றி ரொட்ஸ்கியவாதிகளும் மனம் மகிழ்ந்தார்கள்.

1964 இல் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற் பட்ட பிளவு திடீரென ஏற்பட்டதல்ல. 1957 இல் இரக சியமாகவும் 1959 இல் பகிரங்கமாகவும் சோவியத் ஒன்றியத்தின் ஆட்சித் தலைவரான குருஷ்சேவ் ஸ்ரா லினைக் கண்டித்துப் பேசியதன் விளைவாக ஏற்பட்ட துமல்ல. சோவியத் ஒன்றியத்தின் தலைமை அல்பா னியாவின் ஆட்சியைப் பகிரங்கமாகக் கண்டித்து மிரட்டியமையோ சீனாவின் உள்நாட்டு அலுவல்க ளைப் பற்றிப் பாதகமான கருத்து வெளியிட்ட மையோ காரணங்கள் அல்ல. சீன-சோவியத் முறுக லால் பிளவு ஏற்பட்டது என்பது விளைவையும் கார ணத்தையும் தலைகீழாக்குகிறதாகும்.

தவறான, சந்தர்ப்பவாதப் போக்குகள் எல்லா நாடு களிலும் எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் இருக் கக்கூடியன. ஒரு கம்யூனிஸ்ட் கட்சி தத்து வார்த்தத் தெளிவோடும் கொள்கை உறுதியோடும் இருப்பதா னால், அது உட்கட்சி ஜனநாயகத்தைப் பேண வேண் டும். எப்படியாவது ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தாற் போதும் எனும் அணுகுமுறை இயல்பாகவே ஒரு கட் சியைச் சந்தர்ப்பவாதப் போக்கிற் கொண்டு செல்லும். இப்பலவீனத்தை ஐரோப்பியக் கம்யூனிஸ்ட் கட்சிகள் சிலவற்றிற் காணமுடிந்தது. பிரான்ஸின் கம்யூனிஸ்ட் கட்சி பிரெஞ்சுக் கொலனி ஆட்சியாளர்களை நியாயப்படுத்தித் தனது ஆதரவுத்தளத்தைப் பேண லாம் என எதிர்பார்த்தது. பாராளுமன்றத் தேர்தல் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கலாம் என்ற மயக் கம் இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை யிடமும் இருந்தது. இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பால்மிரோ தொக்லியாட்டியின் நிலைப் பாட்டை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக விமர்சி த்திருந்தது.

மேற்கண்டவாறு, புரட்சிகர மாற்றத்திற்கு மாறாக முதலாளிய ஜனநாயகப் பாராளுமன்றத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றி சோஷலிச மாற்றத்தை ஏற்ப டுத்தலாம் என்ற கருத்து ஐரோப்பியக் கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் ஏற்படக்காரணம் அவர்களது வாக் காளர் ஆதரவுத்தளம் ஓரளவு வலுவாயிருந்தது என் பது மட்டுமன்றி ஒரு வலுவான முதலாளியப் பொரு ளாதாரம் உள்ள சூழலில் ஒரு புரட்சிகர மாற்றத்தை எவ்வாறு கொண்டு வருவது என்பதற்கான ஒரு வேலைத்திட்டம் இல்லாமையுமாகும். தேசிய மட் டத்தில் தேர்தல் அரசியலில் மூழ்கும் போது சர்வ தேச நோக்கும் கைநழுவி தத்தமது நாடுகளின் முத லாளிவர்க்க நலன்களைப் பேணுமளவுக்கு ஒரு கம் யூனிஸ்ட் கட்சி சீரழியலாம் என்பது வரலாற்று உண்மை.

எவ்வாறாயினும் கம்யூனிஸ்ட் கட்சிகளில் அதிதீ விர இடதுசாரிப் போக்குகளும் வலது சந்தர்ப்ப வாதப் போக்குகளும் காணப்பட்டேயுள்ளன. சில சமயங்களில் அதிதீவிர இடதுசாரிகள் தமது அரசி யல் விரக்தியால் மறு அந்தலைக்குத் தாவி வலது சந் தர்ப்பவாதிகளாகவும் பாராளுமன்றப் பாதையைப் பரிந்துரைப்போராகவும் மாறுவதுண்டு.

எவ்வாறாயினும், சோவியத் ஒன்றியத்தினுள் ஸ்ரா லினின் மறைவையொட்டி ஏற்பட்ட மாற்றம், சோவி யத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்த முதலாளியச் சிந்தனைகளின் விளைவானது. சோவியத் ஒன்றியத் தின் பொருளாதாரம் சமச்சீரான முறையில் விருத்தி பெறாமை ஒரு புறமிருக்க, சோவியத் ஒன்றியத்தின் சோசலிச விருத்தி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்அனுபவமின்மையாலும் இரண்டு பெரிய போர் களின் தாக்கத்தாலும் ஏகாதிபத்திய வல்லரசுகள் திட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டமிட்டே சோவியத் ஒன்றியத்தைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியதாலும் பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்கியது. அனைத்திலும் முக்கியமாக வர்க்கப் போராட்டத்தை விடாது முன்னெடுக்கும் தேவையை மிகவும் காலங்கடந்தே ஸ்ராலின் தலைமை உணர்ந்தது. ஏலவே தன்னைப் பலப்படுத்திக் கொண்ட ஒரு அதிகாரி முதலாளி வர்க்கம் ஸ்ராலினின் மறைவைத் தனக்குச் சாதகமாக்கியது. குருஷ்சேவ் அதன் கருவியாகச் செயற்பட்டார்.

முதலாளியத்தை நோக்கிய நகர்வுகளுக்குச் சமாந்தரமாகவே ஆயுதமேந்திய போராட்டத்தை அறவே நிராகரிப்பதும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் சோஷலிசத்தை அடைவதும் என்ற நிலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதுமட்டுமன்றி அமெரிக்காவுடன் ஒத்துழைப்பு என்ற கொள்கை ‘சமாதான சகஜீவனம்’ என்ற பெயரில் முன்வைக்கப்பட்டது. இது அமெரிக்க ஏகாதிபத்தியம் எவ்வளவு கொடிய எதிரி என்பதை அறிந்தும் மேற்கொள்ளப்பட்ட ஒரு தவறான நிலைப்பாடாகும். அதேவேளை உலக நாடுகளில் சோவியத் செல்வாக்கையும் (முடிந்தால் ஆதிக்கத்தையும்) நிலைநிறுத்தும் ஒருபோக்கும் காணப்பட்டது. கியூபாவில் சோவியத் ஏவுகணைத் தளமொன்றை நிறுவும் யோசனை கியூபாவின் மீது திணிக்கப்பட்டதாகும். எனினும் அமெரிக்க மிரட்டலுக்குப் பயந்து பின்வாங்கியதன் மூலம் சோவியத் ஒன்றியம் தனது பலவீனத்தைப் புலப்படுத்தியதோடு கியூபாவையும் மேலும் அதிக அமெரிக்க மிரட்டலுக்கு உட்படுத்தியது.

நிக்கிற்றா - குருஷ்சேவின் கீழ் சோவியத் ஒன்றியத்தின் சோஷலிசக் கட்டமைப்பு பலவீனப்பட்டுக் கூட்டுப்பண்ணை விவசாயம் குலைக்கப்படுகையில், சீனாவில் அதற்கெதிரான முறையில் கிராமங்களில் மக்கள் கம்யூன்கள் நிறுவப்பட்டு கூட்டுறவு முறையிலும் சமூக பொதுப்பட்ட உற்பத்தி முறையிலும் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. தொழில்கள் பூரண அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. எனவே சோஷலிசம் பற்றிய நேரெதிரான அணுகுமுறைகளையுடைய இரண்டு பெரிய நாடுகளாக சோவியத் ஒன்றியமும் சீனாவும் இருந்தன.

குருஷ்சேவ் ஸ்ராலினைக் கடுமையாகத் தாக்கியதற்குத் தனிப்பட்ட காரணங்களை விட மிக ஆழமான அரசியல் நோக்கங்கள் இருந்தன. சோவியத் ஒன்றியத்தின் முதலாளிய பொருளாதாரத் திசை திருப்பமும் ஏகாதிபத்தியத்துடன் சமரசமாகும் அயற் கொள்கைத் திருப்பமும் அவற்றில் முக்கியமானவை. புரட்சிகர அரசியல் மாற்றங்களை நிராகரிப்பது அதற்கு அவசியமாயிற்று. அதேவேளை மார்க்சியத்தின் அடிப்படையில் சோஷலிசத்தை நோக்கி முன்னேறும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிலான ஆட்சி என்பதை ஒரேயடியாகத்தூக்கி எறிவதன் மூலம் சோவியத் அரசாங்கம் தனது நம்பகத்தை இழக்கும் என்பதால் மார்க்சியத்தின் பெயராலேயே முதலாளியத்தை நோக்கி நகரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

எல்லாப்பிளவுகளும் ஆழமான தத்துவார்த்தத் தெளிவுடனும் விரிவான விவாதத்தின் அடிப்படையிலும் நடந்ததாகக் கூற இயலாது. முக்கியமாக இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் 1964இல் ஏற்பட்ட பிளவு தெளிவான ஒரு விவாதத்தின் அடிப்படையில் நிகழவில்லை. மாறாக இலங்கையில் ஆழமான விவாதம் ஒன்றின் அடிப்படையில் ஏற்பட்ட பிளவின் விளைவாக உருவான மாக்சிச லெனினிச கட்சி பின்னர் பல பிளவுகளுக்கு உட்பட்டிருந்தாலும் உருவான கட்சிகள் உறுதியான நிலைப்பாட்டுடன் இருந்து வந்துள்ளன.

சோவியத் ஒன்றியத்தின் சர்வதேச செல்வாக்கு சோஷலிச ஆட்சிகள் இருந்த நாடுகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடைய ஆட்சிகள் இரு ந்த நாடுகளிலும் கொலனிய எதிர்ப்புப் போராட்டங்களையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும் முன்னெடுத்த விடுதலை இயக்கங்களையும் சார்ந்தே அமைந்திருந்தது. சர்வதேச நோக்கில் சோஷலிசப் புரட்சியை வேண்டி நின்ற கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களும் கொலனிய எதிர்ப்புப் போராட்டங்களும் முனைப்பாக இருந்த நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சோவியத் ஒன்றியத்தின் தலைமையின் திசை மாற்றத்தை விரும்ப இடமில்லை.

மேற்கூறிய அடிப்படையிலேயே 1964ஆம் ஆண்டில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தினுள் ஏற்பட்ட பிளவிற்கு முன்னோடியான விவாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பிரிந்து நின்றன. சோவியத் ஒன்றியத்தின் ஆதிக்கத்திற்குட்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏறத்தாழ முழுதாகவே சோவியத் ஒன்றியத்தின் ‘நவீன திரிபுவாதம்’ என அழைக்கப்பட்ட பாதையுடன் ஒத்துப்போயின. எனினும் கருத்து முரண்பட்ட சிறுபான்மையினரும் இருந்தனர்.

சோவியத் ஒன்றியத்தின் உதவியில் தங்கியிருந்த வியட்நாம், வடகொரியா, கியூபா ஆகியன புரட்சிகரப்போராட்டப் பாதையை ஏற்ற போதிலும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கீழும் சீனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட் தலைமையின் கீழுமாக அணிபிரிந்த தரப்புகளில் எதனுடனும் ஒட்டாமல் ஒதுங்கின. எனினும் ஆசிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் பல வெளிப்படையாகவே புரட்சிகரப் பாதையை ஏற்றன. சில நாடுகளின் கட்சிகளில் பிளவுகள் ஏற்பட்டன. ஐரோப்பாவில் அல்பானியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடக்கத்திலிருந்தே சோவியத் திரிபுவாதத்தை நிராகரித்திருந்தது. ஆபிரிக்காவின் விடுதலை இயக்கங்கள் யாவும் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தால் அவற்றுக்கு சோவியத் ஒன்றியத்தின் சமரசப் போக்கு உடன்பாடாக இருக்கவில்லை. எனினும் சோவியத் ஒன்றியம் வழங்கிவந்த உதவிகள் காரணமாக அவை வெளிப்படையாக எத்தரப்பையும் ஆதரிக்கவில்லை. எனினும் போராளிகளின் மட்டத்திலும் ரொடீசியா (சிம்பாப்வே), மொஸாம்பிக் போன்ற நாடுகளின் தலைமைகளிடையில் வெளிப்படையாகவே சீனாவின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு இருந்தது.

எவ்வாறாயினும் எல்லா நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் போராட்டப்பாதையை ஏற்றவர்கள் தம்மை மாக்சிச லெனினிச வாதிகள் என அடையாளப்படுத்தித் தனித்து இயங்கினர். அவர்கள் சோவியத் நிலைப்பாட்டை நிராகரித்தனர்.

எல்லாப் பிளவுகளும் ஆழமான தத்துவார்த்தத் தெளிவுடனும் விரிவான விவாதத்தின் அடிப்படையிலும் நடந்ததாகக் கூற இயலாது. முக்கியமாக, இந்தியாவில் 1964 இல் ஏற்பட்ட பிளவு, தெளிவான ஒரு விவாதத்தின் அடிப்படையில் நிகழவில்லை. அதன் பயனாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து தன்னை அதினும் வலிய கட்சியாக நிலைநிறுத்திய இந்திய மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெகு விரைவிலேயே இன்னுமொரு பாராளுமன்ற இடதுசாரிக்கட்சியாகியது. மாறாக, இலங்கையில் ஆழமான விவாதமொன்றின் அடிப்படையில் ஏற்பட்ட பிளவின் விளைவாக உருவான மாக்சிச லெனினிசக்கட்சி பின்னர் பிளவுகட்குட்பட்டாலும் உருவான கட்சிகள் உறுதியான நிலைப்பாட்டுடன் இருந்து வந்துள்ளன.

ஏறத்தாழ முற்றுமுழுதாகவே போராட்டப் பாதையை ஏற்ற இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி நடைமுறையில் அளவுக்கதிகமாக இந்தானேசியாவின் முற்போக்கான ஜனாதிபதி சுகர்ணோ மீது தங்கியிருந்து புரட்சிகர வெகுஜன வேலைகளில் கவனம் பிசகியதால் இராணுவப் புரட்சியின் மூலம் சுகர்ணோ ஆட்சி கவிழ்ந்ததையடுத்து, கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாகவும் ஆதரவாளர்களாகவும் அறியப்பட்ட ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானோர் (பத்து இலட்சம் எனவும் சிலர் கூறுவர்) இராணுவ ஆட்சியால் கொல்லப்பட்டனர். மாறாக எச்சரிக்கையுணர்வுடன் செயற்பட்ட பிலிப்பினியக் கம்யூனிஸ்ட் கட்சி இன்னமும் வலியதொரு புரட்சிகரக் கட்சியாகத் தொடர்கிறது.

மறுபுறம் பாராளுமன்றப் பாதையை ஏற்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏறத்தாழ, விலக்கில்லாமல் தேர்தல் அரசியலில் சிக்குண்டு பிற்போக்கான கூட்டணிகளிற் பங்காளிகளாகி வெறும் சீர்திருத்தவாதக் கட்சிகளாகவோ அதைவிட மோசமாகவோ சீரழிந்துள்ளன.

ஒட்டுமொத்தமாக, 1964 இல் ஏற்பட்ட பிளவு உலக இடதுசாரி இயக்கத்திற்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திற்கும் கேடானது. ஆனால் அந்தப் பிளவைத் தவிர்க்கப் பாராளுமன்ற சந்தர்ப்பவாத (அதாவது திரிபுவாத) அரசியலை எல்லாரும் ஏற்றிருந்தால், ஒருவேளை, ஒரு வலிய பெயரளவிலான கம்யூனிஸ்ட் இயக்கம் எஞ்சியிருந்திருக்கும். அது இந்திய, தென்னாபிரிக்க, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் எனப்படுவன போன்று மக்களுக்குப் பயனற்ற ஒரு சர்வதேசக் கூட்டணியாயிருந்திருக்கும்.


மாறாக 1964 இன் விவாதம் புரட்சிகர மாக்சிய லெனினிஸப் பாதையின் பூரண வெற்றியில் முடிந்திருந்தால் நிச்சயமாக ஏகாதிபத்தியம் மிகவும் பலவீனப்பட்டிருப்பதுடன் மேலும் பல நாடுகள் சோஷலிச ஆட்சிகளைக் கொண்டிருந்திருக்கும். எனினும் சோவியத் ஒன்றியத்தில் குருஷ்சேவ் தொடக்கி வைத்த போக்கு சோவியத் ஒன்றியத்தின் உடைவிற்கும் முழுமையாக முதலாளியத்துக்குள்ளும் சோவியத்குடியரசுகள் அனைத்தையும் தள்ளிவிட்டது போல சீனாவில் டெங் ஷியாவோபிங் தொடக்கி வைத்த சீனப் பண்புகளையுடைய சோஷலிசம் சீனாவை ஒரு முதலாளிய வல்லரசாக்கியுள்ளது.

மேற்கூறிய பின்னடைவுகள் ஏன் நிகழ்ந்தன என்பதை ஆராய்வதற்கு இங்கு இடம் போதாது. ஆனால் ஏகாதிபத்தியம் சென்ற நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியிற்பெற்று வந்த வெற்றிகள் சென்ற நூற்றாண்டு முடியும் முன்பே பயனற்றுவிட்டன. அமெரிக்காவின் உலக ஆதிக்கக் கனவு வெகு வேகமாகக் கலைந்து வருகிறது. உலக முதலாளியத்தின் பொருளாதார நெருக்கடி இப்போது ஏழாவது ஆண்டிற் காலடி வைத்துள்ளது. எனினும் முதலாளியம் தானாக முடிவுக்கு வராது. கடந்த ஐம்பதாண்டுகால அனுபவத்தினின்று உலகின் இடதுசாரி இயக்கங்கள் கற்க நிறைய உண்டு. எங்கெல்லாம் இடதுசாரிகள் கடந்தகால தவறுகளினின்று கற்கத் துணிந்தார்களோ அங்கெல்லாம் இடதுசாரி இயக்கம் மிகவும் பாதகமான சூழல்களிலும் கூட உயிர்ப்புடன் இருந்துள்ளது.

இன்று ஏகாதிப்பத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் ஆற்றல் புரட்சி இடதுசாரிகட்கு மட்டுமே உண்டு. அந்த ஆற் றலை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்தத் தவறினால் அந்த இடைவெளியை நிரப்ப அடையாள அரசியலைப் பாவித்து மக்களை அடிமைப்படுத்த ஃபாசிசம் பல வடிவங்களிற் தருணம் பார்த்து நிற்கிறது.

நேர்மையான இடதுசாரிகளின் முன்னாலுள்ள தெரிவுகள் அதிகமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உமா வரதராஜன்

## தமிழ் சினிமா

# காலமும் கோலமும்

என்னுடைய அம்மா நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்கு கிட்டத் தட்ட தமிழ் சினிமாவின் வயது. அநேகமாக '1950 களில் தமிழ்ப் படங்களுடன் பரிச்சயம் ஏற்பட்டிருக்கலாம். ஏழை படும் பாட்டில் வி. நாகையா, ஜாவர் சீதாராமன் ஆகியோருடைய நடிப்பாற்றலை விபரிக்கும் போதும், 'வாராய் ..நீ வாராய்' என்று கபடத் தனத்துடன் பாடிக்கொண்டே நடராஜன் மந்திரிகுமாரியை மலையுச்சிக்கு வழி நடத்திச் செல்லுவதை கூறுவதையும், 'ராஜன் வருவாரே..' என்று கிணற்றுக்குள்ளிருந்து எதிரொலிக்கும் சர்வாதிகாரி பாடல் பாடலின் தொடக்கம் கண்ணாளன் வருவார் பற்றிக் கூறுவதையும், வஞ்சிக் கோட்டை வாலிபனில் வைஜயந்திமாலாவும், பத்மினியும் நடனப் புயல் எழுப்பும் 'கண்ணும், கண்ணும் கலந்து சொந்தம் கொண்டாடுதே' காட்சி பற்றிச் சொல்லுவதையும், கொட்டும் மழையில்' சிற்பி செதுக்காத பொற்சிலையே' பாடலின் இறுதியில் பத்மினி கையால் சிவாஜியின் கன்னத்தில் விழுந்த அறை பற்றிக் கூறுவதையும் சின்ன வயதில் கேட்டு வளர்ந்தவன் நான். புராணம், பக்தி, மாயா ஜாலம், வீரதீர சாகசம்,சோகம் என தமிழ்த் திரை வழியாக அவர் பல படங்களைக் கடந்து வந்திருக்கிறார்.

என் சினிமாக் காலம் களத்தூர்க் கண்ணம்மாவுடன் (1960) ஆரம்பமாகின்றது. பழைய பாணிப் படங்களிலிருந்து சமூகம் சார்ந்த படங்களை நோக்கி தமிழ் சினிமா நகர்ந்த காலம் அது. மழை விட்டும் தூவானம் போல் வந்த மன்னாதி மன்னன், குறவஞ்சி, வீரக்கனல், அரசிளங்குமரி போன்ற சரித்திரப் பாணிப் படங்கள் எல்லாம் நட்சத்திர நடிகர்களைக் கொண்டிருந்தும் அடிவாங்கத் தொட ங்கியிருந்தன.. (ஒரு விதிவிலக்கு, புதுமுகநாயகனான சி.எல்.ஆனந்தன் நடித்து வெளிவந்த விஜயபுரிவீரனின் வெற்றி).

அம்மாவும் நானும் சேர்ந்திருந்து தமிழ் சினிமா பார்ப்பதில் இப்போதெல்லாம் நிறைய சங்கடங்கள் வந்து விட்டன.


ரத்தம் தெறிக்கும் வன்முறைக் காட்சிகள்,கதாநாயகன் கதாநாயகியிடம் உச்சி முதல் உள்ளங் கால் வரை காட்டும் மோப்ப சக்தி, கைப்பேசிகள் வழியாக காதலர்கள் பரிமாறிக்கொள்ளும் உரையாடல்கள், செய்திகள், இணையம் பற்றிய அஞ்ஞானம் அவரை கொஞ்சம் தூரப்படுத்தி விட்டன. என் வற்புறுத்தலின் பேரில் அவர் பார்த்த 'சதுரங்க வேட்டையில்' ஆலயக் கலசத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருடி அதன் நகலைத் தயாரிக்கும் காட்சியில் பொறுமையின் எல்லையைக் கடந்துவிட்டார்.

தமிழ் சினிமாவும் அதன் நாயகர்களும் வசனங்கள் வழியாகவும், பாடல் கள் மூலமாகவும் ஆண்டாண்டு காலமாகப் போதித்து வந்த ஒழுக்கம்,நேர்மை, அறம் போன்ற கற்பிதங்களை தமிழ் சினிமா உதறத் தொடங்கி விட்டதை அவரால் சகித்துக்கொள்ள இயல வில்லை. 'ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுவது தப் பில்லை' என்று சொல்லும் 'சதுரங்க வேட்டை' நாயகனுக்கும் (2014), 'திருடாதே பாப்பா திருடாதே' என்று திருடாதேயில் (1961) பாடிய பாலுவுக்கும் இடையில்தான் எவ்வளவு தூர மும்,மாற்றமும்? ஒரு காலத்தில் வில்லன்கள் என்பவர்கள்



பீம்சிங்

பீறிட்டுப் பாயும் இரத்தம் வெண்திரையை அப்படியே சிவப்பாக்கும் அளவிற்கு கச்சிதமான ஒளிப்பதிவு. ஆட்கடத்தல், கொலை, கொள்ளை என வெகு ஆரவாரமாக தமிழ் சினிமா இருக்கிறது. மல்யுத்தம் பார்த்து கரகோசம் செய்யும் மணநிலைக்கு நம் ரசி கர்களை ஒரு வழியாக கொண்டுவந்து சேர்த்து விட்டனர். தார்மீக கோபமும் தர்மாவேசமும் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களையெல்லாம் கிண்டலுடனும் கேலியுடனும் கடந்து செல்லும் மனநிலைக்கு நாம் வந்துவிட்டதாகவே தோன்றுகிறது



கிருஷ்ணன் - பஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகர்களின் 'உதைபந்துகள்' போல் பயன்படுத்தப்பட்ட வில்லன்கள்தான் இன்றைக்கு தமிழ் சினிமாவின் 'பொன் முட்டையிடும் வாத்துகள்'.. பொலிஸ் அதிகாரிகள் கூட அவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு கை கட்டி வாய் பொத்தி சேவகம் புரிகிறார்கள். படித்த அழகிகளுக்கும் இந்த தமிழ் சினிமா தாதாக்கள்தான் வசீகர பிம்பங்கள். அவர்கள் உதடுகள் நடுவே குச்சியையோ, சிகரெட்டையோ வைத்துக் கொண்டு எவ்வளவுதான் முறைப்பாகவும், விறைப்பாகவும் இருந்தாலும் கூட இந்தப் பணக்கார, படித்த அழகிகள் துரத்தித் துரத்திக் காதலிக்கிறார்கள்.

தன் முன்னாள் காதலியின் கணவன் தன்னிடமே நோயாளியாக அட்மிட் ஆகி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு சத்திர சிகிச்சை செய்து காப்பாற்ற வேண் டிய பாரிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட டாக்டர் ஒருவரைப் பார்த்த என் அம்மாவுக்கு படம்: நெஞ்சில் ஓர் ஆலயம் (1962) அமைச்சர் ஒருவரின் பொறுக்கி மகனையும், அவனுடைய நண்பர்களையும் ஹோட்டல் அறையொன்றில் கடத்தி வைத்து அமைச்சருக்கும், காவல்துறைக்கும் சவால் விட்டு விரல்களை நறுக்கி அனுப்பும் டாக்டர் படம்: நான்- (2014) அதிர்ச்சியை உண்டாக்குவதில் என்ன ஆச்சரியம்?

என் சின்ன வயதில் அநேகமான படங்களைப் பார்க்கும் போது நடுவே என்னையறியாமல் தூங்கி இருக்கிறேன். அப்போதெல்லாம் என்னை விழிக்கச் செய்வது கல்யாண கெட்டிமேளச் சத்தம்தான். பல போராட்டங்களுக்குப் பின் கதாநாயகன் தன் முயற்சியில் வெற்றியடைந்து நாயகியின் கைத்தலம் பற்றி, சினிமா நிறைவு பெற்று விட்டது என்பதற்கான அடையாளம் அந்தச் சத்தம். நான் சினிமா பார்க்க ஆரம்பித்த காலத்தில் பீம்சிங் ,கிருஷ்ணன் -பஞ்சு போன்றோர் குடும்பப் படங்களுக்கு மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தார்கள். பீம்சிங்கின் படங்களில் வரும் மொத்தப் பாத்திரங்களின் எண்ணிக்கையும்,வசன இரைச்சலும் ஒரு சந்தைக்குள் சென்று வந்தது போல் இருக்கும். ஆனா,ஆவன்னாவுக்கு முன்னரே பானா, பாவன்னாவை தமிழில் படித்த ஒருவராக பீம்சிங் இருந்திருக்கக்கூடும். (ராசி என்பதற்காக எவ்வளவு பானா,பாவன்னாவுடன் மல்லுக் கட்டியிருப்பார். பாகப்பிரிவினை, பாவமன்னிப்பு, பாசமலர், பாலும் பழமும், பார்த்தால் பசிதீரும், பார் மகளே பார், படிக்காத மேதை, பச்சை விளக்கு,பந்தபாசம், பழனி) எப்போதும் முறைத்துக் கொண்டிருக்கும் குடும்ப வில்லிகளை இன்றியமையாத பாத்திரங்களாகக் கொண்ட இன்றைய டிவி. மெகா சீரியல்கள் பலவற்றுக்கு கிருஷ்ணன்-பஞ்சு, கோபாலகிருஷ்ணன் போன்றோர்தான் முன்னோடிகள். அவர்களுடைய நாயகிகள் சுமைதாங்கிகள். பொறுமையின் சிகரங்கள். பின் தூங்கி, அலாரம் வைக்காமலேயே முன் எழுபவர்கள்.

ஸ்ரீதரை, அவர் அதிகம் பேசப்பட்ட காலத்தில் (கல்யாணப்பரிசு, மீண்ட சொர்க்கம்) நான் அறிந்ததில்லை. தேன்நிலவு, காதலிக்க நேரமில்லை, ஊட்டி வரை உறவு ஆகிய படங்களை வைத்து ஒரு குதூகல மனநிலை கொண்ட இயக்குனர் என்ற மனச் சித்திரம் ஆரம்பத்தில் என் மனதில் உருவாகி இருந்தது. சுமைதாங்கி, விடிவெள்ளி ,நெஞ்சம் மறப்பதில்லை, நெஞ்சில் ஓர் ஆலயம், பொலிஸ்காரன் மகள், கலைக் கோயில்,வெண்ணிற ஆடை, நெஞ்சிருக்கும் வரை, அவளுக்கு என்று ஒரு மனம் போன்ற படங்கள் பல ரகமான ரசங்களையும் வெளிப்படுத்துவதில் அவருக்கு இருந்த ஆற்றலையும், காட்சிப் படுத்தலில் உள்ள அக்கறையையும், நட்சத்திரங்களில் தங்கியிராத தன்னம்பிக்கையையும் பின்னாட்களில் உணரச் செய்தன. ஸ்ரீதருக்கு மிகவும் பிடித்த இயக்குநர் ; குருதத் அவருடைய இயக்கத்தில் வெளியான பியாஸா ஸ்ரீதருக்கு மிகவும் பிடித்த படம் என்ற செய்தி உணர்த்திய மறைமுகமான ஓர் உண்மை உண்டு. தமிழ்த் திரையுலகில் உயர்ந்த இலக்குகளை நோக்கிப்


கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்


ஸ்ரீதர்


கே.பாலசந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிப்பவர்கள் காலப் போக்கில் வணிக நோக்கங்களுக்காக சமரசம் செய்து கொள்ளும் கையறு நிலை. தமிழ்ப் படம் அவர் மீது பின்னாட்க ளில் நட்சத்திர நடிகர்களுடன் சமர சம் செய்து கொண்டு அவர் பங்காற் றிய படங்கள் அவருக்குப் பெருமை சேர்க்கவில்லை.


என் கல்லூரிக் காலத்தில் நான் தேடித் தேடிப் பார்த்த ஓர் இயக்கு னர் கே.பாலசந்தர் .அது வரை பார்த்த தமிழ் சினிமாக்களிலிருந்து அவருடைய படங்கள் காட்சிய மைப்புகளிலும், வசனங்களிலும், பாத்திர உருவாக்கங்களிலும் வேறு பட்டிருந்தன.படித்த, மத்தியதர வர்க் கத்தினராலும், மேடை நாடக ரசிகர் களாலும் விதந்துரைக்கப்பட்டவர். இப்போது யோசிக்கும் போது தமிழ்த் திரைப்படங்களில் நினை வில் நிற்கும் பாத்திரங்களை தமிழ்த் திரைப் படங்களில் அவரளவுக்கு அதிகளவில் உருவாக்கியவர்கள் இல்லையென்றே சொல்லலாம்.அவ ருடைய படங்களில் வரும் உதிரிப் பாத்திரங்கள் கூட துலக்கம் பெற்றி ருக்கும். நீர்க்குமிழியில் வரும் புற்று நோயாளி, மாடிப் படி மாது, மேஜர் சந்திரகாந்த் ,அதில் வரும் இன் னொரு பாத்திரமான டெய்லர், காவி யத் தலைவியில் வரும் தாய், நூற் றுக்கு நூறு பேராசிரியர், வெள்ளி விழா பாலா, மம்மி, அரங்கேற்றம் லலிதா,அவள் ஒரு தொடர்கதை கவிதா, அபூர்வராகங்கள் பாடகி எம்.ஆர்.பைரவி, அவளை விரும் பும் பிரசன்னா, பைரவியின் முன் னாள் கணவன், மூன்று முடிச்சின் நண்பர்கள், அவர்கள் இருவருமே விரும்பிய செல்வி, அவளை மணந்து கொண்ட காதலனின் அப்பா, தண் ணீர் தண்ணீர் செவ்வந்தி, அச்ச மில்லை அச்சமில்லையின் தேன் மொழி, அவள் கணவனும் அரசியல்வாதியுமான உலகநாதன் ....இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

பெண்களுக்காக குரல் எழுப்புவது போலவும், பெண்கள் குரல் ஓங்கு வது போலவும் ஒருபுறம் காட்டிக் கொண்டே இன்னொரு புறம் அவர் களை நிராதரவாக்குவதும், 'இலட் சுமணன் கோடை'த் தாண்டாமல் ஆக்குவதும்,பழைய நரகத்தில் உழல விடுவதும் அவருடைய பாணி, பிளவுஸ் அணியும் பெண்களின் முதுகுப்புறத்தை அவர் படத்துக்குப் படம் காட்டியதும் அவர்கள் மீது கொண்ட கரிசனையால்தான் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஜெயித்த குதிரையிலேயே மீண் டும் பணம் கட்டும் குருட்டு நம் பிக்கை கொண்ட ஒருவரைப் போல ஏற்கனவே வெளிவந்து பரவலான கவனத்தைப் பெற்ற தன் படங்க ளையே அவர் மீள் வடிவம் கொடுக் கத் தொடங்கியதில் இருந்து அவரு டைய சரிவு ஆரம்பமானது.அவள் ஒரு தொடர்கதை கவிதா மனதில் உறுதி வேண்டும் திரைப் படத்தில் மறு பிறவி எடுத்தாள். அபூர்வராகம் போன்ற சித்து விளையாட்டுகளை யும், பொம்மலாட்டங்களையுமே தன் உச்சபட்ச சாதனைகளாக நினைத் ததன் விளைவு புதுப் புது அர்த்தங் கள், பார்த்தாலே பரவசம். பாலசந்த ரின் மிகப் பெரிய பலவீனம் எல்லாப் பாத்திரங்களின் வழியாகவும் அவர் பேசிக் கொண்டிருப்பது.

நகரம், கிராமம் என இரண்டிலும் கால் பதித்தவர் பாரதிராஜா . எனி னும் கிராமப் பின்புலம் கொண்ட படங்களுக்காகவே அவர் பெரிதும் பேசப்பட்டார். (ஒரு விதி விலக்கு 'என்னுயிர்த் தோழன்'). தென் தமிழ கம் அவருடைய பாத்திரங்களினால் கனவின் மாயாலோகமானது.அவரு டைய ஜோடிகள் வஞ்சகம் இல்லா மல் 24 மணி நேரமும் காதலித்தார் கள், தமிழ்ப் படங்களில் அரிவாள்கள் இவர் காலத்தில்தான் கூர்மை பெற் றன. வெள்ளுடைத் தேவதைகளின் ஹம்மிங், சாதிப் பெருமை, ரிப்பீட் ஷாட்கள், ஒரே கிராமத்தில் ஐந்தி ணைகளையும் இணைக்கும் மாய வித்தை எல்லாம் பாரதிராஜாவின் படங்களில் தவறாமல் இடம்பெற் றன, எம்.ஜி.ஆர். படத்து வில்லன்க ளுக்குப் பின்னர் அளவுக்கதிகமான காம உணர்வைத் தூண்டும் ஹார் மோன் சுரந்து கொண்டிருந்தது பார திராஜாவின் படங்களில் வரும் மாம


மகேந்திரன்


பாலு மகேந்திரா


பாரதிராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கும், மச்சானுக்குந்தான். பாரதி ராஜாவின் மிகப்பெரிய பலம் இசைய மைப்பாளர் இளையராஜா.


ஏறத்தாழ இதே காலகட்டத்தில் தமிழுக்கு கிடைத்த இன்னொரு இயக்குனர் மகேந்திரன். இன்றளவும் அவருடைய பெயர் 'உதிரிப் பூக் களு'டன் இணைக்காமல் நினைக்கப் படுவதில்லை. நெஞ்சத்தைக் கிள்ளா தேயில் மிகவும் பொறுப்புணர்வுடன் இளம் உள்ளங்களின் போராட்டங் களை அவர் அணுகியிருந்தார் .அவ ருடைய தொய்வு நிறைந்த பூட்டாத பூட்டுகள், மெட்டி, நண்டு, ஊர்ப் பஞ்சாயத்து மற்றும் அபத்தமான கதையமைப்பைக் கொண்ட ஜானி இவற்றை நாம் மறப்பதற்கு கார ணங்கள் இல்லாமலில்லை. மகேந்திர னின் படங்களில் தென்படும் மனித நேயம் அது. அவருடைய படங்க ளின் பெண்களுக்கு கிடைத்த ஒரு மரியாதையான அந்தஸ்து. பெண் கள் பற்றிய இந்தப் பரிவுநிலை நோக்கு ஏனைய இயக்குனர்களிடம் அவ்வளவாக இருக்கவில்லை.

மறைந்த பாலுமகேந்திரா அவர் கள் தமிழ் சினிமாவில் ஏற்படுத்திய தாக்கம் முக்கியமானது. ஐரோப்பிய சினிமாவில் ஈடுபாடு கொண்ட அவர் தமிழ் சினிமாவின் வடிவத் தில் முக்கிய மாற்றங்களைக் கொணர விழைந்தவர். பால்ய கால அனுப வங்களை உள்ளடக்கிய அவருடைய அழியாத கோலங்கள் பெரும் சல சலப்பை அந்த நாட்களில் ஏற்படுத் தியது. காட்சியமைப்புகளில் ஒரு கச்சிதத்தையும், குளுமையையும் அவர் வெளிப்படுத்தியவர். அவரு டைய சில படங்களைத் தவிர ஏனை யவை பாலியலின் வசீகரப்போர்வை கொண்டவை. (அழியாத கோலங் கள், மூடுபனி, நீங்கள் கேட்டவை, வண்ண வண்ணப் பூக்கள், அது ஒரு கனாக் காலம், சதி லீலாவதி... இப் படிப் பல) பலராலும் விதந்துரைக்கப் படும் மூன்றாம்பிறை ஒரு மிகை நாடக பாணித் திரைப்படமாகும். அவருடைய அழகியலுக்கு முற்றி லும் மாறான 'வீடு', 'சந்தியா ராகம்' என்பவற்றுக்காக அவர் பாராட்டப் படுவதுண்டு. சுஜாதாவின் 'இலக்கிய முகம்' போன்றே கொள்ளப்பட வேண்டியவை இந்தப் படங்கள். மெதுவான நகர்வு, நீண்ட இடை வெளிகள் கொண்ட உரையாடல்கள், அனுமன் வாலாய் நீளும்காட்சிகள் (வீடு படத்தின் நீண்ட அந்த மழைக் காட்சியை எடிட் பண்ணியிருக்கலா மா,இல்லையா?) இவற்றைக் கண்ட வுடன் நம் விமர்சகர்கள் ஏனோ புளகாங்கிதம் அடைந்து விடுகிறார் கள்.

சிறந்த எழுத்தாளரும், தேர்ந்த வாசகருமான அவர் தமிழ் மண் ணின் வாழ்க்கையுடன் தொடர்பற்ற செயற்கையான திரைக் கதையமைப் புகளை தேர்ந்தெடுத்தது அவருடை யதும் நம்முடையதுமான துரதிர்ஷ் டம் என்றே சொல்ல வேண்டும்.

ஹொலிவூட் படங்களின் பிரமாண் டங்களைப் பார்த்து, வளர்ந்த நகர்ப் புறத்து இளைஞர் மணிரத்தினம். இந்தியாவின் ஸ்பீல் பேர்க்காக தானும் மாற நினைத்ததில் ஆச்சரிய மில்லை. இயக்குனரின் தனி முத்திரை எதுவும் புலப்படாத பகல்நிலவு, இத யக் கோயில் போன்ற படங்களை ஆரம்பத்தில் தந்த மணிரத்தினம் தமிழ்நாட்டில் பரவலான கவனம் பெற்றது மௌனராகம், நாயகன் திரைப்படங்கள் மூலம். ரோஜா திரைப்படந்தான் அவர் மீது அகில இந்தியாவின் கவனத்தையே திருப் பியது. அவர் அந்தப் படத்தில் கையா ண்ட விடயம் அத்தகையது. காஷ்மீர் தீவிரவாதிகளால் கடத்தப்படும் தமி ழரான ஓர் என்ஜினியர்,-அவர்களை ஒடுக்க நினைக்கும் முனையும் இந் திய இராணுவம்- கடத்தப்பட்டதன் கணவனை மீட்க போராட்டம் நடத் தும் அவனுடைய இளம் மனைவி. இந்த மும்முனைப் போராட்டம் படத்தை ஜனரஞ்சகத்துக்கு உரிய தாக்கிற்று.

ரோஜாவின் வெற்றிக்குப் பின்னர் மணிரத்தினம் தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு பாதையை உருவா க்க விரும்பினார். நிஜமும், புனைவும் கலந்த திரைக் கதைப் பாணி அது. இந்து முஸ்லிம் கலவரத்தை மைய மாகக் கொண்டு வெளிவந்த 'பம் பாய்', எம்.ஜி.ஆர்.-கலைஞர் வளர்ச் சி, உரசல் என்பவற்றை வெளிப்படுத் திய 'இருவர்', அஸ்ஸாமிய தீவிர வாதப் போராட்டத்தை காதலெனும் அமிலத்தில் கரைத்த 'உயிரே', 'ஈழப் போராட்டம்' என்ற அவகச்சுவையை 'தத்தெடுத்தல்' என்ற சிறு சிமிழுக் குள் அடைக்க முயன்ற 'கன்னத்தில் முத்தமிட்டால்' எல்லாமே இந்த ரகங் களுக்குள் அடங்குபவை. இந்தப் படங்கள் எல்லாமே வணிகரீதியில் வெற்றி பெறாத நிலையில் இதிகாச வடிவங்களுக்கு நவீன உருவம் கொடுக்கும் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தார். மகாபாரதத்தின் நவீன உருவாக்கமாக தளபதியும், ராமாய ணத்தின் நவீன திரை வடிவமாக ராவணனும் வந்தன. விவிலியத்தின் தேவன்-சாத்தானை 'கடலி'ல் கொண்டு வர அவர் முயன்றார்.


மணிரத்தினம்


சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவருடைய பிந்திய முயற்சிகள் எல்லாமே தோல்வியுற்றன. முக்கிய காரணம் அவருடைய படங்களின் கிளிஷேக்கள்.

ஷங்கரின் உலகம் தனியாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று. அதிக முதலீட்டுடன் அதி உச்ச லாபம் தேடும் வணிக சினிமாவின் பிரதிநிதி அவர். ஒரு காலத்தில் பிரமாண்டத்துக்கும், விளம்பரத்துக்கும்,பெரு முதலீட்டுக்கும் பெயர் பெற்றிருந்த எஸ்.எஸ். வாசனின் நவீன காலத்துப் பிரதிநிதி என்று அவரைச் சொல்லலாம். சமகாலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றிருக்கும் நட்சத்திரப் பட்டாளத்தையும், இசையமைப்பாளர்களையும், தேர்ச்சி பெற்ற தலைசிறந்த தொழில் நுட்பக் கலைஞர்களையும் அவர் தன் படங்களில் பயன்படுத்தத் தவறுவதில்லை. எனினும் அதில் கூட திருப்தி கொள்ளாமல் மலைக்கு வர்ணம் பூசியும், உலகத்தின் ஏழு அதிசயங்களைக் காட்டியும், பஞ்ச பூதங்களின் பின்னணியில் பாடலை ஒலிக்க விட்டும் 'கிராபிக்ஸ்கள்' மூலமும் அவர் பண்ணுகின்ற மாயாஜாலங்கள் கணக்கிலடங்கா. அதிகப் படையல் உணவுக்காகாது; திகட்டும் என்ற உணர்வு கொண்ட தமிழ் ரசிகனுக்கு அவர் சலிப்பையே உண்டாக்குகிறார். இந்தியனின் பின்னர் வந்த பல படங்களை அவருடைய சறுக்கல்களாகவே காண முடியும்.

திரைப்படத்துறை சார்ந்த அறிவு கொண்ட கலைஞர்கள் நிறையப் பேர் இப்போது வந்து சேர்ந்திருப்பதும், தமிழ் சினிமா என்பது இளைஞர்களின் கைகளுக்கு போய் சேர்ந்திருப்பதும் முக்கிய நிகழ்வு. இவர்களில் சிலர் இலக்கிய வாசிப்பையும் கொண்டவர்கள் என்பது குறிப்பிட்டுச்சொல்ல வேண்டிய இன்னொரு விடயம்.

அண்மையில் நான் பார்த்த பல படங்களின் இயக்குனர்களுக்கும், அதில் பங்கேற்ற நடிகர்களுக்கும் இடையில் உள்ள பொதுவான ஒற்றுமை, இரண்டு தரப்புமே முகச் சவரம் செய்து கொள்வதில்லை. கதாநாயகிகள் எல்லோருமே வெண்ணெய் திரண்ட அழகிகளாக இருக்கிறார்கள். ஒருவனின் குரல்வளையை அறுக்கும் போதும், பின் மண்டையில் கடப்பாரையால் அடிக்கும் போதும் எழும் ஓசை துல்லியமாகக் கேட்க வேண்டும் என்பதில் கடும் பிரயத்தனம் எடுத்துக் கொள்ளுகின்றனர். பீறிட்டுப் பாயும் ரத்தம் வெண்திரையை அப்படியே சிவப்பாக்கும் அளவுக்கு கச்சிதமான ஒளிப்பதிவு. ஆட் கடத்தல், கொலை,கொள்ளை என வெகு ஆரவாரமாக தமிழ் சினிமா இருக்கிறது. மல்யுத்தம் பார்த்து கரகோஷம் செய்யும் மன நிலைக்கு நம் ரசிகர்களை ஒருவழியாகக் கொண்டு வந்து சேர்த்து விட்டனர். சந்தானம் பெண்களைப் பார்த்தும், மனிதர்களின் அங்கவீனங்கள் பற்றியும் ஏதாவது வக்கணை பேச வாயைத் திறக்கும் முன்னரே சிரிப்பொலியால் திரையரங்கு கலகலக்கின்றது.

தார்மீகக்கோபமும், தர்மாவேசமும் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களை எல்லாம் கிண்டலுடனும் ,கேலியுடனும் கடந்து செல்லும் ஒரு மனநிலைக்கு நாம் வந்து விட்டதாகவே தோன்றுகின்றது. பரிவு காட்டுவதற்குப் பதிலாக கெக்கலிக்கும் ஒரு வக்கரிப்பு மனநிலை இது. நம் அடிமனது வன்முறையையும், குரூரத்தையும், துரோகத்தையும் நியாயப்படுத்தும் ஒரு நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறதா? என்பது முக்கிய கேள்வி. ■

*(வளரும்...)*

---

*(05ஆம் பக்கத்தொடர்ச்சி....)*

சர்வதேச சமூகமே ஏற்றுக்கொண்டிருக்கின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதன் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பயனுறுதியுடைய அரசியல் இணக்கத் தீர்வொன்றை ஐக்கிய இலங்கைக்குள் காண்பதே நோக்கம் என்று நாட்டுக்கு மாத்திரமல்ல முழு உலகிற்குமே பிரகடனப்படுத்தியிருக்கிறது. இந்த நிலைப்பாட்டை இரா.சம்பந்தன் போன்ற மூத்த தலைவர்கள் அடிக்கடி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கூறிவந்திருக்கிறார்கள். அவர்களது நம்பிக்கையை வென்றெடுத்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் அக்கறை காட்டுவதற்குப் பதிலாக ராஜபக்ஷ அரசாங்கம் கூட்டமைப்பு பிரிவினையைக் கைவிடவில்லை என்றும் பிரிவினைவாத ஆபத்து ஒழிந்துவிடவில்லை என்றும் விசமத்தனமான பிரசாரங்களை இடையறாது செய்துகொண்டிருக்கிறது.

உண்மையிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாதத்தை மீண்டும் கிளப்பக்கூடிய செயற்பாடுகளில் இறங்கியிருக்கிறதா இல்லையா என்பதை அரசாங்கம் தெளிவாக அறியும். புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுகின்ற அரசியல் செயற்பாடுகளினால் இலங்கைக்குள் இன்றைய நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்குமா இல்லையா என்பதையும் அரசாங்கம் நன்கு அறியும். ஆனால், ஆட்சியாளர்களுக்குத் தேவையானதெல்லாம் நாடு எதிர்நோக்குகின்ற உண்மையான நெருக்கடிகளில் இருந்து சிங்கள மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கான ஒரு பூச்சாண்டியேயாகும். சிங்கள மக்கள் மத்தியில் சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிரான அரசியல் உணர்வுகளைத் தணியவிடாமல் வைத்திருப்பதன் மூலம் மாத்திரமே தங்களால் எந்தத் தேர்தலிலும் வெற்றியீட்ட முடியும் என்பதே ஆட்சியாளர்களின் உறுதியான எண்ணமாகும். இதன் பிரகாரமே அவர்களின் தற்போதைய பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியானதும் இந்தப் பிரசாரங்கள் மேலும் உக்கிரமடையும். எதிரணியினர் கூட இதற்குப் பலியாகி தங்களுக்கு இருக்கக்கூடிய ஆதரவுத்தளத்தைக் காப்பாற்ற பதிலுக்கு இனவாத அணுகுமுறைகளைக் கையாள நிர்ப்பந்திக்கப்படக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனம்



# மகரமஞ்சு அல்லது அப்சரஸ்




மலையாளத்தில் மகரமஞ்சு என்ற பெயரில் வெளிவந்த திரைப்படத்தை அப்சரஸ் என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றம் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். இது தெய்வீக ஓவிய ரெனக் கொண்டாடப்படும் ராஜா ரவிவர்மாவின் வாழ்வியலை மையப்படுத்தி யதாக அமைகிறது. சீதை, தமயந்தி, யசோதை, லக்ஷ்மி, சரஸ்வதி, துர்க்கை, ராதை, சகுந்தலையென இதிகாச, புராண பெண்பாத்திரங்களுக்கும் தெய்வ அணங்குகளுக்கும் தனது தூரிகையால் உயிரோட்டந்தந்து மக்கள் மயப்படுத்தியவர் ஓவியர் ராஜாரவிவர்மா. இன்று பரவலாக வழிபாட்டறைகளில் வைத்து நாம் வழிபடும் பெண்தெய்வ உருவங்களெல்லாம் ராஜா ரவிவர்மாவின் கற்பிதத் தொடர்ச்சியேயாகும். இத்தகைய ஓவிய னின் வாழ்க்கையை இயன்றவரை கலைத்துவத்தோடு காட்சிப் படுத்த முனைந்திருக்கிறார் இயக்குநர் லெனின் ராஜேந்திரன்.

இத்திரைப்படம் இருவேறு தளங்களில் மாறிமாறி சலனங்கொள் கிறது. முதல்தளம் ஓவியர் ராஜாரவிவர்மா தனது ஓவியங்களை எவ்விதம் மாதிரிப்பெண்களைக் (Model Girl) கொண்டு வரைகி றார் என்பதாக நகர்ந்து செல்கையில் அவர் சந்திக்கும் ஓர் அபூர்வ மாதிரி ஓவியப் பெண்ணான அஞ்சலிபாயிற்கும் அவருக்குமிடை யில் ஏற்படும் நட்பு மற்றும் காமம் பற்றியும் இரண்டாவது தளம் ரவிவர்மா அஞ்சலிபாயிற்கு புராணக் கதாபாத்திரங்களான புருர வஸ், ஊர்வசி ஆகியோருக்கிடையிலான காதல் மற்றும் காமம் பற்றி விவரிப்பதுமாக மது அம்பட்டின் கமரா வர்ண ஜாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்துகிறது.

ரவிவர்மாவின் பூந்தோட்டத்திற்கு களவாக மல்லிகைப் பூப்பறிக்க வரும் பெண்ணைக்கூட்டிவந்து அவளை மாதிரியாகக் கொண்டு அவர் வரையும் ஓவியம் போட்டியொன்றில் முதற்பரிசு பெறுகிறது. அந்தப் பெண் தாசிக் குலத்தைச் சேர்ந்தவள். பக்குவப்படாத மனத்தினளான அப்பெண் தற்கொலை செய்து கொள்கிறாள். அவரது இன்னொரு மாதிரி ஓவியப் பெண்ணின் கணவன் இறந்து போகக் கைக்குழந்தையுடன் நிராதரவாகத் தவிக்கும் அவரைக் கூட்டிவந்து மாதிரியாக நிற்கவைத்து ஓவியம் வரைவதுடன் ஆசைக்கிழத்தியாகவும் வைத்துக்கொள்கிறார். எதிர்பாராத விதமாக நாட்டிய நிகழ்வொன்றில் நடனமிடும் மங்கையான அஞ்சலிபாயைச் சந்திக்கும் ராஜா ரவிவர்மா அவளையும் அழைத்து வந்து மாதிரி ஓவியப் பெண்ணாக்கி ஓவியங்களை வரைந்து கொண்டே அவளுக்கு புரூரவஸ், ஊர்வசி பற்றிய புராணக்கதையைச் சொல்கிறார். புரூரவஸ், ஊர்வசி இருவரினதும் ஒப்புமைகளாக ரவிவர்மாவும், அஞ்சலிபாயும் இயங்குகின்றனர். காலப்போக்கில் ரவிவர்மாவுக்கும், அஞ்சலிபாய்க்கும், ஓவியன், ஓவியமாதிரிப்பெண் என்ற நிலையைக் கடந்த நெருக்கமேற்படுகிறது. இந்த நெருக்கம் ரவிவர்மாவின் ஓவியங்களை விற்று வருமானம்பெறும் நண்பனை சஞ்சலத்திற்குள்ளாக்க





அவன் ரவிவர்மாவுக்கு அஞ்சலிபாயுடனான தொடர்பினை விட்டுவிடுமாறு எச்சரிக்க ரவிவர்மா அவனை அடித்துவிடுகிறார். இதனால் ரவிவர்மாவைப் பழிதீர்த்துக் கொள்வதற்காக இந்துமதவாத அமைப்பொன்றில் போய் ரவிவர்மா விதவைப் பெண்களையும் தாசிப் பெண்களையும் மாதிரிப் பெண்களாகக் கொண்டே சீதை, சகுந்தலை, லக்ஷ்மி, சரஸ்வதி, துர்க்கை போன்ற தெய்வீக அணங்குகளை வரைந்ததாக முறையிட்டு அவ்வமைப்பின் பலத்தோடு தாசிகுலத்தவரான அஞ்சலிபாயையும் அவளது தாயையும் அழைத்து அம்மதவாத அமைப்பினைக் கொண்டே அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து ஊரை விட்டே வெளியேற்றுகிறான். இறுதியில் தாசிப்பெண்களையும், விதவைப் பெண்களையும் வைத்து புராண, இதிகாசப் பெண்களை ஓவியங்களாக வரைந்ததின் மூலம் இந்து மதத்தை இழிவுபடுத்தியதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ரவிவர்மாவை மன்னிப்புக்கோரும்படி ஆட்சியாளர்கள் நிர்ப்பந்திக்கின்றனர். அதற்காக எந்தவொரு சமரசத்தையும் செய்து கொள்ளாத ரவிவர்மா வழக்குத்தீர்ப்பை எதிர்நோக்கிக் காத்திருப்பதுடன் படம் முடிவடைகிறது.

இத்திரைப்படத்தில் ராஜா ரவிவர்மாவாகவும் புரூரவஸ் ஆகவும் நடித்திருப்பவர் ரெரரிஸ்ட், மல்லி, இனம் போன்ற சர்ச்சைக்குரிய திரைப்படங்களின் இயக்குநரும், மணிரத்தினத்தின் ஆஸ்தான ஒளிப்பதிவாளருமான சந்தோஷ்சிவன். அஞ்சலி பாய் மற்றும் ஊர்வசியாக நடித்திருப்பவர் தமிழில் கோ, அன்னக்கொடியும் கொடிவீரனும் ஆகிய படங்களின் கதாநாயகியாக நடித்த கார்த்திகா நாயர். இவர் நடிகை ராதாவின் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் பூர்ணா, நித்யாமேனன் ஆகியோரும் நடித்துள்ளனர். சந்தோஷ்சிவனின் உடல்மொழி இயல்பாக ஓர் ஓவியனின் உடல்மொழியோடு பொருந்திப்போகிறது. கார்த்திகா நாயரின் பக்குவப்பட்ட நடிப்பு இங்கே வெளிப்படுகிறது. ரவிவர்மாவின் பிரபலமான ஓவியங்களெல்லாம் உருவாக்கப்படும் கற்பிதக் காட்சிகள் வெகுநேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. அடிக்கடிவரும் உடலுறவுக் காட்சிகள் கூட விரசமில்லாமல் கலைத்துவம் மிளிரப் படமாக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற மொழிமாற்றுத்திரைப்பட முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(39ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

மன்னர்களாக முஸ்லிம்களே இருக்கிறார்கள் என்றெல்லாம் இந்த விடயம் தெரியாத தீவிரவாத பிக்குமார் முஸ் லிம்களுக்கு எதிராக முன் வைக்கின்ற அவதூறுகள் குறித்து அக்கறையுடன் கவனத்திலெடுக்க வேண்டியிருக்கிறது. இந்த அவதூறுகள் பெரியதொரு சூதாட்டம்.

போதைப் பொருள் வியாபாரத்தில் முஸ்லிம்கள் ஈடுபடுகிறார்கள் என்பதை நான் நிராகரிக்கவில்லை. ஆனால், அவர்களோ கடத்தலுக்கு உதவும் சொற்ப எண்ணிக்கையான ஏவலர்களாகவே இருக்கிறார்கள். மாபியா கும்பல்களிடமும் அவர்களின் பாதுகாவலர்களிடமும் இப்போதைப் பொருட்களைக்கொண்டு சென்று கொடுப்பதற்காக அந்த ஏவலர்களுக்கு கைநிறையப்பணம் கொடுக்கப்படுகிறது. இத்தகைய ஏவலர்கள் கைதுசெய்யப்பட்டவுடனே, இனவெறி ஊடகங்கள் '100 கிராம் ஹெரோயினுடன் ஒரு முஸ்லிம் பிடிபட்டார்' என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்தியை வெளியிடுகின்றன. 'போதைப் பொருள் கடத்தலுக்காக சிங்கள பௌத்தர் ஒருவர் கைதானார்' என்று எப்போதாவது கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்தி வந்ததைப் பார்த்திருக்கிறீர்களா?

போதைப்பொருள் மாபியா கும்பல்களின் தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நிச்சயமாக முஸ்லிம்கள் அல்ல. சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்துவதற்கு யார் பொறுப்பாக இருக்கிறார்கள்? பொலிஸ்மா அதிபரும் சுங்கத் திணைக்களத் தலைவரும் போதைப்பொருள் தடுப்பு பிரிவு தலைவரும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களா? இல்லை, அவர்கள் சகலருமே சிங்கள பௌத்தர்கள்.

முஸ்லிம்கள் அளவுக்கு அதிகமாக பள்ளிவாசல்களை நிருமாணிக்கிறார்கள் என்று இந்த பௌத்த தீவிரவாதிகள் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 2 இலட்சத்துக்கும் அதிகமான தவறணைகளும் மதுபானசாலைகளும் இருக்கின்றன. சட்ட விரோதமாக இயங்கும் மதுவிற்பனை நிலையங்களையும் கணக்கில் சேர்த்துக் கொண்டால், இந்த எண்ணிக்கை மூன்று மடங்காகப் பெருகும் என்பதிற் சந்தேகமில்லை. இலங்கை பூராகவும் 2000 பள்ளிவாசல்கள் அமைந்திருப்பது மக்களின் நலன்களுக்கு ஒரு அச்சுறுத்தலைத் தோற்றுவிக் குமா? பள்ளி வாசல்கள் மதுபானச்சாலைகளோ, விபசார நிலையங்களோ அல்லது சூதாட்ட நிலையங்களோ அல்ல. அவை முஸ்லிம் பிள்ளைகள் தங்கள் சமயத்தைக்கற்றுக்கொள்கின்ற இடங்களாகும். பள்ளிவாசல்கள் பௌத்தர்களின் ஞாயிறு பாடசாலைகள் (தஹம் பாசல) போன்றவையாகும். முஸ்லிம்கள் தங்களால் இயன்றவரை கூட்டமாகக்கூடி தினமும் ஐந்து வேளை தொழுகை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தொழுகையை வீடுகளில் செய்ய முடியாது. அதனால் தான் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் பள்ளிவாசலை அல்லது தொழுகை நிலையத்தைக் கட்ட வேண்டிய தேவை எழுகிறது.





எமது பல அயல் நாடுகளில் மக்கள் இஸ்லாத்துக்கு மதம் மாறியிருந்தால் அது ஒருபோதுமே அச்சுறுத்தலின் விளைவாகச் செய்யப்பட்டதல்ல. ஒன்றில் தலைமைத்துவம் மதம் மாறிய பிறகு பிரஜைகளும் மதம் மாறியிருக்கிறார்கள் அல்லது அந்த யுகத்தில் முஸ்லிம்களின் முன்னுதாரணமான வாழ்க்கைமுறை காரணமாக இஸ்லாத்தின் மீது ஏற்பட்ட நம்பிக்கையின் விளைவாக மதம் மாறிக் கொண்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். எமது அயல் நாடுகளில் எந்த ஒன்றிலுமே முஸ்லிம்களினால் வலோத்காரமாக மதமாற்றங்கள் செய்யப்பட்டன என்பதற்கு வரவாற்றுச் சான்றுபதிவு எதுவுமேயில்லை.

மாயைத்தனமான பிரசாரங்களையெல்லாம் ஜனாதிபதி நிராகரித்து, இந்நாட்டு மக்களுக்கு உரித்தான அமைதி சமாதானத்தை சீர்குலைக்கின்ற தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்ததையடுத்து, ஜனாதிபதி உண்மையான ஒரு நல்லிணக்கச் செயன்முறையின் மூலமாக தமிழ் மக்களை அரவணைப்பதற்கு சந்தர்ப்பம் கிட்டியது. ஆனால், அதைப் பயன்படுத்த அவர் தவறிவிட்டார். ஏனைய சிறுபான்மையினத்தவர்களையும் தன்னிடமிருந்து தனிமைப்படுத்துவதன் மூலமாக நிலைவரம் மேலும் மோசமாகாதிருப்பதை ஜனாதிபதி உறுதிசெய்துகொள்வதற்கான தருணம் இதுவாகும். சிங்கள பௌத்த தீவிர வாதிகளைக் கட்டுப்படுத்தி, சகல இலங்கையர்களுக்குமான உண்மையில் ஐக்கியப்பட்டதொரு இலங்கையைக் கட்டியெழுப்புவதன் மூலமாக சிறுபான்மையினத்தவர்களின் வாக்குகளை வென்றெடுப்பதற்கான வாய்ப்பு இன்னமும் கூட ஜனாதிபதிக்கு இருக்கிறது. இதுவிடயத்தில் அவர் வெளிக்காட்டக்கூடிய பற்றுறுதியும் செயற்பாடுகளுமே நிச்சயமாக சிறுபான்மையினத்தவர்களின் வாக்குகள் அவரை நோக்கி வரக்கூடிய சூழ்நிலையைத்தோற்றுவித்து மூன்றாவது பதவிக்காலத்தைப் பெற்றுக்கொடுக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆதிசேனன்

## பனுவல் பார்வை



# மார்க்ஸின் ஆவி

### உலகை மாற்றுவது குறித்த நடுநிசி உரையாடல்கள்




## சார்லஸ் டார்பர்

தமிழில்: ஆர். சிவகுமார்

சமூகமாற்றம் குறித்து சிந்திப்பவர்கள் நிச்சயம் வாசிக்க வேண்டிய நூல்களுள் 'மார்க்சின் ஆவி : உலகை மாற்றுவது குறித்த நடுநிசி உரையாடல்கள்' என்ற தலைப்பிலான நூல் முக்கியமானது. இந்நூலின் ஆசிரியர் சால்ஸ் டார்பர் (1944). இவர் அமெரிக்காவின் குறிப்பிடத்தகுந்த அரசியல் எழுத்தாளர்களில் ஒருவர். தற்போது பொஸ்டன் கல்லூரியில் சமூகவியல் பேராசிரியராகப் பணிபுரிகின்றார். மார்க்சின் ஆவி என்னும் இந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பை தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆ.சிவகுமார் சிறப்பாகச் செய்துள்ளார். இந்நூலை அழகாக அடையாளம் பதிப்பகம் 2013 இறுதியில் வெளியிட்டுள்ளது.

சமூக விஞ்ஞானத்தை இலக்கியப் புனைவாக்கும் புதுவடிவத்தை சார்ல்ஸ் டார்பர் இந்நூலில் அறிமுகப்படுத்துகிறார். கற்பனை சார்ந்த வடிவத்தில் மனித குலத்தைப் பாதிக்கும் நிஜத்தை இந்நூல் பேசுகிறது. வால்டர் சேவேஜ் லேண்டர் (1775 - 1864) என்ற பிரிட்டிஷ் எழுத்தாளர் 'கற்பனை உரையாடல்கள்' என்ற உரையாடல் தொகுதியை ஐந்து பகுதிகளாக 1824-29 காலகட்டத்தில் வெளியிட்டார். இந்நூலில் குறிப்பாக கிரேக்க உரோமானிய மன்னர்கள், அரசிகள், தத்துவவாதிகள், எழுத்தாளர்கள் என்று வரலாற்று ஆளுமைகளும்,புராணப் பாத்திரங்களும், சமகால ஆளுமைகள் சிலரும் தத்துவம், இலக்கியம், அரசியல் தொடர்பானதைக் குறித்து தங்களுடைய பல்வேறு கருத்துகளை உரையாடல் மூலம் வெளிப்படுத்தும் படைப்பாக இது ஆக்கம் பெற்றுள்ளது. இவ்வாறான எழுத்து முயற்சி, மொழியாடல் காத்திரமான படைப்பாளர்களால் பின்பற்றப்படும் நடைமுறையாகவும் விளங்கிவந்துள்ளது. இந்நூல் சமூக விஞ்ஞானத்தை புனைவாக்கும் வகைமைக்கு சிறப்பான முன்மாதிரியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது.

'மார்க்சின் ஆவி' எனும் நூலின் ஆசிரியரான சார்ல்ஸ் டார்பர் 1960 களில் தம்முடைய பள்ளி நாட்களில் மார்க்சியத்தின் தாக்கத்திற்கு உள்ளானவர். இவர் 2008 இற்குப் பிறகு உலகளவில் பொருளாதார தேக்க நிலை உச்சநெருக்கடியில் இருந்த காலத்தில், ஒரு ஞாயிறு பிற்பகல் லண்டன் ஹைகேட் கல்லறைப் பூங்காவிற்குச் செல்கிறார். அங்கு உறங்கும் மார்க்சுக்கு தம்முடைய மரியாதையைச் செலுத்துகிறார். அந்தத் தருணம் எதிர்பாராதவிதமாக மார்க்சின் ஆவியுடன் நீண்ட உரையாடல் ஒன்றில் டார்பர் ஈடுபடுகிறார். மாலையில் தொடங்கும் உரையாடல் அடுத்த நாள் காலைப் பொழுது புலர்ந்த சிறிது நேரத்தில் முடிவதாக டார்பர் இந்நூலை அமைத்திருக்கிறார்.

கம்யூனிஸ்ட் அறிக்கை (1848) இப்படித் தொடங்குகிறது: 'ஒரு பூதம் ஐரோப்பாவை பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது- அதுதான் கம்யூனிசம் என்னும் பூதம்'. இந்தப் பூதத்தை விரட்ட அன்றைய சார் மன்னன், பாப்பரசர் ஜேர்மனிய இரகசியப் பொலிஸார் என்று தொடங்கி கடந்த 165 ஆண்டுகளாக எத்தனையோ கோட்பாடுகளும் அமைப்புகளும் முயன்றும் அது இன்றும் நம்மிடையே உலவிக்கொண்டுதான் இருக்கிறது. Spectres of Marx: The state of the Debt, the work of morning and the New International (1993) என்ற தம் நூலில் 1989இல் பெர்லின் சுவரும் கம்யூனிசமும் வீழ்ந்த பிறகு முன்பு எப்போதையும் விடவும் கூடுதலாக மார்க்சின் ஆவிக்குப் பொருத்தப்பாடு தற்போது உள்ளதென்று பிரெஞ்சு நவீன சிந்தனையாளரான லாக் டெரிதா சொல்கிறார். கம்யூனிசத்தின் வீழ்ச்சியை வரலாற்றின் முடிவாக அறிவிக்க பிரான்ஸின் ஃபுகுயாமா 1992 இல் வெளியிட்ட The End of History and the Last Man என்ற நூலுக்கு எதிர்வினையாக டெரிதாவின் சொற்பொழிவுத் தொடர் ஒன்று இந்த நூல்வடிவில் வெளியானது. மார்க்சிடம் இருந்து கம்யூனிசத்தை அல்ல, கடமைப் பொறுப்பு என்னும் தத்துவத்தையும் புரட்சிகர விமர்சன நெறியையும் சுவீகரிக்க தாம் முயல்வதாக டெரிதா சொல்கிறார். சித்தாந்தத்தின் முடிவைக் கொண்டாடவும் மிதச் சீர்திருத்தவாத சனநாயகத்தை மனித வரலாற்றின் இலட்சியமாகக் கொள்ளவும் சிலர் முனையும் இதே காலத்தில் தான் வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவிற்கு சமத்துவமின்மையும், விலக்கலும், பஞ்சமும், பொருளாதார ஒடுக்குமுறையும், அடிமைப்படுத்தலும், இன அழிப்பும், பட்டினிச் சாவுகளும் நிகழ்கின்றன என்று டெரிதா கூறுகிறார்.

'மார்க்சின் ஆவி' எனும் நூல் மார்க்சுடைய எழுத்துகளில் இருந்து எடுத்தாளப்படும் மேற்கோள்களை ஆதாரமாக வைத்தே இயங்குகிறது. முதலாளித்துவம் பற்றிய மார்க்சுடைய அன்றைய கருத்துகள் இன்றைய நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதாக இருப்பதைப் புலப்படுத்துவதே இந்நூலின் பலம் என துணிந்து கூறலாம். இந்த நெருக்கடிக்கான காரணங்கள் எல்லாம் முதலாளித்துவத்தின் மரபணுவிலேயே இருக்கின்றன. முதலாளித்துவம் தன் அழிவைத் தானே தேடிக்கொள்கிறதென்பதை வலியுறுத்திச் சொல்கிறது இந்நூல்.

முதலாளித்துவத்திற்கு மாற்று கிடையாதென்று பலரும் நம்பும் சூழலில் இந்நூல் மாற்றுகளை முன்வைக்கிறது. மாற்றுகள் குறித்து சிந்திப்பதற்கும் தேடுவதற்கும் பொருத்தமான களங்களை அடையாளப்படுத்துகிறது. குறிப்பாக ஐரோப்பிய சனநாயகம், இலத்தீன்அமெரிக்க மாதிரிகள் (வெனிசூலா, கோஸ்டாரிகா, மெக்ஸிக்கோவின் சியாபஸ்) ஸ்பானிய- அமெரிக்க கூட்டுறவு அமைப்புகள் போன்றவற்றின் குறிப்பிடத்தக்க வெற்றிகளை இந்நூல் விரிவாகவும் நுட்பமாகவும் விளக்குகின்றது. சமகாலத்தின் போர்களும், பருவநிலைமாற்றமும் முதலாளித்துவத்தின் பேராசையால் தான் விளைகின்றன என்பதையும் நிறுவுகின்றது.

இதைவிட அராஜகத்தின்நேர்முக அம்சங்கள், சிறியதே அலகு என்ற கோட்பாட்டின் உள்ளார்ந்த சக்தி, உள்ளூர் சார்ந்த எளிய வாழ்க்கை - உற்பத்தி முறை, சுற்றுச்சூழலைப் பேணுதல், போரற்ற உலகம், நுகர்வுக் கலாசாரத்திற்கான எதிர்ப்பு முதலானவற்றையும் இந்நூல் விளக்கமாகப் பேசுகின்றது. இங்கு பல்வேறு ஆளுமைகள் படைப்பாளர்களின் சிந்தனைகள் நுட்பமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவை பல்வேறு ஆழமான உரையாடல்களுக்கு களம் அமைத்துச் செல்கின்றன.

2011இல் மத்திய கிழக்கில் குறிப்பாக எகிப்தில் நடந்த புரட்சியில் இளைஞர்களின், மாணவர்களின் பங்கைப் பெரிதும் மார்க்ஸ் போற்றுகிறார். மேலும் அவர் எதிர்கால மாற்றத்தில் முகநூல் தலைமுறையினரே முன்னணியில் இருப்பார்கள் என்றும் மார்க்ஸ் கருதுகிறார். முதலாளித்துவத்தை வீழ்த்த மாற்றத்தை நாடும் முற்போக்கான இயக்கங்கள் எதுவாக இருந்தாலும் இவற்றில் இளைஞர்கள் இணைய வேண்டும் என்கிறார். ஒரு கட்டத்தில் மார்க்ஸ், 'சித்தார்ந்த தூய்மையை நான் வெறுக்கிறேன்' என்கிறார். பொருளாதார விதிகள் மீது தாம் அதிகம் கவனம் செலுத்திவிட்டதாக ஒப்புக்கொள்கிறார். மேலும், பெண்கள், சிறுபான்மையினர், ஓரினச்சேர்க்கையாளர்கள் தொடர்பான அடையாள அரசியலை முன்னெடுக்கும் இயக்கங்களையும் ஆதரிக்கிறார். அடையாள அரசியல் எழுச்சிக்கான தேவைப்பாடுகளையும் அவசியப்பாடுகளையும் நாம் புரிந்துகொள்வதற்கான நுண்ணறிவுப் புலத்தை விரிவாக்கிக் காட்டுகிறார்.

ரஷ்யாவில் சோசலிசம் வீழ்ச்சியடைந்த பிறகு குறிப்பாக அமெரிக்காவிற்கு ரஷ்ய இராணுவ அபாயம் நீங்கிய பிறகு அமெரிக்காவில் மார்க்சிய வாசிப்புகள் பல்வேறு நிலைகளில் எழுச்சிபெற்று வருகின்றன. அமெரிக்காவில் 20சதவீத மக்கள் வெளிப்படையாக தங்களை சோசலிசத்தோடு இணைத்துக்கொள்கிறார்கள் என்று இந்நூல் எடுத்துரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிறது. மார்க்சின் ஆவி இந்நூலில் தத்துவம் வரலாறு போன்றவற்றைப் பேசவில்லை. நூலில் வெளிப்படையாகத் தெரியாத நிலையில் மூன்று பகுதிகள் உள்ளன. ஒன்று, முதலாளித்துவத்தில் இருந்து சோசலிசத்திற்கு மாறிச்செல்லும் காலப்பகுதியை 'பெரும் நிலைமாற்றம்' என வகையறுப்பது. அதாவது சமூகப் புரட்சி என்பதை ஓர் ஒற்றைச் சம்பவமாகக் கருதாமல் பலவகை சமூக சக்திகள், பலவகை இயக்கங்கள், பலவகைப் பொருளாதார மாதிரிகள், அரசியல் வடிவங்கள் சம்பந்தப்படும் நீண்ட பெரும் செயலாகக் கொள்வது.

இரண்டு, உலகமயமாக்கம் மற்றும் சமீபத்திய பொருளாதாரத் தேக்க நிலை குறித்துப்பேசுகிறது. ஹைகேட் இடுகாட்டில் சுற்றிக் கொண்டிருக்கும் வேறுசில பொருளாதார அறிஞர்களின் (கெயின்ஸ், ஹைமன் மின்ஸ்கி, ஆலன்கிறீன்பன்ஸ், மில்டன் ப்ரீட்மன் போன்ற) ஆவிகளும் இந்த உரையாடல்களில் கலந்துகொள்கின்றன. பின்னை முதலாளியத்தின் சில தனித்த குணாதிசயங்களை இவர்களின் உரையாடல்கள் வெளிக்கொண்டு வருகின்றன.

மூன்று, இருபத்தோராம் நூற்றாண்டுக்கான 'பெரும் நிலைமாற்றம்' எப்படி அமையலாம் என்பதை மேலும் விளக்குகின்றது. முதலாளித்துவ அமைப்பை எதிர்க்கும் பலவகை இயக்கங்கள் - சுற்றுச்சூழலியலாளர்கள், பெண்ணியவாதிகள், அடையாள இயக்கங்கள், பசுமை இயக்கத்தார் - உருவாகி வருவதையும் அவை ஏதோ ஒரு நிலையில் சோசலிச இயக்கத்தோடு ஒன்றுபடும் என்பதையும் மார்க்சின் ஆவி எனும் நூலாசிரியர் எடுத்துரைக்கிறார். மார்க்சின் ஆவியும் இதனை ஏற்றுக் கொள்வதாகத் தான் தெரிகிறது.

மார்க்சின் கருத்துகள் வெகுசன அளவில் பரவுவதற்கான சில இடைநிலை முன்மாதிரிகளை இந்நூல் முன்வைக்கிறது. சோசலிசம் என்ற மாற்று ஏற்பாட்டை நோக்கி நகரும் பலவகைச் சமூகப் பிரிவினர் என்ற கருத்தை இந்நூல் அழுத்தமாக முன்வைக்கிறது. திருத்தல்வாதம் என்று இந்நூலை நிராகரிப்பவர்கள் கூட இந்த நூலிலும் பேசப்பட்டுள்ள அடர்த்தியான விடயங்களுக்காக இந்நூலை வாசிக்கலாம். எவ்வாறாயினும் மார்க்சியத்திற்கு அழிவில்லையென்பதை மீண்டும் சொல்லவரும் நூல் இது. அதேசமயம் இத்தத்துவத்தை நடைமுறைப்படுத்தியதில் ஏற்பட்ட தவறுகளை ஒப்புக்கொண்டு மாற்றுகளை திறந்த மனதுடன் வரவேற்க வேண்டும் என்பதையும் தெளிவாகக் கூறுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அந்நியமாதலில் இருந்து நீங்கி மனிதன் கண்ணியத்துடனும் படைப்பாற்றலுடனும் வாழும் விடுதலைச் சூழலை சாத்தியப்படுத்த சமூக இயக்கங்களில் முற்போக்காளர்கள் பங்கேற்க வேண்டுமென்பதே இந்நூலின் மையக் கருத்தாக உள்ளது. இந்நூல் முன்வைக்கும் கருத்துகளை/ மாற்றுகளை மார்க்சிய களப்பணியாளர்களும் கோட்பாட்டாளர்களும் விவாதித்து நமது சூழலின் மாற்றத்திற்காக முற்போக்குச் சிந்தனையுள்ள அனைவரையும் வெவ்வேறு இயக்கங்கள் மூலமாக ஒன்றிணைக்கலாம். இதற்கான தூண்டுகோலாக இந்த மொழிபெயர்ப்பு முயற்சி அமைகின்றது.


'நம்மிடம் சொல்வதற்கு இந்தப் பழைய ஆவியிடம் நிறைய இருக்கிறது என்பதை ஹைகேட் கல்லறையில் நடக்கும் ஆர்வத்தைத் தூண்டும் கற்பனைத் திறன் மிக்க இந்த உரையாடல் மூலம் தெரிந்துகொள்கிறோம். மார்க்சின் தோழர்களும் ஏதோ ஒரு சமயத்தில் அவருடைய எதிராளிகளாக இருந்தவர்களும் குறிப்பாக இந்நூலின் ஆசிரியரும் சொல்வதைக் கவனித்துக் கேட்கிறோம். உரையாடலை வழிநடத்தும் நூலாசிரியர் தெளிவான பயனுள்ள தகவல்களைக் கொண்ட உரைநடை மூலம் உலகின் பல கேடுகளை திரைவிலக்கிக் காட்டுகிறார்.

மிகவும் பயனுள்ள உரிய காலத்தில் செய்யப்பட்ட பங்களிப்பு' என்று நோம்சாம்ஸ்கி மதிப்பிடுகிறார். உண்மையில் இருபத்தோராம் நூற்றாண்டுக்கு கார்ல்மார்க்ஸை திரும்பக் கொண்டுவர காலப்பெட்டக உத்தியைப் பயன்படுத்துவதன் மூலம் அரசியல் பொருளாதாரம் குறித்த தெளிவிற்கும் தேடலுக்கும் வழிசமைக்கும் நூலாக மார்க்சின் ஆவி அமைந்துள்ளது. இந்நூல் மார்க்சியத்தில் தொடர்புடைய அனைவரும் கண்டிப்பாக வாசிக்க வேண்டிய நூல் இது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# மனம் வெல்லும் தந்திரம்



தெ.சசீந்திரன்

ஆகாயகங்கையை பூமிக்குக் கொண்டு வந்த பகீரதப் பிரயத்தனம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். 2009 மே மாதத்திலிருந்து மஹிந்த அரசும் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. காப்பெற்வீதிகள் போட்டாயிற்று. தமிழ் இளைஞர், யுவதிகளை பொலிஸ், இராணுவத்தில் சேர்த்தாயிற்று. கைத்தொழில் பேட்டைகளைத் திறந்தாயிற்று. உதவும் கரங்கள் எனும் இலகு கடன்களை வழங்கியாயிற்று. லக்சபானவிலிருந்து நேரடியாக நீர்மின்சாரத்தை 24மணிநேரமும் தடையின்றி வழங்கியாயிற்று. வீட்டு மனைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய நாற்று மேடையமைத்து நாற்றுகளை வளர்த்தெடுத்து நூறு நூறாகப் பயனாளிகளுக்கு வழங்கி சுபநேரத்தில் நட்டாயிற்று. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வரிச்சலுகையுடன் கூடிய மோட்டார் சைக்கிள்களை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியாயிற்று. யாழ்ப்பாணத்திற்கு புகையிரதமும் வந்தாயிற்று. ஆனால் மக்களின் மனதைத்தான் வெல்லமுடியவில்லை. தமிழ் மக்களின் மனதை வெல்வதற்குப் பேரினவாத அரசானது நீண்டதூரம் பயணிக்க வேண்டிய தேவையிருக்கிறது. அந்த நீண்ட தூரப் பயணத்தை மேற்கொள்ள மகிந்த அரசால் முடியுமா? என்றால் ஒருபோதும் முடியாதென்றே சொல்லத் தோன்றுகிறது. ஏனெனில் அங்கேதான் பன்னெடுங்காலமாக நிலவிவரும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் அடங்கியிருக்கின்றன.

முதலாவது காணாமல் போனோர் குறித்த பிரச்சினை, ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்துக் கட்டங்கட்டமாக பல்வேறு இடங்களிலும் காணாமல் போனோரது உறவினர்களின் வாக்குமூலங்களைப் பல்வேறு அமர்வுகளில் வடக்கிலும், கிழக்கிலும் பதிவு செய்து வந்துள்ளபோதிலும் இதுவரை எந்தவொரு சாதகமான முன்னேற்றகரமான பதில்களும் அவ்வுறவினர்களுக்கு வழங்கப்படவில்லை. உண்மையில் காணாமல் போனோரது விவகாரங்களுக்கு மூலகாரணமானவர்களெனக் கருதப் படுவோரைச் சட்டத்தின் முன் நிறுத்தி முறையாக விசாரணை செய்து நியாயமான பதிலை வழங்க வேண்டியது அரசின் முக்கியமான கடப்பாடுகளிலொன்றாக இருக்கின்ற போதிலும் இதுவரை அதை நிறைவேற்றவில்லை.

அடுத்த போரை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்ட நிலையிலும் சந்தேகத்தின் பேரில் கைதாகி எவ்வித விசாரணையுமின்றி சிறைகளில் வாடும் அப்பாவிகளைத் துரிதமாக விசாரணை செய்து விடுவிப்பதற்கு அரசாங்கமானது இதுவரை முன்வரவுமில்லை. இதுபற்றி சிந்திக்கவுமில்லை. மற்றையது பாதுகாப்பு வலயமென்ற பேரில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள பொதுமக்களின் வளமிக்க விவசாய நிலங்களையும் வாழ்விடங்களையும் மீளக்கையளிப்பது பற்றி சிந்திக்காதது மட்டுமன்றித் தொடர்ந்து தனது ஆக்கிரமிப்பு எல்லைகளை விரிவுபடுத்துவதிலேயே கவனம் செலுத்தி வருவதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும்.

இந்த அடிப்படையான சங்கதிகளுக்கெல்லாம் மஹிந்த அரசானது தீர்வு காணாமல் ஒருபோதும் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் மனங்களைத் தலைகீழாக நின்று தமிழில் உரையாற்றினாலும் வெல்ல முடியாது. ஜனாதிபதி அண்மைய யாழ்ப்பாண விஜயத்தின்போது புதிய அலுவலகங்களைத் திறந்து வைத்து, அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கியதெல்லாம் வெறும் நாடகமாகவே பார்க்கப்படுகிறது.

கால்களை இழந்தவனுக்கு விலையுயர்ந்த பாதணிகளை வழங்குவதால் எந்தப் பயனுமில்லை. ஆனால் அரசாங்கம் காலிழந்த நிலையிலுள்ள தமிழினத்துக்குத் தொடர்ந்தும் பாதணிகளை வழங்குவதையே தனது வழக்கமாக்கிக் கொண்டுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# NIRO HOLIDAY RESORT

## கதிர்காமத்தில்...

தமிழ் பேசும் மக்களுக்காக
வரவேற்பாளர்கள் முதல்
ஊழியர்கள் வரை தமிழில்

கதிர்காம யாத்ரீகர்களின் நலன்கருதி
சகல வசதிகளுடன் கூடிய அறைகள்
உங்கள் குடும்பத்தினருடன் தங்கி மகிழ









No.51, Sella Road, Kataragama. Tel: 047 2236901, 047 5701055, 0777 216263
E-mail: niroholidayresort@gmail.com www.niroholidayresort.com


Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185, Grandpass Road, Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org